# தமிழ்

## சிகரம்

### இரண்டாம் பருவம்





**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

சென்னை – 600025.

www.tamilvu.org

# தமிழ்

## சிகரம்

## இரண்டாம் பருவம்

தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600025.

**தமிழ்நாடு அரசு**

**முதல்பதிப்பு** - 2025

விலை: ரூ. 310.00


| ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்) |
|---|
| குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா? மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா? பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா? அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098 உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும் (CHILD LINE 1098 NIGHT & DAY) |
| மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா? பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா? தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா? அழையுங்கள் 14417 உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும் (14417 கல்வித் தகவல் மையம்) |


## பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

## நூல் அச்சாக்கம்

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

www.textbooksonline.tn.nic.in

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

-'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.

# தமிழ்த்தாய் வாழ்த்து - பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும் பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப்பெண்ணே! தமிழ்ப்பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன்வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 17 | செய்யுள் | கலித்தொகை | 1 |
| | உரைநடை | சங்கப்புலவர் பண்பாடு | |
| | தெரிந்துகொள்வோம் | தொகைநிலைத் தொடர்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | தொ.பரமசிவன் | |
| 18 | செய்யுள் | தமிழோவியம் (தமிழ்ப்பண்பாடு) | 13 |
| | உரைநடை | பேச்சரங்கம் - நாடுகளும் நாகரிகங்களும் | |
| | தெரிந்துகொள்வோம் | வேற்றுமைத்தொகை | |
| | கேட்டல் கருத்தறிதல் | கடிதம் | |
| 19 | செய்யுள் | நீலகேசி | 26 |
| | உரைநடை | தமிழர்களின் வானியல் அறிவு | |
| | தெரிந்துகொள்வோம் | தொகாநிலைத்தொடர் | |
| | கேட்டல் கருத்தறிதல் | பூஜ்ஜியம் (சுழி) | |
| 20 | செய்யுள் | விஞ்ஞானி | 39 |
| | உரைநடை | ஏவுகணை நாயகர் | |
| | தெரிந்துகொள்வோம் | வழுநிலை – வழாநிலை | |
| | கேட்டல் கருத்தறிதல் | இணையம்வழித் தமிழ் | |
| 21 | செய்யுள் | மணிமேகலை | 53 |
| | உரைநடை | இயற்கை மொழி ஆய்வு | |
| | தெரிந்துகொள்வோம் | வழுவமைதி | |
| | கேட்டல் கருத்தறிதல் | தமிழர் கப்பற்கலை | |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 22 | செய்யுள் | பாரத தேசம் | 66 |
| | உரைநடை | திரைக்கலை நுட்பங்கள் | |
| | தெரிந்துகொள்வோம் | புணர்ச்சி | |
| | கேட்டல் கருத்தறிதல் | நிகோலா டெஸ்லா | |
| 23 | செய்யுள் | செல்வ நிலையாமை | 79 |
| | உரைநடை | போரில் அறம் | |
| | தெரிந்துகொள்வோம் | வினை வகைகள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் | |
| 24 | செய்யுள் | குருதிக் கொடை | 90 |
| | உரைநடை | உலகளாவிய அறம் | |
| | தெரிந்துகொள்வோம் | யாப்பிலக்கணம் (எழுத்து, அசை, சீர்) | |
| | கேட்டல் கருத்தறிதல் | மணிமேகலை | |
| | மீள்பார்வை – பயிற்சிகள் | | 103 |
| 25 | செய்யுள் | ஆசாரக்கோவை | 108 |
| | உரைநடை | தமிழர் மருத்துவம் | |
| | தெரிந்துகொள்வோம் | யாப்பின் உறுப்புகள் (தளை, அடி, தொடை) | |
| | கேட்டல் கருத்தறிதல் | டாக்டர் வை. கிருஷ்ணமூர்த்தி | |
| 26 | செய்யுள் | உடல்நலம் | 119 |
| | உரைநடை | உலக மருத்துவ முறை | |
| | தெரிந்துகொள்வோம் | பா வகை அறிமுகம் | |
| | கேட்டல் கருத்தறிதல் | வாசிப்பு | |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 27 | செய்யுள் | புறநானூறு | 131 |
| | உரைநடை | இராஜேந்திர சோழன் | |
| | தெரிந்துகொள்வோம் | அணியிலக்கணம் | |
| | கேட்டல் கருத்தறிதல் | நெல் ஜெயராமன் | |
| 28 | செய்யுள் | வள்ளுவம் பத்து | 143 |
| | உரைநடை | அமர்த்தியா சென் | |
| | தெரிந்துகொள்வோம் | அணிகள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | சீனிவாச இராமானுஜன் | |
| 29 | செய்யுள் | நான்மணிக்கடிகை | 156 |
| | உரைநடை | மனிதநேயர் லேமா ராபர்ட்டா குபோவீ | |
| | தெரிந்துகொள்வோம் | குறியீடு - படிமம் - தொன்மம் | |
| | கேட்டல் கருத்தறிதல் | ஜெயலட்சுமி | |
| 30 | செய்யுள் | ஆசிய ஜோதி | 169 |
| | உரைநடை | வள்ளுவர் காட்டும் மனிதநேயம் | |
| | தெரிந்துகொள்வோம் | வேர்ச்சொல் | |
| | கேட்டல் கருத்தறிதல் | மன்னிப்பு | |
| | மீள்பார்வை – பயிற்சிகள் | | 180 |

17.1 பேசுவோம்

பாடம் 17




## கலந்துரையாடுவோம்

தமிழர்களின் பண்பாடு குறித்தும் கலைகள் குறித்தும் நீங்கள் அறிந்தவற்றை வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 17.2 படிப்போம்

### கலித்தொகை

பண்பாடு என்பது ஒரு சமூகம் மதித்துப் போற்றும் விழுமியங்களின் வெளிப்பாடு ஆகும். இதுவே ஒரு தனிமனித வாழ்வின் செயல்பாடுகளை நிர்ணயிக்கிறது. இதன் அடிப்படையில், தமிழரின் பண்பாட்டுக் கூறுகள் பிறருக்கு உதவுதல், அன்பு செலுத்துதல் முதலிய தனிமனிதப் பண்புகளையும் செயல்பாடுகளையும் வரையறுக்கின்றன. இந்தப் பாங்கினைக் கலித்தொகை பாடல் ஒன்றின் மூலம் காணலாம்.

'ஆற்றுதல்' என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;
'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
'பண்பு' எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்;
'அன்பு' எனப்படுவது தன் கிளை செறாஅமை;
'அறிவு' எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்;
'செறிவு' எனப்படுவது கூறியது மறாஅமை;
'நிறை' எனப்படுவது மறை பிறர் அறியாமை;
'முறை' எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல்;
'பொறை' எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்;

நல்லந்துவனார்
(பாடல்: 133, அடிகள்: 6-14)

### பாடல் விளக்கம்

ஆற்றுதல் என்பது இல்லாதவருக்கு உதவுதல். போற்றுதல் என்பது தம்மைச் சேர்ந்தாரை விட்டுப் பிரியாமல் இருத்தல். பண்பு என்பது 'எது பெருமைதரக்கூடியது?' என்று அறிந்து அதன்படி நடத்தல். அன்பு என்பது தன்னைச் சேர்ந்தவர்களை வெறுக்காமல் இருத்தல். அறிவு என்பது அறியாமையால் ஒருவர் பேசும் சொற்களைப் பொறுத்துக்கொள்ளுதல். செறிவு என்பது நாம் சொன்ன சொல் தவறாது நடந்துகொள்ளுதல். நிறை என்பது பிறரிடம் சொல்லாமல் மறைத்துவைக்க வேண்டிய செய்திகளைப் பாதுகாத்தல். முறை என்பது தவறு செய்தவருக்கு உரிய தண்டனையைப் பெற்றுத்தருதல். பொறை என்பது பிறர் செய்த தீமைகளைப் பொறுத்துக்கொள்ளுதல்.

### நூலைப் பற்றி

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று கலித்தொகை. கடவுள் வாழ்த்துப்பாடல் ஒன்று, அகப்பொருள் சார்ந்த பாடல்கள் 149-ஆக மொத்தம் 150 பாடல்களைக் கொண்டது இந்நூல். கலிப்பாவால் பாடப்பட்டது. இந்நூலைத் திணைக்கு ஒருவர் என ஐந்திணைகளையும் புலவர்கள் ஐவர் பாடியுள்ளனர். முதன்முதலில் இந்நூலைப் பதிப்பித்தவர் சி. வை. தாமோதரனார். இந்தப் பாடப்பகுதியில் அமைந்துள்ள பாடலின் ஆசிரியர் நல்லந்துவனார்.

## பொருள் அறிவோம்

1. செறாஅமை - வெறுக்காமல் இருத்தல்
2. நோன்றல் - பொறுத்துக்கொள்ளுதல்
3. மறாஅமை - சொன்ன சொல் தவறாமல் நடத்தல்
4. வௌவல் - தண்டித்தல்

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பண்பு எனப்படுவது

அ) தன் கிளை செறாஅமை ஆ) பாடு அறிந்து ஒழுகுதல்

இ) மறை பிறர் அறியாமை ஈ) புணர்ந்தாரைப் பிரியாமை

2. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று

அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) முல்லைப்பாட்டு

இ) கலித்தொகை ஈ) பட்டினப்பாலை

3. பொறை எனப்படுவது

அ) போற்றாரைப் பொறுத்தல் ஆ) புணர்ந்தாரைப் பிரியாமை

இ) தன் கிளை செறாஅமை ஈ) மறை பிறர் அறியாமை

4. கலித்தொகையைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை.

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

### ஆ) பொருத்துக.

1. ஆற்றுதல் - புணர்ந்தாரைப் பிரியாமை
2. போற்றுதல் - கூறியது மறாஅமை
3. அறிவு - அலந்தவர்க்கு உதவுதல்
4. செறிவு - பேதையார் சொல் நோன்றல்

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. அன்பு எனப்படுவது யாது?
2. கலித்தொகை – குறிப்பு வரைக.
3. நிறை, முறை குறித்துக் கலித்தொகை கூறுவது யாது?

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. கலித்தொகை வழியே நல்லந்துவனார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## 17.3 படிப்போம்

### சங்கப்புலவர் பண்பாடு

ஒரு சமூகம் முன்னோக்கிச் செல்வதற்கான பாதைகளை அமைத்துத் தருபவர்களாகச் சான்றோர்களும் அறிஞர்களும் திகழ்கிறார்கள். அவர்களுடைய எழுத்துகள் அவர்கள் வாழும் காலத்திலும் அவர்களுடைய வாழ்க்கைக்குப் பிறகும் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துபவையாக இருக்கின்றன. சங்கப்புலவர்களின் பாடல்களும் அப்படியானவைதான். பண்டைய காலத்தில் அந்தப் பாடல்கள் எத்தகைய உயரிய விழுமியங்களைப் பேசின என்பதைப் புறநானூற்றின் பாடல்களைக் கொண்டு நாம் அறிந்துகொள்ளலாம்.

#### பரந்த மனப்பான்மை

தமிழ்நிலம் அன்று மூன்று பெருநாடுகளாகவும் பல சிறுகுறு நிலங்களாகவும் பிரிந்து கிடந்தது. ஆனால், மொழியாலும் பண்பாட்டாலும் ஒன்றுபட்டிருந்தது. புலவர்கள் குறுகிய மனமின்றிப் பரந்த உள்ளத்தோடு மூன்று நாடுகளுக்கும் சென்றனர். பண்பு யாரிடம் இருந்தாலும் பாராட்டினர். எடுத்துக்காட்டாக, கடையெழு வள்ளல்களுள் ஒருவராகப் போற்றப்படுபவர் பாரி. இவர் ஒரு குறுநில மன்னர் ஆவார். இவருக்கும் சேரமானுக்கும் இடையே அவ்வப்போது பூசல்கள் இருந்தன. என்றாலும், பாரியின் நண்பரான கபிலர், சேரமானையும் பாராட்டியிருக்கிறார். இப்படியான பரந்த மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டாகத் தமிழ்நிலத்தில் சங்கப்புலவர்கள் பலர் வாழ்ந்திருக்கிறார்கள்.

#### தன்மான உணர்வு

புலவர்களுள் சிலரே பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். பெரும்பாலானோர் தத்தமக்கு விருப்பமான தொழில்களைச் செய்தே வாழ்க்கை நடத்தினர். பரிசில் வாழ்க்கை மேற்கொண்டோர் அவர்களுடைய தகுதிக்குக் குறைவாக நல்கினால், முகம்மாறி அளித்தால் அப்பொருளைத் துச்சமெனக் கருதி மறுத்தார்கள். அதோடு, அத்தகையோர்க்கு அறிவுறுத்தவும் செய்தார்கள். ஆர்வமின்றித் தருவதை நாங்கள் விரும்பவில்லை என்று கடியநெடுவேட்டுவனைப் பார்த்துப் பாடினார் பெருந்தலைச் சாத்தனார்; 'முற்றிய திருவின் மூவராயினும் பெட்பின்றி ஈதல் யாம் வேண்டலமே' என்றார். அதேபோல, தகுதி இல்லாதவரைப் பாடுவதும் அவர் தரும் பரிசிலை ஏற்பதும் சங்கப்புலவர்களின் இயல்பு அன்று.

#### தொண்டும் கடமை உணர்வும்

எங்கெல்லாம் துன்பம் உள்ளதோ அங்கெல்லாம் சான்றோர் தம் கடமையாற்றத் தயங்கவில்லை. புலவர்களுக்கு மன்னர்கள் பரிசில் அளித்தனர் என்பதற்காக அவர்கள் தவறு செய்தபோது பார்த்துக்கொண்டு வாளாவிருக்கவில்லை. அவர்களிடத்துச் சென்று

இடித்துரைத்துத் திருத்தினர். மன்னர்கள் தவறாக நடந்தபோதும், செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறியபோதும் அறநெறிகளை எடுத்துக்கூறி அரசியல் சிறந்து விளங்க உதவிய அறிஞர்கள்தான் சங்கப்புலவர்கள் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உள. எடுத்துக்காட்டாக, அதிகாரிகளின் சொல்லைக் கேட்டுக் குடிமக்களை வருத்தி அளவுக்கு அதிகமாக வரிபெற்றான் பாண்டியன் அறிவுடை நம்பி. அதைக் கண்ட புலவர் வருந்தினார். அவனுக்குப் புலவர் கூறும் அறிவுரை எக்காலத்து அரசுக்கும் ஏற்ற பாடமாக அமையும். 'அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே/ கோடி யாத்து நாடு பெரிது நந்தும்' என்று பாடினார். மக்களுடைய நிலையறிந்து அன்பு கெடாதவாறு வரி வாங்க வேண்டும் என்பதை நயம்பட எடுத்துரைத்த புலவர் பாராட்டுக்குரியவர்.

பண்பாட்டுக் காவலர்களாகவும் அரசியல் அறிஞர்களாகவும் நட்பும் நன்றியும் உடையவர்களாகவும் உலகுக்கு உயரிய குறிக்கோள்களைச் சுட்டிக்காட்டும் அறவோர்களாவும் இருந்தனர்; அஞ்சாமை நிறைந்த அறிஞர்களாகவும் ஆளுவோர்க்கு அறமுரைத்தவர்களாகவும் வறுமையிற் செம்மையைப் போற்றிய பெருமித வாழ்வு கொண்டவர்களாகவும் பண்டைய தமிழ்ச்சான்றோர்கள் விளங்கியுள்ளனர்.

## பொருள் அறிவோம்

1. தாக்குதல் - விளைவு
2. பிளவு - பிரிவு
3. பூசல் - சண்டை
4. பரிசில் - பரிசு
5. செம்மை - நேர்மை

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(பாண்டியன் அறிவுடை நம்பி, தமிழ்நிலம், சேரமான், பாரி, சங்கப்புலவர்களின்)

1. கடையெழு வள்ளல்களுள் ஒருவராகப் போற்றப்படுபவர் ____________.
2. தகுதி இல்லாதவரைப் பாடுவதும் அவர் தரும் பரிசிலை ஏற்பதும் ____________ இயல்பு அன்று.
3. அதிகாரிகளின் சொல்லைக் கேட்டுக் குடிமக்களை வருத்தி அளவுக்கு அதிகமாக வரிபெற்றவர் ____________.
4. பாரியின் நண்பரான கபிலர் பாராட்டியவர் ____________.
5. மொழியாலும் பண்பாட்டாலும் ____________ ஒன்றுபட்டிருந்தது.

## ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? தவறா? என்பதைக் குறிப்பிடுக.

1. புலவர்கள் குறுகிய மனமின்றிப் பரந்த உள்ளத்தோடு மூன்று நாடுகளுக்கும் சென்றனர். (சரி/தவறு)

2. கபிலருக்கும் சேரமானுக்கும் இடையே அவ்வப்போது பூசல்கள் இருந்தன. (சரி/தவறு)

3. 'முற்றிய திருவின் மூவராயினும் பெட்பின்றி ஈதல் யாம் வேண்டலமே' என்று கூறியவர் பாரி. (சரி/தவறு)

4. எங்கெல்லாம் துன்பம் உள்ளதோ அங்கெல்லாம் சான்றோர் தம் கடமையாற்றத் தயங்கவில்லை. (சரி/தவறு)

5. வறுமையிற் செம்மையைப் போற்றியவர்களாகப் பண்டைய தமிழ்ச்சான்றோர்கள் விளங்கியுள்ளனர். (சரி/தவறு)

## இ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக

1. கடையெழு =
2. குறுநிலம் =
3. எங்கெல்லாம் =
4. நிலையறிந்து =
5. மனமின்றி =

## ஈ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஒரு சமூகம் முன்னோக்கிச் செல்வதற்கான பாதைகளை அமைத்துத் தருபவர்கள் யார்?
2. சேரமானைப் பாராட்டியது யார்? அவர் யாருடைய நண்பர்?
3. சங்கப்புலவர்களின் தன்மான உணர்வு குறித்து விளக்குக.
4. அதிகாரிகளின் சொல்லைக் கேட்டுக் குடிமக்களை வருத்தி வரிபெற்ற மன்னன் யார்? அவருக்குப் புலவர் கூறிய அறிவுரை என்ன?
5. பண்டைய தமிழ்ச்சான்றோர்கள் எத்தகையவர்களாக விளங்கியுள்ளனர்?

## உ) பின்வரும் வினாவுக்கு விரிவாக விடை எழுதுக.

1. சங்கப்புலவர் பண்பாடு குறித்துப் புறநானூறு கூறும் சிறப்புகளைத் தொகுத்து எழுதுக.

## 17.4 தெரிந்துகொள்வோம்

### தொகைநிலைத்தொடர்கள்

சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது 'சொற்றொடர்' அல்லது 'தொடர்' எனப்படும்.

### தொகைநிலைத்தொடர்

இரண்டு சொற்கள் சேர்ந்து அமைகிற தொடர்களில், இரு சொற்களுக்கும் இடையில் வேற்றுமை உருபுகள், உவம உருபுகள், கால இடைநிலைகள் போன்ற இடைச்சொற்கள் மறைந்து வருமேயானால், அத்தொடர்களைத் 'தொகைநிலைத்தொடர்கள்' என்று வழங்குவர்.

1) வேற்றுமைத்தொகை

2) வினைத்தொகை

3) பண்புத்தொகை

4) உவமைத்தொகை

5) உம்மைத்தொகை

6) அன்மொழித்தொகை

### வேற்றுமைத்தொகை

வேற்றுமை உருபுகள் வெளிப்படத் தோன்றாமல் மறைந்துநின்று பொருள் உணர்த்தும் தொடர் வேற்றுமைத்தொகை எனப்படும்.

எ.கா: நண்பன் வீடு

'நண்பனின் வீடு' என்று வேற்றுமை உருபோடு நிற்க வேண்டிய தொடர், 'நண்பன் வீடு' என்று வேற்றுமை உருபு இல்லாமல் வந்துள்ளது; அதாவது வேற்றுமை உருபு 'இன்' மறைந்து வந்துள்ளது. எனவே, இது 'வேற்றுமைத்தொகை' ஆகும்.

### வினைத்தொகை

காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க, வினைப் பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து, ஒரு சொல்லைப் போல் நடப்பது வினைத்தொகை எனப்படும். வினைத்தொகையைக் காலம் கரந்த பெயரெச்சம் என்று வழங்குவர்.

எ.கா: வீசுதென்றல்

## பண்புத்தொகை

பண்புத்தொகை என்பது ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகள் மறைந்து நிற்க, பண்புப்பெயரோடு பண்பிப்பெயர் தொடர்வதாகும்.

பண்பு என்பது வண்ணம், வடிவம், அளவு, சுவை முதலியனவாகும்.

பண்பை உடையது எதுவோ அது பண்பி எனப்படும்.

எ.கா: செந்தாமரை

இங்குச் 'செம்மை' என்பது பண்புப்பெயர்

'தாமரை' என்பது பண்பிப்பெயர்

## உவமைத்தொகை

உவமைத்தொகை என்பது போல முதலிய உவமை உருபுகள் மறைந்து நிற்க, உவமானச் சொல்லோடு உவமேயச் சொல் தொடர்வதாகும்.

எ.கா: பவளவாய் (இது பவளம் போன்ற வாய் என விரியும்.)
பவளம் - உவமானம்; வாய் - உவமேயம்

## உம்மைத்தொகை

அளவுப்பொருளில் இரண்டு சொற்கள் தொடர்ந்து வர அவற்றின் இடையிலும் இறுதியிலும் உம்மையாகிய உருபு மறைந்து நிற்பது உம்மைத்தொகை எனப்படும். அளவுகள் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு ஆகும்.

எ.கா: ஒன்றேகால் (ஒன்றும் காலும் என விரியும்)

## அன்மொழித்தொகை

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத்தொடர்கள் அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருவது அன்மொழித்தொகை ஆகும்.

எ.கா: பூங்குழல் வந்தாள்

இத்தொடரில் உள்ள 'பூங்குழல்' என்னும் சொல் 'பூவை அணிந்த கூந்தல்' என்னும் பொருளைத் தரும். இதில் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகும். மேலும், 'பூங்குழல்' என்னும் சொல், 'வந்தாள்' என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்பதால் பூவை அணிந்த கூந்தலை உடைய பெண் வந்தாள் எனப் பொருள் தருகிறது. எனவே, இது வேற்றுமைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனப்படும்.

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'ஓடுகால்' இதில் வந்துள்ள தொகை

அ) உவமைத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

2. கருங்கடல்

அ) பண்புத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

3. உம்மைத்தொகை அல்லாத சொல்

அ) செடிகொடி ஆ) ஆடுமாடு இ) கொல்களிறு ஈ) இரவுபகல்

4. காலம் கரந்த பெயரெச்சம் என்பது

அ) வினையெச்சம் ஆ) வினைத்தொகை

இ) வினைமுற்று ஈ) வியங்கோள் வினைமுற்று

### ஆ) பொருத்துக.

1. உம்மைத்தொகை - பூங்கொடி வந்தாள்
2. பண்புத்தொகை - பால்நிலா
3. அன்மொழித்தொகை - வெற்றிதோல்வி
4. உவமைத்தொகை - செங்கோட்டை

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தொகைநிலைத்தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. பண்புத்தொகை என்றால் என்ன? சான்று தருக.
3. வினைத்தொகை என்றால் என்ன? சான்று தருக.
4. நாடுநகரம் இச்சொல்லில் இடம்பெறும் தொகை எது? ஏன்?
5. பின்வரும் பத்தியிலுள்ள தொகைநிலைத்தொடர்களை எடுத்தெழுதுக.

நிதி இரவு பகல் பாராது படித்தாள். அதன் விளைவாக உயர்கல்வி பயில நற்கல்லூரியில் இடம் கிடைத்தது. அதனால் தாயும் தந்தையும் மகிழ்ந்து பாராட்டினர். அவளின் மதிமுகம் மலர்ந்தது.

| வ.எண் | தொடர் | தொகை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

## 17.5 மொழியோடு விளையாடுவோம்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் ஓர் எழுத்தைச் சேர்த்துப் புதிய சொல் அமைக்க வேண்டும். எழுத்தைச் சொல்லின் முதலில், இடையில், இறுதியில் என எங்கு வேண்டுமானாலும் சேர்க்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| மகள் | மரம் | அசல் | உணவு |
| சிங்கம் | மத்து | பாசம் | மடம் |
| உப்பு | பட்டம் | தங்கு | கம்பு |

### தகவல் துளி

தமிழின் இலக்கிய வரலாறு போலவே அச்சு வரலாறும் தொன்மையானது. 1554 பிப்ரவரி 11 அன்று போர்த்துக்கீசிய நாட்டின் தலைநகரமான லிஸ்பனில் முதல் தமிழ் நூல் வெளியானது. 'தமிழ் மொழியிலும் போர்த்துக்கீசியத்திலும் அமைந்த [திருமறைச்] சிற்றேடு' என்னும் தலைப்பில் அந்த நூல் வெளியானது. தூத்துக்குடியைச் சேர்ந்த வின்சென்ட் தெ நாசரெத், ஹோர்கே கார்வாலோ, தோமா த குருசு எனும் மூவர் அந்நூலை உருவாக்கினர். இந்த நூலில் தமிழ்ச்சொற்களெல்லாம் லத்தீன் வரி வடிவத்தில் எழுதப்பட்டிருந்தன. முழுவதும் தமிழிலேயே உருவான முதல் நூல் 'தம்பிரான் வணக்கம்'. இது 1578-இல் அச்சிடப்பட்டது. ஐரோப்பிய மொழிகள் தவிர்த்துப் பிற மொழிகளில் அச்சாக்கம் பெற்ற முதல் மொழி என்னும் பெருமை தமிழுக்கு உண்டு.

## 17.6 கேட்டல் கருத்தறிதல்

### தொ.பரமசிவன்

தமிழ்ப் பேராசிரியர், தமிழ் மானுடவியலாளர், தொல்பொருள் ஆய்வாளர், எழுத்தாளர், பேச்சாளர் எனப் பன்முகம் கொண்டவர் தொ.ப. என்று அழைக்கப்படும் தொ.பரமசிவன். பண்பாட்டு ஆய்வுகளில் புதிய அணுகுமுறையைக் கடைப்பிடித்தவர் தொ.ப. நாட்டார் வழக்குகளையும் சடங்குகளையும் உயிர்ப்போடு பதிவுசெய்தவர். சிறு சடங்குகள் முதல் நீத்தார் சடங்குகள் வரை அனைத்தையும் காரண காரிய விளக்கங்களுடன் தம்முடைய படைப்புகளில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் பண்பாடு குறித்துத் தொ.பரமசிவன் அவர்களின் தற்காலத் தமிழ் உரையாடல்களில் முதன்மையான இடம் உண்டு. தமிழர் பண்பாடு குறித்த பல நுட்பமான செய்திகளைத் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளார். எளிய மக்களிடம் சிதறிக்கிடக்கும் தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேடிக் கண்டறிந்தவர் அவர்.

அடித்தள மக்களிடம் இருக்கும் பண்பாடுகளைக் காக்க வேண்டியதன் அவசியத்தைக் கூர்மையாக முன்வைத்தவர் தொ.ப. எளிமையான மொழியின் வழி நுண் அரசியலைப் புரியவைத்தவர். 'பண்பாட்டு அசைவுகள்', 'அறியப்படாத தமிழகம்', 'உரைகல்', 'தெய்வம் என்பதோர்', 'சமயங்களின் அரசியல்' போன்ற இவரது நூல்கள், தமிழர்தம் பண்பாட்டைத் தாங்கி நிற்கும் அரிய ஆவணங்களாகும்.

### வினாக்கள்

1. தொ.ப. என்று அழைக்கப்படுபவர் யார்?
2. தம்முடைய படைப்புகளில் காரணகாரியங்களுடன் தொ.ப. குறிப்பிட்டுள்ளவை யாவை?
3. தொ.ப. யாருடைய பண்பாடுகளைக் காக்க வேண்டியதன் அவசியத்தை முன்வைக்கிறார்?
4. எளிய மக்களிடம் தொ.ப. எவற்றைத் தேடிக் கண்டறிந்தார்?
5. தொ.ப. எழுதிய நூல்களுள் மூன்றைக் குறிப்பிடுக.

## 17.7 மொழிபெயர்ப்போம்

Tamil culture is rooted in the arts and ways of life of Tamil people living across the globe. Tamil culture is expressed in language, literature, arts of different forms such as music, dance, theatre, folk arts, martial arts, painting, sculpture, architecture etc.

## 17.8 அறிந்துகொள்வோம்

1. விழுமியம் - Value
2. ஆற்றுதல் - To help
3. அறிவு - Knowledge
4. பதிப்பித்தல் - Publishing
5. புலவர் - Learned persons
6. பாதை - Way
7. வறுமை - Poverty
8. தொல்பொருள் - Antique
9. சங்கம் - Learned Assemblies
10. மானுடவியலாளர் - Anthropologist
11. சடங்கு - Ritual

## 17.9 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் பாதிக்கதையைப் படித்து, மீதிக்கதையைக் கூறுக. கதைக்குப் பொருத்தமாகத் தலைப்பு ஒன்றும் தருக.**

இனியா அடிக்கடி வாசலையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய தோழிகளின் ஆரவாரம் வீடு முழுவதும் எதிரொலித்தது. சிறிதும் பெரிதுமாகப் பல வண்ண அட்டைப்பெட்டிகள். ஒவ்வொன்றிலும் ஒரு பரிசு இருந்தது. மகிழ்ச்சியுடன் பிறந்தநாளைக் கொண்டாட வேண்டிய இனியா, மிகவும் வருத்தத்துடன் காணப்பட்டாள். அவளுடைய வருத்தத்திற்கான காரணத்தை அறிய விரும்பினாள் கண்மணி. இனியாவிடமே அதைப் பற்றிக் கேட்டாள், அதற்கு அவள், "இளமதியும் இன்று வருவதாகக் கூறினாள். அவள் வரவில்லையே என்றுதான் வருந்துகிறேன்" என்றாள். அவள் கூறி முடிப்பதற்குள், அங்கு இளமதி ஓடி வந்தாள். அவளைப் பார்த்ததும் இனியாவுக்கு மகிழ்ச்சி பொங்கியது. இளமதி அவள் கைகளைக் குலுக்கி, இனியாவிற்குப் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தாள். இளமதி வெறுங்கையுடன் வந்திருப்பதை மற்ற தோழிகள் எல்லோரும் பார்த்தனர். தங்களுக்குள் கூடிக் கூடிப் பேசினர். மற்றவர்கள் தன்னைப் பார்ப்பதைப் புரிந்துகொண்ட இளமதி தலைகுனிந்தாள். இனியா தோழிகளின் செயலைக் கண்டாள். அப்போது......

## 17.10 செயல் திட்டம்

ஏதேனும் ஒரு திருக்குறளை அடிப்படையாக வைத்துக் கதை ஒன்றை எழுதி வருக.

பாடம் 18

## 18.1 பேசுவோம்

| | தொடர்கள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1 | மனிதனின் நாகரிக வளர்ச்சியே பண்பாடு. | | |
| 2 | பண்பாடு என்பது வாழ்வின் வழிமுறை. | | |
| 3 | ஒரு பண்பாட்டில் பல நூறு ஆண்டுகளின் வாழ்வியல் செயல்முறை பொதிந்துள்ளது. | | |
| 4 | பண்பாட்டை உருவாக்குவதில் வாழ்வியல் சூழல் முக்கியப் பங்கு வகிக்கிறது. | | |
| 5 | என் நாட்டிலுள்ள சில பண்பாட்டுக் கூறுகள் மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டவை. | | |
| 6 | மொழி ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சியை உறுதி செய்கிறது. | | |
| 7 | நான் பேசும் மொழியின் மூலம் என்னுடைய பண்பாடு வெளிப்படுகிறது. | | |
| 8 | என் பண்பாட்டைக் கடைப்பிடிக்க நான் முயல வேண்டும். | | |

## கலந்துரையாடுவோம்

பண்பாடு சார்ந்து மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகள் குறித்து வகுப்பு ஆசிரியருடனும் நண்பர்களுடனும் கலந்துரையாடுக.

## 18.2 படிப்போம்

### தமிழோவியம்
### (தமிழ்ப்பண்பாடு)

தனி மனிதரின் நடத்தைக்கும் சமூகத்தின் நடத்தைக்கும் பெரிதும் அடிப்படையாக இருப்பது பண்பாடு. மக்கள் தாம் வாழும் சமூகத்தை மையமாக வைத்தே பண்பாட்டை அமைத்துக் கொள்கின்றனர். கவிஞர்களும் தங்கள் கவிதைகளின் வழியே தம் மண்ணின் பண்பாட்டை வெளிப்படுத்தத் தவறுவதில்லை. அவ்வாறான கவிதைகள் சமூகத்தின் பழக்கவழக்கங்களையும் சூழலையும் புரிந்துகொள்ளப் பெரிதும் துணை நிற்கின்றன.

தமிழ்ப் பண்பாடு
தமிழ்ப் பண்பாடு
தலை சிறந் தெனத்
தமிழ்ப் பண்பாடு...

வாசலில் போடும் கோலத்திலும் - அவர்
மனத்தின் அழகியல் தத்துவங்கள்
பூசும் சந்தனக் கலவையிலும் - நன்கு
பொங்கும் அனுபவ முத்திரைகள்...

-தமிழ்ப் பண்பாடு

பருவம் தெறிக்கும் பார்வையிலே - காதல்
பயிரின் விதைவிழும் ஒருநாளில்
உருவும் வாளுறை சூல்கொண்டே - புகழ்
ஒத்திகை பெறுமதன் முதல்நாளில்...

-தமிழ்ப் பண்பாடு

ஒருவன் ஒருத்தியாய் இல்லறமாம் - அதில்
ஒப்புர வாயிரம் சத்தியமாம்
விருந்து வருகிற பொழுதுகளை - புது
வெற்றிலை பாக்கு சிவப்பாக்கும்...

- தமிழ்ப் பண்பாடு

மானம் பெரிதென வாழ்ந்திடுவான் - பழி
வந்துடல் மொய்க்கவும் சம்மதியான்!
தானம் என்பவர் கைகளிலே – அவன்
தன்னையே தருவான் நிம்மதியாய்!

- ஈரோடு தமிழன்பன்

## பாடலின் பொருள்

தலைசிறந்தது தமிழ்ப் பண்பாடு. வாசலில் போடும் கோலத்தில் அவருடைய மனத்திலுள்ள அழகுணர்வு தொடர்பான தத்துவங்கள் வெளிப்படும். பூசும் சந்தனக் கலவையில் அவருடைய அனுபவ அறிவு வெளிப்படும். இவற்றில் தமிழ்ப் பண்பாடு நிறைந்திருக்கிறது. பருவத்தில் காதல் முளைக்கும்போதும் வாளைக் கையிலேந்திப் புகழ்பெறும் நாளுக்கான ஒத்திகை பார்க்கும்போதும் தமிழ்ப் பண்பாட்டைப் போற்று. ஒருவனுக்கு ஒருத்தி என்றதன் அடிப்படையில் இல்லற வாழ்க்கையைத் தமிழர்கள் அமைத்துக்கொள்கிறார்கள். விருந்து நாள்களில் வெற்றிலைபாக்கு சாப்பிடுவதைத் தமிழர்கள் வழக்கமாக வைத்திருக்கிறார்கள். இவற்றில் தமிழ்ப் பண்பாடு நிறைந்திருக்கிறது. உயிரைவிட மானம் பெரிதென வாழக்கூடியவர்கள் தமிழர்கள். தன் மீது யாரும் பழி சுமத்திவிடக் கூடாது என்று தீர்மானமாக இருப்பவர்கள். தானம் என்றால் தன்னையே தரக்கூடிய அளவுக்குத் தானத்தில் சிறந்திருப்பவர்கள். இவற்றிலும் நிறைந்திருக்கிறது தமிழ்ப் பண்பாடு.

## நூலைப் பற்றி

ஈரோடு தமிழன்பன் எழுதிய 'தமிழோவியம்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது இந்தக் கவிதை. ஈரோடு தமிழன்பன் ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதைகளைப் படைத்துள்ளார். 'சிலிர்ப்புகள்', 'தோணிகள் வருகின்றன', 'ஊமை வெயில்', 'விடியல் விழுதுகள்' போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய 'வணக்கம் வள்ளுவ!' என்னும் கவிதை நூலுக்கு சாகித்ய அகாதமி விருது கிடைத்துள்ளது. இவரது 'தமிழன்பன் கவிதைகள்' என்னும் தொகுப்பு நூல் தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது.

## பொருள் அறிவோம்

1. ஒப்புரவு - உதவுதல்
2. விருந்து - புதிது
3. பண் - இசை
4. பீடு - வலிமை / பெருமை
5. தானம் - கொடை / அறச்செயல்
6. தொகுத்தல் - சேர்த்தல்
7. ஒத்திகை - செய்துபார்த்தல்
8. தீர்மானம் - முடிவு

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(வணக்கம் வள்ளுவ, பழி, பண்பாடு, வெற்றிலைபாக்கு, தமிழோவியம்)

1. தனிமனிதரின் நடத்தைக்கும் சமூகத்தின் நடத்தைக்கும் அடிப்படையாக இருப்பது __________________.
2. விருந்து வருகிற பொழுதுகளைப் புது __________________ சிவப்பாக்கும்!
3. 'தமிழ்ப் பண்பாடு' என்னும் கவிதை __________________ நூலில் இடம்பெற்றுள்ளது.
4. ஈரோடு தமிழன்பன் எழுதிய __________________ என்னும் கவிதை நூலுக்குச் சாகித்ய அகாதமி விருது கிடைத்தது.
5. மானம் பெரிதென வாழ்ந்திடுவான் - __________________ வந்துடல் மொய்க்கவும் சம்மதியான்!

### ஆ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. தமிழர்களின் பண்பாடு தலைசிறந்தது. (சரி/தவறு)
2. விருந்து நாள்களில் தமிழர்கள் வெற்றிலைபாக்கு சாப்பிடுவது இல்லை. (சரி/தவறு)
3. தானம் என்று வந்துவிட்டால் தன்னையே தரக்கூடிய அளவுக்குத் தானத்தில் சிறந்தவர்கள் தமிழர்கள். (சரி/தவறு)
4. ஈரோடு தமிழன்பன் எழுதிய நூல்களுள் ஒன்று 'சிலிர்ப்புகள்'. (சரி/தவறு)
5. வாசலில் போடும் கோலத்தில் தமிழர்களின் மனத்திலுள்ள அழகியல் தத்துவங்கள் வெளிப்படுவது இல்லை. (சரி/தவறு)

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.


1. கவிஞர்கள் எவற்றின் வழியே மண்ணின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றனர்?
2. ஈரோடு தமிழன்பன் எந்தெந்த வடிவங்களில் கவிதைகளைப் படைத்துள்ளார்?
3. தானம் குறித்துப் பாடலாசிரியர் கூறும் கருத்தை எழுதுக.
4. ஈரோடு தமிழன்பன் எழுதிய நூல்களுள் நான்கன் பெயர்களைக் குறிப்பிடுக.
5. ஈரோடு தமிழன்பனின் எந்த நூலுக்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது?

### இ) பின்வரும் வினாவுக்கு விரிவாக விடை எழுதுக.

1. தமிழ்ப் பண்பாடு குறித்த ஈரோடு தமிழன்பனின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## 18.3 படிப்போம்

### பேச்சரங்கம்
### நாடுகளும் நாகரிகங்களும்



**நடுவர் :** அனைவருக்கும் வணக்கம்! மக்களின் பழக்கவழக்கங்கள், நாகரிகம் ஆகியன அவர்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. உணவு, உடை, விளையாட்டு, இசை முதலியவற்றில் உலக அளவில் பொதுவான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. எனினும், சில தனித்த பண்பாடுகளும் உலகளவில் சிறந்து விளங்குகின்றன. பரந்த உலகில் வாழும் மக்களின் பண்பாட்டுச் சிறப்பினை முதலில் பேச வருகிறார் செல்வன்.

**செல்வன் :** நடுவர் உள்ளிட்ட அனைவருக்கும் முதற்கண் வணக்கம்! உலகின் தலைசிறந்த பண்பாடுகளைப் பின்பற்றி வரும் நாடுகளுள் ஒன்று தென்கொரியா. தென்கொரிய மக்கள் உணவகத்திற்குச் சென்றால்கூட உணவு தயாராகி வரும்வரை தங்கள் நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிடுகிறார்கள். அங்குள்ள உணவகங்களில் சிறு நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்போது தங்களுக்குப் பிடித்த நூல்களைத் தேர்ந்தெடுத்து வாசிக்கிறார்கள். சிறுசிறு தேநீர்க் கடைகளிலும் இந்த நடைமுறையைப் பின்பற்றுகிறார்கள். நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தும் இந்தப் பழக்கம் தென்கொரியாவின் சிறந்த பண்பாடுகளுள் ஒன்றாக

உள்ளது. நல்லதொரு கருத்தைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**நடுவர்** : தென்கொரியப் பண்பாட்டை மிகத் தெளிவாக எடுத்தரைத்த செல்வனுக்கு நன்றி. அடுத்ததாக எகிப்து நாட்டின் ஏற்றமிகு பண்பாட்டைப் பேச வருகிறார் நளினி.

**நளினி** : வணக்கம் நண்பர்களே! உலகின் தலைசிறந்த பண்பாட்டைக் கொண்ட எகிப்து நாட்டைப் பற்றி உங்களிடம் பேசுவதில் மகிழ்ச்சி. அங்கே ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பொருளாதாரச் சுதந்திரம், கல்விகளிலும் வேலைவாய்ப்புகளிலும் சம உரிமை பெற்றிருந்தனர். வேளாண்மையில் எகிப்தியர்கள் சிறந்து விளங்கினர். உலகிலேயே முதன்முதலாக எகிப்தில்தான் ரொட்டி தயாரிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. எகிப்தியர்களின் முக்கியமான உணவுப்பொருள் இது. பிளாக்ஸ் செடியின் தண்டிலிருந்து எடுத்த லினன் என்ற நூலிலிருந்து ஆடை தயாரித்து அணிந்திருந்தார்கள். நைல் நதியில் கிடைத்த களிமண்ணுடன் வைக்கோல் சேர்த்துப் பொருள்கள் தயாரித்தார்கள். தங்கத்தால் ஆன அணிகலன்களை ஆண்களும் பெண்களும் விரும்பி அணிந்தனர். தாங்கள் அணியும் அணிகலன்களில் பல வண்ணங்களில் ஒளிவிடும் டாக்வா கற்களைப் பயன்படுத்தினர். பழமையான எகிப்திய நாகரிகத்தைப் பற்றிப் பேச வாய்ப்பளித்த நடுவர் அவர்களுக்கு நன்றி.

**நடுவர்** : நளினியின் கருத்துகள் மிகச் சிறப்பானவை. அடுத்ததாக, சுவிட்சர்லாந்து நாட்டின் பண்பாட்டைச் சுவையாக எடுத்துரைக்க வருகிறார் மகிழினி.

**மகிழினி** : நடுவர் அவர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் வணக்கம்! இசையில் ஆர்வம் கொண்ட நாடு சுவிட்சர்லாந்து. இங்கு அதிகமான இசைப் பள்ளிகள் உள்ளன. பண்பாட்டோடு தொடர்புடைய நாடோடிப் பாடல்களை இங்கு வாழும் மக்கள் விரும்பிப் பாடுகின்றனர். இசையின் மீது இவர்கள் கொண்டுள்ள ஆர்வம் சிறப்புடையதாக இருக்கிறது. இசையைப் போலவே விளையாட்டிற்கும் முக்கியத்துவம் அளிக்கும் சுவிட்சர்லாந்து மக்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை உடற்பயிற்சித் திருவிழாவை நடத்துகின்றனர். இந்தத் திருவிழா நடைபெறும்போது வீரர்கள் மீது மலர் தூவி அவர்களை ஊக்கப்படுத்துகின்றனர். உலகின் அழகான நாடுகளுள் ஒன்றான சுவிட்சர்லாந்தைப் பற்றிய சுவையான செய்திகளை உங்கள் முன் எடுத்துவைத்துள்ளேன். என் பேச்சைக் கேட்க உங்கள் பொன்னான நேரத்தைத் தந்தமைக்கு நன்றி.

**நடுவர்** : மகிழினியின் பேச்சு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. அடுத்து, பேச்சாளர் முகில் இந்திய நாட்டின் பண்பாடு பற்றிப் பேச வருகிறார்.

**முகில்** : அனைவருக்கும் வணக்கம்! இந்தியா பல மொழிகளும் பண்பாடுகளும் நிறைந்த நாடு. மிகப்பழமையான பண்பாட்டைக் கொண்ட இந்நாட்டின் கேரள மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்தில் கடைப்பிடிக்கப்படும் நிகழ்வைச் சான்றாகக் கூறுகிறேன். கேரள மாநிலத்தின் பெரும்குளம் கிராமத்தில் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்திடப் புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்கின்றனர். கிராமத்தின் தெருக்களில் ஆங்காங்கே கூடுகள் போன்று மரத்தால் செய்யப்பட்ட அலமாரிகள் வைக்கப்பட்டுள்ளன. இதில் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கும். கிராம மக்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை அங்கிருந்து எடுத்துக்கொள்கின்றனர். படித்து முடித்ததும் மீண்டும் புத்தகத்தை அங்கேயே வைத்துவிடுகின்றனர். இக்கிராமத்தைப் புத்தகக் கிராமம் என்று அழைக்கின்றனர். மலையாளத்தில் 'புஸ்தகக்கூடு' என்று அழைக்கப்படும். இந்தச் சேவையைப் பெரும்குளம் கிராமத்தினர் இலவசமாக வழங்குகின்றனர். வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தும் இம்முயற்சி சிறந்ததொரு பண்பாடு. இது போன்றே இந்தியாவில் பரந்துபட்ட பல்வேறு பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் பின்பற்றப்படுகின்றன. சிறந்ததொரு வாய்ப்பை நல்கிய நடுவர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**நடுவர்** : உலக நாடுகள் வெவ்வேறு விதமான பண்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. இன்றைய பேச்சரங்கில் சிறந்த பண்பாடுகளைப் போற்றும் நாடுகள் பற்றிப் பேசினார்கள். அருமையான கருத்துகளை முன்வைத்த பேச்சாளர்கள் அனைவருக்கும் நன்றி. ஒவ்வொரு நாடும் நிலம், சூழல், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டைப் பின்பற்றுகிறது. அத்தகைய பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டே அந்நாடுகளை அடையாளம் காணலாம்.

## பொருள் அறிவோம்

1. உரைத்தல் - சொல்லுதல்
2. ஆர்வம் - விருப்பம்
3. நிகழ்வு - நடைபெறும் செயல்
4. வாசிப்பு - படித்தல்
5. நல்கிய - கொடுத்த

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'புத்தகக் கிராமம்' என அழைக்கப்படும் கிராமம் எது?

   அ) எர்ணாகுளம் ஆ) பெரும்குளம் இ) கொல்லம் ஈ) திருவனந்தபுரம்

2. தென்கொரிய நாட்டின் எந்தக் கடைகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன?

   அ) துணிக்கடை ஆ) தேநீர்க்கடை இ) கணினிக்கடை ஈ) காய்கறிக்கடை

3. இசைப்பள்ளிகள் அதிகமாக உள்ள நாடு எது?

   அ) சுவிட்சர்லாந்து ஆ) தென்கொரியா இ) அமெரிக்கா ஈ) இந்தியா

4. எகிப்தியர்கள் நைல் நதியில் கிடைத்த களிமண்ணுடன் எதைச் சேர்த்துப் பொருள்கள் தயாரித்தார்கள்.

   அ) வைக்கோல் ஆ) செம்மண் இ) சுடுமண் ஈ) மெழுகு

### ஆ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. சுவிட்சர்லாந்து மக்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை உடற்பயிற்சித் திருவிழாவை நடத்துகின்றனர். (சரி/தவறு)
2. உலகிலேயே முதன்முதலாக எகிப்தில்தான் ரொட்டி தயாரிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. (சரி/தவறு)
3. மக்களின் பழக்கவழக்கங்கள், நாகரிகம் ஆகியன அவர்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. (சரி/தவறு)
4. எகிப்தியர்கள் பிளாக்ஸ் செடியின் தண்டிலிருந்து எடுத்த டாக்வா என்ற நூலிலிருந்து ஆடை தயாரித்து அணிந்திருந்தார்கள். (சரி/தவறு)
5. இந்தியா பல மொழிகளும் பண்பாடுகளும் நிறைந்த நாடு. (சரி/தவறு)

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கொரிய உணவகங்களில் உள்ள நூலகங்களின் பயன்பாடு பற்றி எழுதுக.
2. உடற்பயிற்சித் திருவிழா பற்றி எழுதுக.
3. கேரள மாநிலத்தின் பெரும்குளம் கிராமத்தில் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்திய விதம் குறித்து விளக்குக.
4. எகிப்தியர்கள் எந்தத் துறையில் சிறந்து விளங்கினர்?
5. சுவிட்சர்லாந்து மக்கள் எத்தகைய பாடல்களை விரும்பிப் பாடுகின்றனர்?

### ஈ) பின்வரும் வினாவுக்கு விரிவாக விடை எழுதுக.

1. உலகப்பண்பாடு குறித்துக் கூறப்பட்டிருக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

## 18.4 தெரிந்துகொள்வோம்

### வேற்றுமைத்தொகை

**உணவு உண்டான்**

இத்தொடர் உணவை உண்டான் என விரிந்து பொருள் தருகிறது. இரு சொற்களுக்கு இடையில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வரவில்லை. மறைந்து வந்துள்ளது.

இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், கு, இன், அது, கண்) மறைந்து வந்து பொருள் உணர்த்துவது வேற்றுமைத்தொகை எனப்படும்.

இது, வேற்றுமை உருபு மட்டும் மறைந்து வருதல், வேற்றுமை உருபும் பயனும் சேர்ந்து மறைந்துவருதல் என இரண்டு வகைப்படும்.

| வேற்றுமை | வேற்றுமை உருபு | வேற்றுமைத் தொகை | வேற்றுமை விரி | உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
|---|---|---|---|---|
| முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை) | உருபுகள் இல்லை | - | செடி வளர்ந்தது (செடி -எழுவாய்) | - |
| இரண்டாம் வேற்றுமை | ஐ | பால் குடித்தான் | பாலைக் குடித்தான் | பால் குடம் (பாலை உடைய குடம்) |
| மூன்றாம் வேற்றுமை | ஆல், ஆன், ஒடு, ஓடு | தலை வணங்கினான் | தலையால் வணங்கினான் | பொன் வளையல் (பொன்னால் செய்த வளையல்) |
| நான்காம் வேற்றுமை | கு | என் மகள் | எனக்கு மகள் | குழந்தைப் பால் (குழந்தைக்குக் கொடுக்கும் பால்) |
| ஐந்தாம் வேற்றுமை | இன், இல் | ஊர் நீங்கினான் | ஊரின் நீங்கினான் | மலை அருவி (மலையில் இருந்து வரும் நீர்) |
| ஆறாம் வேற்றுமை | அது, ஆது | நண்பன் வீடு | நண்பனது வீடு | வருவதில்லை |
| ஏழாம் வேற்றுமை | கண் | மலைக் கோயில் | மலைக்கண் கோயில் | தண்ணீர்ப் பாம்பு (தண்ணீர்க்கண் வாழும் பாம்பு) |
| எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை) | உருபுகள் இல்லை. | - | - கந்தா வா. | - |

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வெற்றிலை உண்டான் இத்தொடரில்

அ) இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வரவில்லை.

ஆ) இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்துள்ளது.

இ) மூன்றாம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வரவில்லை.

ஈ) மூன்றாம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்துள்ளது

2. கூற்று : முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை.
காரணம் : முதல் வேற்றுமைக்கு விளி வேற்றுமை என்று பெயர்.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் தவறு

இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்றும் சரி, காரணமும் சரி

3. பொற்குடம் என்பது

அ) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

ஆ) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

இ) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

ஈ) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வேற்றுமைத்தொகை என்றால் என்ன?
2. வேற்றுமைத்தொகை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. இரண்டாம் வேற்றுமைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.
4. ஆறாம் வேற்றுமைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.
5. பின்வரும் பத்தியிலுள்ள வேற்றுமைத்தொகை / வேற்றுமை விரித்தொடர்களை எடுத்தெழுதுக.

மாறன் பள்ளி செல்லும் நேரத்தில் மழை பெய்ததால், குடை எடுத்துச் சென்றான். செல்லும் வழியில் கிடந்த மாங்கொட்டையைச் சாலை ஓரமாக நட்டு வைத்தான். இதனைத் தன் நண்பர்களிடம் கூறினான். நண்பர்கள் மாலை பள்ளி விட்டு வீட்டுக்குச் செல்லும்போது மீதம் உள்ள குடிநீரை மாஞ்செடிக்கு ஊற்றினர். செடி நன்கு வளர்ந்தது.

| வேற்றுமைத்தொகை | வேற்றுமை விரி |
|---|---|
| | |
| | |
| | |

## 18.5 கருத்து விளக்கப்படம்




### வினாக்கள்

1. கலைநிகழ்ச்சிகள் எந்த நாளை முன்னிட்டு நடைபெறுகின்றன?
2. கலைநிகழ்ச்சிகளை நடத்துபவர் யார்?
3. கலைநிகழ்ச்சிகள் எந்தெந்த நாள்களில் நடைபெறுகின்றன?
4. என்னென்ன கலைநிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன?
5. கலைநிகழ்ச்சிகள் எங்கு நடைபெறுகின்றன? யார் யார் பங்கேற்கலாம்?

### தகவல் துளி

ஆடி மாதம் 18ஆம் நாளன்று 'ஆடிப்பெருக்கு' விழா கொண்டாடப்படுகிறது. இது இயற்கையை வணங்கும் தமிழர்தம் பண்பாட்டு விழா. 'ஆடிப்பெருக்கு விழா' என்பது தமிழர்களின் நீர் வழிபாட்டு விழா ஆகும். தமிழ்நாட்டில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக, காவிரி ஆற்றுப் பகுதிகளில் கொண்டாடப்படுகிறது. ஆடிப்பெருக்கு விழாவைப் 'புதுப்புனல் விழா' எனத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. ஆடிப்பெருக்கு நாளன்று அதிகாலையிலேயே மக்கள் புத்தாடை அணிந்து ஆற்றங்கரைகளுக்குச் செல்வர். அங்கே தம் வாழ்வின் ஆதாரமாக உள்ள ஆற்றில் மலர் தூவியும் விளக்கேற்றியும் வழிபடுவர். தாம் கொண்டு செல்லும் காப்பரிசியை (அரிசி, வெல்லம், எள், தேங்காய் ஆகியவற்றின் கலவை) பிறரோடு பகிர்ந்துண்டு மகிழ்வர்.

## 18.6 கேட்டல் கருத்தறிதல்

**கீழ்க்காணும் கடிதத்தைப் படித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

**தாத்தா, பாட்டியின் 60ஆம் ஆண்டுத் திருமண விழா நடைபெற்றது. அதில் பங்கேற்ற ஓவியா தன் அத்தைக்கு அனுப்பும் மின்னஞ்சல்.**

21-06-2023

சென்னை 25, இந்தியா.

அன்புள்ள அத்தைக்கு,

ஓவியா எழுதுவது, இங்கு அனைவரும் நலம். உங்களின் நலமறிய ஆவல். நீங்கள் தாத்தா, பாட்டியின் 60ஆம் ஆண்டுத் திருமண விழாவிற்கு ஏன் வரவில்லை? நம் குடும்ப உறவினர் அனைவரும் கலந்துகொண்டனர். உங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தோம். இந்நிகழ்வு நம் உறவுகள் ஒன்றிணைய நல்வாய்ப்பாய் அமைந்தது. திருமணத்திற்கு முதல் நாளன்று நான், அக்கா, தம்பி, தங்கைகள் அனைவரும் வீட்டை அலங்கரித்தோம். கொள்ளுத்தாத்தா, கொள்ளுப்பாட்டி இருவரும் இத்திருமண விழாவிற்குத் தலைமை ஏற்றனர். இல்வாழ்க்கை அதிகாரத் திருக்குறள் வாசிப்புடன் திருமண நிகழ்வு தொடங்கியது. மணமக்களான தாத்தா பாட்டிக்கு அனைவரும் திருமணப் பரிசுகளை வழங்கினர். திருமண விழாவில் பங்கேற்றவர்களை 16 செல்வங்களும் பெற்று வாழுமாறு தாத்தாவும் பாட்டியும் வாழ்த்தினர். பின்னர் நடைபெற்ற விருந்தில் தமிழ்நாட்டு உணவு வகைகள் வாழையிலையில் பரிமாறப்பட்டன. திருமணத்திற்கு வருகை புரிந்தோருக்கு நன்றி கூறி, திருக்குறள் நூல் பரிசாக வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழிசை நிகழ்ச்சி நடைபெற்றது. தாத்தாவும் பாட்டியும் தங்களது 60ஆம் ஆண்டுத் திருமண நிகழ்வில், 60 மரக்கன்றுகளை நட்டனர். உறவுகளோடு ஒன்றுகூடி இருப்பதே பெருமகிழ்வுதான். இத்திருமணவிழாவால் நம் குடும்ப உறவுகளின் அன்பையும் அருமையையும் உணர முடிந்தது. அடுத்த முறை நம் குடும்ப விழாவில் தவறாது கலந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். நன்றி அத்தை.

பாசமுள்ள ஓவியா.

### வினாக்கள்

1. தாத்தா, பாட்டியின் எத்தனையாவது திருமண விழா கொண்டாடப்பட்டது?
2. எது பெருமகிழ்வு என ஓவியா கருதுகிறாள்?
3. விழாவிற்குத் தலைமை ஏற்றவர்கள் யாவர்?
4. திருமண விழாவின் தொடக்கமாகத் திருக்குறளின் எந்த அதிகாரம் வாசிக்கப்பட்டது?
5. திருமண விழாவில் தாத்தாவும் பாட்டியும் எத்தனை மரக்கன்றுகளை நட்டனர்?

## 18.7 மொழிபெயர்ப்போம்

ஒவ்வொரு பண்டைய நாகரிகத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. அதைச் சார்ந்த மக்கள் பேசும் மொழி, அணியும் ஆடை, உண்ணும் உணவு, வாழும் முறை, செய்யும் பணி, எண்ணங்கள் ஆகியவற்றின் வழி அவர்களின் பண்பாடு வெளிப்படுகிறது.

______________________________________________

______________________________________________

______________________________________________

## 18.8 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | சூழல் | – | Situation |
| 2. | கலவை | – | Mixture |
| 3. | முத்திரை | – | Stamp |
| 4. | பார்வை | – | Glance |
| 5. | மானம் | – | Dignity |
| 6. | தானம் | – | Donation |
| 7. | நிம்மதி | – | Peace |
| 8. | ரொட்டி | – | Bread |
| 9. | களிமண் | – | Clay |
| 10. | நாடோடிப் பாடல் | – | Folk Song |
| 11. | உடற்பயிற்சி | – | Exercise |
| 12. | ஊக்கம் | – | Motivation |
| 13. | மரக்கன்று | – | Sapling |

## 18.9 உயர்நிலைத்திறன்

உங்கள் பகுதியில் நடைபெற்ற திருவிழாக்களை அடிப்படையாகக் கொண்டு (அடைமொழி / உவமை / இணைமொழி) இவற்றைப் பயன்படுத்தித் தொடர்கள் உருவாக்குக.

## 18.10 செயல் திட்டம்

எவையேனும் இரு நாட்டின் பண்பாட்டுக் கூறுகளை (விருந்தோம்பல், உடை, உறைவிடம், அணிகலன், பெரியோரை மதிக்கும் பண்பு போன்றவை) ஒப்பிட்டு, படத்தொகுப்பேடு உருவாக்குக.

## பாடம் 19

### 19.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

அறிவியல் சிந்தனைகளால் உலகில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 19.2 படிப்போம்

### நீலகேசி

மனித வாழ்க்கை முறையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி, தொடர்ந்து புதுமைகள் படைத்துவருகிறது அறிவியல். அறிவியலும் தொழில்நுட்பமும் இன்று மிகப்பெரும் வளர்ச்சியை எட்டியுள்ளன. இத்தகைய நவீன அறிவியல் சிந்தனைகளின் வெளிப்பாடுகளை, தமிழர்தம் பண்டைய இலக்கியங்களிலேயே காணலாம். இவை அறிவியல் சிந்தனைகளில் தமிழர்கள் கொண்டிருந்த திறனை வெளிக்காட்டுகின்றன. ஒலி, ஒளி பற்றிய அறிவியல் சிந்தனைகளை ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றான நீலகேசி எவ்வாறு விளக்குகிறது என்று பார்க்கலாம்.

உற்றிலவாய் ஒலி கொள்ளும் செவிஎன ஓதுகின்றாய்
கற்றிலை மெய்ம்மை நீ கட்புலம் தன்னோடு ஓர் காலத்தினால்
பெற்றிலம் நாம் அதன் பின் கொளல் தானும் பெரும் தவத்தாய்
மற்று இது தான்தன் பொறி உறுகாறும் வரலின் அன்றே.

(பாடல் : 516)

வாய்த்துரை ஈதுஎன வாமன் இது சொல்லும் வந்துஉறுமேல்
சேய்த்து எனக் கோடலும் சேராது ஒலி செவிக்கண்ணது எனின்
ஈத்தனதாம்அல வாயினும் நீசொல்லும் உற்று அறிவின்
தீத்தனைப் போலவும் தேறு என்று அவனைத் தெருட்டினளே.

(பாடல் : 517)

### பாடலின் பொருள்

பெருந்தவத்தை உடையவரே! காதுகள் ஒலியைக் கவரும் என்கிறாய். காதுகளால் ஒலியைக் கவர இயலாது. ஒரே நேரத்தில் தோன்றுகின்ற ஒளி, ஒலியை நாம் ஒருசேரப் பெறுவதில்லை. ஒளியை முன்னரே காண்கிறோம். அதன் பின்னரே ஒலியைக் கேட்கிறோம். எனவே, ஒலியே செவியை வந்தடைகிறது. செவி ஒலியை அடைவதில்லை.

ஒலியானது வெளியிலிருந்து வந்து காதுகளை அடைகிறது. ஒலி உள்ளே தோன்றுவது கிடையாது. ஒலியைக் காதுகள் ஈர்ப்பது இல்லை; உணர்கின்றன. நம் புலன்கள் உணர்வுடையவை. தீயின் வெப்பத்தை உடல் உணர்கிறது. அதைப் போன்று புலனறிவின் மூலம் காதும் ஒலியை உணர்கிறது.

### நூலைப் பற்றி

நீலகேசி என்பது ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று. நீலகேசித் திரட்டு என்றும் இதை அழைப்பர். இது விருத்தப்பாக்களால் ஆனது. குண்டலகேசி என்னும் நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்டது இது. நீலகேசி என்னும் சமண சமயப் பெண், பல சமயத் தலைவர்களிடம் வாதம் செய்து, சமண நெறியை நிலைநாட்டுவதாக இந்நூல் கூறுகிறது. தமிழில் எழுதப்பட்ட முதலாவது தருக்க நூல் இதுவெனக் கூறப்படுகிறது. இந்நூலை எழுதியவர் யார் என அறியப்படவில்லை. இதன் உரையாசிரியர் சமய திவாகர வாமன முனிவர்.

## பொருள் அறிவோம்

1. செவி - காது
2. கற்றிலை – அறியவில்லை
3. பெருந்தவத்தாய் - பெரிய தவமுடையவரே
4. வாய்த்துரை - பொருத்தமான உரை
5. தேறு - தெளிவு

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எந்த நூலுக்கு மறுப்பாக நீலகேசி எழுதப்பட்டது?

அ) சூளாமணி ஆ) குண்டலகேசி இ) சிலப்பதிகாரம் ஈ) வளையாபதி

2. செவி என்பதன் பொருள் என்ன?

அ) மூக்கு ஆ) கண் இ) காது ஈ) வாய்

3. ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்று.

அ) குண்டலகேசி ஆ) மணிமேகலை இ) நீலகேசி ஈ) சீவக சிந்தாமணி

4. நீலகேசி எந்தப் பாவகையால் ஆனது?

அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா இ) விருத்தப்பா ஈ) கலிப்பா

5. நீலகேசி நூலின் உரையாசிரியர் யார்?

அ) சமய திவாகர வாமன முனிவர் ஆ) அடியார்க்கு நல்லார்

இ) பரிமேலழகர் ஈ) உ.வே.சாமிநாதர்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. நீலகேசி - குறிப்பு வரைக.
2. ஒலி, ஒளி குறித்து நீலகேசி கூறும் கருத்தை எழுதுக.
3. கற்றிலை, தேறு என்னும் சொற்களின் பொருள்களைத் தருக.
4. தமிழில் எழுதப்பட்ட முதலாவது தருக்க நூல் எது?
5. நீலகேசிப் பாடல்கள் எடுத்துரைக்கும் அறிவியல் சிந்தனைகள் எவை?

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. நீலகேசி கூறும் அறிவியல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## 19.3 படிப்போம்

### தமிழர்களின் வானியல் அறிவு

தமிழ் இலக்கியங்கள் மக்களுக்கு அறத்தை மட்டுமல்ல, அறிவியலையும் கற்றுக்கொடுத்தன. பண்டைத் தமிழர்கள் அறிவியல் துறையில் பெரும்புலமை பெற்றிருந்தனர் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் உணர்த்துகின்றன. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், திருமந்திரம், திருவாசகம் முதலிய நூல்களின் மூலம் பழந்தமிழர்கள் அறிந்திருந்த அறிவியல் நுணுக்கங்களை நாம் அறிந்துகொள்ள முடியும். சில எடுத்துக்காட்டுகளை இங்கே காண்போம்.

#### வானியல் அறிவு

தமிழரின் அறிவியல் சிந்தனைகளுள் குறிப்பிடத்தக்கது வானியல் பற்றிய அறிவாகும். ஞாயிறு, திங்கள் என ஆராய முற்பட்டபோதே வானியல் ஆய்வு தோன்றிவிட்டது எனலாம். உலகில் தோன்றிய பல்வேறு அறிவியல் கல்விகளுள் மிகப்பழமையானது வானியல் கல்வி. உலகம் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்தது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்... (தொல்காப்பியம், பொருள். 635)

#### உலக உருண்டை

பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முன்புவரை, உலகம் தட்டையானது என்றே கருதி வந்தனர். பிறகு, பதினாறாம் நூற்றாண்டில், உலகம் உருண்டையானது என்பதைக் கண்டுபிடித்தார் கலீலியோ. ஆனால், இந்தக் கண்டுபிடிப்புக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர்,

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (குறள், 1031)

என்னும் குறட்பாவில் உலகம் சுழல்கிறது எனக் கூறுகிறார். உருண்டையான பொருள்தான் சுழலும் என்பது அறிவியல் உண்மை. எனவே, உலகம் உருண்டையாக இருக்கும் என்பதை எந்த அறிவியல் கருவியும் இல்லாத அந்தக் காலத்திலேயே வள்ளுவர் உணர்ந்து தம் குறளில் கையாண்டுள்ளமை வியப்புக்குரியது.

#### ஞாயிற்றுக் காட்சி

செஞ்ஞாயிறு செல்லும் வழி, அதன் இயக்கம், அதைச் சூழ்ந்து பிற கோள்கள் இயங்கும் மண்டிலம், காற்றும் இயங்கும் திசை, காற்றின்றி வெற்றிடமாக உள்ள ஆகாயம்

ஆகியவற்றை நேரில் சென்று கண்டவர்கள் போல் அவை இத்தனை அளவுடையன என்று சொல்லும் அறிஞரும் உள்ளனர் என்கிறது 30-ஆவது புறநானூற்றுப் பாடல்.

செஞ்ஞா யிற்றுச் செலவும், அஞ்ஞாயிற்றுப்

பரிப்பும், பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்,

வளிதிரிதரு திசையும்,

வறிது நிலைஇய காயமும் என்று இவை

சென்று அளந்து அறிந்தோர் போல என்றும்

இணைத்து என்போரும் உளரே... (புறநானூறு, 30)

இதனால், ஞாயிற்றுக்கு மற்றவற்றை ஈர்க்கும் ஆற்றல் உண்டு என்றும், வானில் காற்று இல்லாத வெற்றிடம் உண்டு என்றும் அன்று அறிந்திருந்தனர் என்பது தெரிகிறது.

## கோள்கள் பற்றிய தமிழரின் கருத்து

கோள்களின் நிறம், வடிவம் முதலியவற்றைப் பற்றியும் தமிழர் அறிந்திருந்தனர். செந்நிறமாய் இருந்த கோளைச் செவ்வாய் என அழைத்தனர். இன்றைய அறிவியல் வல்லுநர்கள் செவ்வாய்க் கோளில், சிவப்பு நிறமாய் மண் இருப்பதைச் செயற்கைக்கோள் அனுப்பும் ஒளிப்படங்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். வியம் / வியன் என்றால் பெரிய, நிறைந்த எனப் பொருள்படும். விண்வெளியில் வலம்வரும் பெரிய கோளையே வியாழன் என்றனர்.

நிலவு வளர்கையில் பதினைந்து நிலைகளை அடைவதைப் போலவே தேய்கையிலும் பதினைந்து நிலைகளை அடைகிறது. எட்டாம் நாள் பிறை நிலவு 'எண்ணாட்டிங்கள்' (புறநானூறு, 118) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முழுமதி தோன்றும் பெருநாளில், ஞாயிறும் திங்களும் ஆகிய இரண்டு சுடர்களும் ஒன்றையொன்று எதிர்நின்று பார்த்து, அவற்றுள் ஒரு சுடர் ஒளி குறைந்து மாலைப்பொழுதில் மலையில் மறைந்தது என்பதை,

உவவுத்தலை வந்தபெருநாள் அமையத்து

இருசுடர் தம்முள் நோக்கி ஒருசுடர்

புன்கண் மாலை மலைமறைந் தாங்கு... (புறநானூறு, 65)

என்பதால் அறியலாம்.

அறிவியல் சிந்தனைகளை ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களுக்கான விடை தேடும் முயற்சியாகத் தமிழர்கள் வெளிப்படுத்தினர். பண்டைத் தமிழருடைய வானியல் பற்றிய அறிவும் ஆராய்ச்சியும் வானியல் அறிஞர் சிலேட்டர் போன்றவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டன.

## பொருள் அறிவோம்

1. வளி – காற்று
2. விசும்பு – வானம்
3. மயக்கம் – கலப்பு
4. ஞாயிறு – சூரியன்
5. திங்கள் – சந்திரன்

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(சிவப்பு, வள்ளுவர், வியாழன், புறநானூறு, சிலேட்டர்)

1. உலகம் சுழலும் தன்மை கொண்டது என்பதைத் தனது பாடல் அடிகள் மூலம் கூறியவர் ____________________.
2. 'செஞ்ஞாயிற்றுச் செலவும்' என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் ____________________.
3. தமிழருடைய வானியல் அறிவைப் பாராட்டிய அயல்நாட்டு அறிஞர்களுள் ஒருவர் ____________________.
4. செவ்வாய்க் கோளில் மண் ____________________ நிறத்தில் காணப்படுகிறது.
5. விண்வெளியில் வலம்வரும் பெரிய கோளையே ____________________ என்றனர்.

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. உலகம் எவற்றின் கலவை எனத் தொல்காப்பியப் பாடல் கூறுகிறது?
2. ஞாயிற்றுக் காட்சி குறித்துப் புறநானூறு கூறும் செய்திகள் என்ன?
3. புறநானூற்றுப் பாடலில் பயின்றுவரும் 'எண்ணாட்டிங்கள்' என்ற சொல் எதனைக் குறிக்கிறது?
4. எத்தகைய நூல்களின் மூலம் பழந்தமிழர்கள் கையாண்ட அறிவியல் நுணுக்கங்களைக் காணலாம்?
5. கோள்கள் பற்றிய தமிழர்களின் கருத்துகளை எழுதுக.

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. தமிழர்களின் வானியல் அறிவு பற்றிய கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

## 19.4 தெரிந்துகொள்வோம்

### தொகாநிலைத்தொடர்

ஒரு தொடர்மொழியில் இருசொற்கள் இருந்து அவற்றின் இடையில் சொல்லோ உருபோ தொகாமல் (மறையாமல்) அப்படியே பொருளை உணர்த்துவது தொகாநிலைத்தொடர் எனப்படும்.

எ.கா: மூங்கில் வளைந்தது

இத்தொடரில் 'மூங்கில்' என்னும் எழுவாயும் 'வளைந்தது' என்னும் பயனிலையும் தொடர்ந்து நின்று பொருளை உணர்த்துகிறது. இவ்விரு சொற்களுக்கு இடையே சொல்லோ உருபோ மறைந்து நிற்கவில்லை. இவ்வாறான தொடர்களையே 'தொகாநிலைத்தொடர்கள்' என்பர். இது ஒன்பது வகைப்படும்.

### 1. எழுவாய்த்தொடர்

எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது எழுவாய்த் தொடர் ஆகும்.

எ.கா:

| | | |
|---|---|---|
| கபிலன் கவிஞன் | - | பெயர் |
| இலக்கியா படித்தாள் | – | வினை |
| நீ வருவாயா? | – | வினா |

மேற்கண்ட மூன்று தொடர்களிலும் பெயர், வினை, வினா ஆகியன பயனிலைகளாக வந்து எழுவாய்த்தொடர்கள் அமைந்துள்ளன.

### 2. விளித்தொடர்

விளியுடன் வினை தொடர்வது விளித்தொடர் ஆகும்.

எ.கா : வேலா வா! – 'வேலா' என்னும் விளிப்பெயர் 'வா' என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்துள்ளது.

### 3. வினைமுற்றுத்தொடர்

வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வினைமுற்றுத்தொடர் ஆகும்.

எ.கா : எழுதினார் இளங்கோ

'எழுதினார்' என்னும் வினைமுற்று முதலில் நின்று ஒரு பெயரைக் கொண்டு முடிந்துள்ளது.

## 4. பெயரெச்சத்தொடர்

முற்றுப்பெறாத வினையைப் பெயர்ச்சொல் தொடர்வது பெயரெச்சத்தொடர் ஆகும்.

எ.கா : எழுதிய பாடம் – 'எழுதிய' என்னும் எச்சவினை 'பாடம்' என்னும் பெயரைக் கொண்டு முடிந்துள்ளது.

## 5. வினையெச்சத்தொடர்

முற்றுப்பெறாத வினையை, வினைச்சொல் தொடர்வது வினையெச்சத்தொடர் ஆகும்.

எ.கா : ஓடிச் சென்றனர். – 'ஓடி' என்னும் எச்சவினை 'சென்றனர்' என்னும் வினையைக் கொண்டு முடிந்துள்ளது.

## 6. வேற்றுமைத்தொடர்

வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள் வேற்றுமைத்தொடர்கள் ஆகும்.

எ.கா : நீரை ஊற்றினார் – (ஐ) இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர். இத்தொடரில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துகிறது.

## 7. இடைச்சொல்தொடர்

இடைச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது இடைச்சொல்தொடர் ஆகும்.

எ.கா : மற்றொன்று - மற்று + ஒன்று

'மற்று' என்னும் இடைச்சொல்லை அடுத்து 'ஒன்று' என்னும் எண்ணுப்பெயர் நின்று பொருள் தருகிறது.

## 8. உரிச்சொல்தொடர்

உரிச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது உரிச்சொல்தொடர் ஆகும்.

எ.கா : நனி நன்று

'நனி' என்பது உரிச்சொல், அதைத் தொடர்ந்து 'நன்று' என்ற சொல் நின்று 'மிக நன்று' என்ற பொருளைத் தருகிறது.

## 9. அடுக்குத்தொடர்

ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது அடுக்குத்தொடர் ஆகும்.

எ.கா : வாழ்க! வாழ்க! - ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வந்துள்ளது.

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தொகாநிலைத் தொடரின் வகைகள்

அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9

2. வாளால் வெட்டினான் - எவ்வகைத் தொடர்?

அ) எழுவாய்த்தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்

இ) வேற்றுமைத்தொடர் ஈ) அடுக்குத்தொடர்

3. வருக! வருக! - தொடரின் வகை என்ன?

அ) அடுக்குத்தொடர் ஆ) உரிச்சொல்தொடர்

இ) இடைச்சொல்தொடர் ஈ) வினையெச்சத்தொடர்

4. கடிநகர் காப்பது மன்னனின் கடமை - இங்கு கடிநகர் என்பது என்ன?

அ) இடைச்சொல்தொடர் ஆ) உரிச்சொல்தொடர்

இ) அடுக்குத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

5. விளையாடினார் சச்சின் – இத்தொடர் என்ன?

அ) வியங்கோள் வினைமுற்றுத் தொடர் ஆ) வினையாலணையும் தொடர்

இ) வினையெச்சத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தொகாநிலைத்தொடர்கள் யாவை?
2. அடுக்குத்தொடர் என்றால் என்ன? சான்று தருக.
3. வினையெச்சத்தொடர் என்பது யாது? சான்று தருக.
4. குருவே வணக்கம் - இதில் அமைந்துள்ள தொடர் வகையை விளக்குக.
5. பின்வரும் பத்தியிலுள்ள தொகைநிலைத் தொடர்களைக் கண்டறிந்து எழுதுக.

வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தியவாறே வந்தார் புலவர். மன்னனின் முகம் மலர்ந்தது. புலவரே வருக என்றழைத்து அருகில் அமரவைத்தான். தாகத்தைத் தணிக்க நீரும் பசிக்கு அறுசுவை உணவும் கொடுத்தான். பசி தீர்ந்த புலவர் சுவை மிகுந்த பாடலைப் பாடினார். நனி சிறந்த பாடல் என்று மன்னன் பாராட்டினான்.

| வ.எண் | சொல் | தொகாநிலைத் தொடர் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

### இ) பின்வரும் வினாவுக்கு விரிவாக விடை எழுதுக.

1. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

## 19.5 மொழி விளையாட்டு

### பிறமொழிக் கலப்பின்றித் தமிழில் பேசுவோம்

இந்த உரையாடலில் உள்ள பிறமொழிச்சொற்களைத் தவிர்த்து, தனித்தமிழில் எழுதுக.

**அப்பா** : வீக் எண்ட்ல பீச்சுக்கு வந்தாலே இதுதான் பிராப்ளம், பார்த்தாயா? காரைகூடப் பார்க் செய்ய முடியல.

______________________________

**மகன்** : டாடி, அங்க பாருங்க, அங்க ஒரு ப்ளேஸ் இருக்கு.

______________________________

**அப்பா** : அப்பாடா! ஒரு வழியா பார்க் செய்தாச்சி. மீனா, பாபு, உங்களோட திங்க்ஸ் எல்லாம் எடுத்துக்குங்க. மம்மிகிட்ட கொடுத்துட்டு நீங்க ப்ளே பண்ணலாம். ஓகேதானே.

______________________________

**மகன்** : டாடி, ஐஸ்கிரீம் வருது பாருங்க. எனக்கு வாங்கித்தாங்க.

______________________________

**அப்பா** : நோ, நோ உனக்கு ஏற்கெனவே ஃபீவரா இருக்கு. ஐஸ்கிரீம் சாப்பிட்டால் நாளைக்கு ஸ்கூலுக்குப் போக முடியாது.

______________________________

### தகவல் துளி

தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ராசராசனுடைய கல்வெட்டு, நீர் மேலாண்மைக்குத் தமிழர்கள் அளித்த முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளத் துணையாக உள்ளது. ஆரியூர் ஏரியை யார் பராமரித்துச் சுத்தம் செய்து அதை நீர் வற்றாது பார்த்துக்கொள்கிறாரோ அவரது காலடி மண்ணைத் தன் தலைமேல் தாங்குவேன் என்கிறார் ராஜராஜ சோழன். ஆசியக் கண்டத்தின் பெரும்பகுதியைத் தன் வீரத்தால் கட்டி ஆண்ட ஒப்பற்ற மாமன்னர் இவர். ஆயிரம் ஆண்டுகளாக இந்தச் செய்தியை ஆரியூர் ஏரியில் நிற்கும் குமிழித்தூம்புக் கல்வெட்டு சொல்லிக் கொண்டிருக்கிறது. 'குமிழித்தூம்பு மதகு' என்பது தமிழ்நாட்டு ஏரிகளில் தேக்கிவைக்கும் நீரைப் பாசனத்திற்குத் திறக்க அமைத்த அறிவியல் பூர்வமான அமைப்பு ஆகும்.



குமிழித்தூம்பு

## 19.6 கேட்டல் கருத்தறிதல்

### பூஜ்ஜியம் (சுழி)

உலகுக்கு இந்தியா அளித்த கொடைகளுள் முக்கியமானது பூஜ்ஜியம். பூஜ்ஜியம் இல்லாத கணிதத்தைக் கற்பனை செய்யவே முடியாது. பூஜ்ஜியத்தைக் கண்டறிந்தவர் ஆரியபட்டர். இவர் கணிதத்திலும் வானியலிலும் உலக அறிவியலாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறார். ஆரியபட்டர் எழுதிய நூல்கள் மூன்று. அவற்றுள் 'ஆரியபட்டீயம்' மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளது. இதில் எண்களைப் பிராமி எழுத்தில் ஆரியபட்டர் எழுதியுள்ளார்.

ஆரியபட்டரின் பெருமைகளை வெளிநாட்டினர் உணர்ந்து வியக்கின்றனர். அவர் கண்டறிந்த ஒவ்வொன்றும், அரபியில் மொழிபெயர்க்கப்பட்டு, பின்னாளில் இலத்தீனிலும் கிரேக்கத்திலும் மொழிபெயர்க்கப்பட்டன; இந்தச் சிந்தனைகள் உலகம் முழுவதும் பரவின. இவையே நவீனக் கணிதத்துக்கும் வானியலுக்கும் அடிப்படையாயின.

ஆரியபட்டீயத்தின் கணிதபாதமே பின்னாளில் அல்ஜீப்ராவாக (Algebra) வடிவெடுத்தது. கிடிபாதமே நவீனத் திரிகோணவியலுக்கான (Trigonometry) ஆதாரமாகும். காலக்கியபாதமும் கோளபாதமும் தற்கால வானியலுக்கு (Astronomy) ஆணிவேராகும். பூமி தட்டையானது என்று கிரேக்க அறிஞர்கள் சொல்லிவந்தபோது அதன் உண்மையான வடிவத்தையும், சூரியக் குடும்பத்தில் கோள்களின் வரிசையையும் துல்லியமாகத் தனது நூலில் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. வட்டத்தின் சுற்றளவையும் பரப்பளவையும் கண்டறியப் பயன்படும் 'பை' (Pi) என்ற மாறிலியின் (3.1416 = 7/22) மதிப்பை முதன்முதலில் கண்டறிந்தவர் ஆரியபட்டரே. அதற்கான வாய்பாட்டையும் அவர் அளித்திருக்கிறார்.

ஆரியபட்டரைச் சிறப்பிக்கும் விதமாக, 1975இல் இந்திய வானியல் ஆராய்ச்சி மையமான 'இஸ்ரோ' விண்ணில் செலுத்திய முதல் செயற்கைக்கோளுக்கு 'ஆரியபட்டா' என்று பெயர் சூட்டப்பட்டது. அவரது நினைவைப் போற்றும் வகையில் 2010 முதல் பீகாரில் ஆரியபட்டா அறிவுப் பல்கலைக்கழகம் செயல்படுகிறது. நைனிடாலில் உள்ள வானாய்வகம் (ARIES) அவரது பெயருடன் இயங்குகிறது.

### வினாக்கள்

1. கணிதத்திற்கான இந்தியாவின் கொடை எது?
2. பூஜ்ஜியத்தைக் கண்டறிந்தவர் யார்?
3. ஆரியபட்டர் எந்தெந்தத் துறைகளில் முன்னோடியாகத் திகழ்கிறார்?
4. ஆரியபட்டீயத்தின் எப்பகுதி பின்னாளில் அல்ஜீப்ராவாக வடிவெடுத்தது?
5. ஆரியபட்டா செயற்கைக்கோள் எந்த ஆண்டு விண்ணில் ஏவப்பட்டது?

## 19.7 மொழிபெயர்ப்போம்

ஒவ்வோர் இலக்கியமும் தான் தோன்றிய சமூகத்தை மையமாகக் கொண்டு விளங்குகிறது. சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிதான் இலக்கியம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். சமூகத்தின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் இலக்கியம் விளக்குகிறது.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

## 19.8 அறிந்துகொள்வோம்

1. கண்டுபிடிப்பு - Discovery / Invention
2. ஒளி - Light
3. தெளிவு - Clarity
4. செவி - Ear
5. நுணுக்கம் - Precision
6. வானியல் - Astronomy
7. ஞாயிறு - Sun
8. நீர் மேலாண்மை - Water Management
9. பராமரிப்பு – Maintenance
10. பூஜ்ஜியம் - Zero
11. கோள் – Planet
12. செயற்கைக்கோள் – Satellite

## 19.9 உயர்நிலைத்திறன்

**பின்வரும் பாடலைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
  நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்
கோலமுழுதும் காட்டிவிட்டால் காதற்
  கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்

சோலையிலே பூத்த தனிப்பூவோ நீதான்!

சொக்கவெள்ளிப் பாற்குடமோ! அமுத ஊற்றோ!

காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்

கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!

-புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

## வினாக்கள்

1. நீலவான ஆடைக்குள் மறைந்திருப்பது எது?
2. நிலவை வருணிக்கும் சொற்களை எழுதுக.
3. பாடலில் சூரியனைக் குறிக்கும் சொல்லைக் கண்டறிந்து எழுதுக.
4. பாற்குடம் – இச்சொல்லைப் பிரித்து, எவ்வகைப் புணர்ச்சி என எழுதுக.
5. 'சோலையில் பூத்த தனிப்பூ' – இச்சொற்றொடரை விளக்குக.

## 19.10 செயல் திட்டம்

கோள்களின் மாதிரி வடிவங்களைச் செய்து, ஒவ்வொரு கோளைப் பற்றியும் தமிழில் இரண்டு வரி எழுதி, வகுப்பில் காட்சிப்படுத்துக.

பாடம்
20

## 20.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

உங்களுக்குத் தெரிந்த அறிவியல் கண்டுபிடிப்புகளின் வளர்ச்சி குறித்து உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 20.2 படிப்போம்

### விஞ்ஞானி

நாம் வாழ்ந்துகொண்டிருப்பது அறிவியல் தொழில்நுட்பயுகம் அல்லது கல்வியுகம் என்று அழைக்கப்படுகிறது. பரந்து விரிந்த இவ்வுலகை நம் உள்ளங்கைக்குள் கொண்டுவந்த பெருமை அறிவியலையே சேரும். அறிவியல் துறையில் அயராது உழைத்துப் பலவிதக் கருவிகளைப் படைத்த அறிஞர்களின் பெருமையையும் மனிதர்களின் முன்னேற்றத்திற்கு அவர்களின் கண்டுபிடிப்புகளின் இன்றியமையாமையையும் கூறும் கவிஞர் மீராவின் கவிதையை இந்தப் பாடப்பகுதியில் காண்போம்.

**உலகை உயரத்தில்**
**உண்மையிலே தூக்கி வைக்கப்**
**பலகை கொடுத்தவன் யார்?**
**பகுத்தறிவை வளர்த்தவன் யார்?**
**காற்றை அடக்கிக்**
**கடல்மீதும் ஆணையிடும்**
**ஆற்றல் மிகுந்தவன் யார்?**
**ஆற்றில் மிகும் நீரைத்**
**தேக்கியளிக்கின்ற**
**திட்டம் அளித்தவன் யார்?**
**நீக்கமற எங்கும்**
**நிறைந்துள்ள மின்வெளிச்சம்**
**படைத்துக் கொடுத்தவன் யார்?**
**பாருலகச் செய்திகளைத்**
**தொகுத்தெளிதாய் அச்சாக்கும்**
**தொழில் கற்றுத்தந்தவன் யார்?**
**காலைச் சிற்றுண்டியினைக்**
**கல்கத்தாவில் முடித்து**
**மாலை விருந்துக்கு**
**மதுரை வரச் வைத்தவன் யார்?**
**அமெரிக்க நாட்டில் ஓர்**
**அறிவாளி பேசுவதைக்**
**குமரிக் கரையிருப்போர்**
**செவி குளிரக் கேட்டிருக்கச்**
**செய்தவன் யார்? வேண்டுங்கால்**
**செயற்கை மழைநீரைப்**
**பெய்விக்க முயலும்**
**பெருமைக்குரியவன் யார்?**
**மருட்சி பெறச் செய்யும்**
**மகத்தான காட்சியுடன்**
**திரைப்படத்தை உருவாக்கித்**
**தந்தவன் யார்?... விஞ்ஞானி.**

**விஞ்ஞானி பரப்பும்**
**வெளிச்சம் இல்லையென்றால்**
**அஞ்ஞான இருளை**
**அகற்ற வழியில்லை**
**இந்நாளில் காணும்**
**ஏற்றமிகு கருவியெல்லாம்**
**முன்னாளில் கிடையாது;**
**முன்னேற்றம் கிடையாது.**
**கடல்நீரில் பயிர்விளைச்சல்**
**கண்டு பெருக்கிடவும்**
**படகேறிச் சுடுகின்ற**
**பாலையிலே சென்றிடவும்**
**மாண்டவனை எழுப்பிடவும்**
**மனிதன் தனையுயர்த்தி**
**ஆண்டவனைப் போலெங்கும்**
**ஆட்சி செலுத்திடவும்**
**விஞ்ஞானம் வழிவகுக்கும்**
**வெற்றிக் கையெழுத்திட்டு**
**மெய்ஞ்ஞானப் பத்திரத்தை**
**மேதினிக்கு இயற்றிவைக்கும்.**

**– மீரா**

## பாடலின் பொருள்

உலகை வளர்ச்சிப் பாதையில் உயரே தூக்கிவைத்தவர், பகுத்தறிவை வளர்த்தவர், காற்றையும் அடக்கிக் கடலிடமும் கட்டளையிடும் ஆற்றல் மிகுந்தவர், செழித்தோடும் ஆற்று நீர் வீணாகாமல் தேக்கிவைத்து அணை கட்டியவர், மின்சார வெளிச்சத்தைக் கொடுத்தவர், அறிவுப் பகிர்வுக்கான செய்திகளை அச்சிடக் கற்றுக்கொடுத்தவர், தொலைதூரப் பயணங்களை எளிதாக்கியவர், உலகின் எந்த மூலையிலுள்ள தகவலையும் உலகின் எந்த மூலைக்கும் கொண்டுசேர்த்தவர், வேண்டுமென்றால் இயற்கையின் வரமான மழையையே செயற்கையாகப் பெய்விக்க முயல்பவர், மகத்தான காட்சிகளுடன் திரைப்படத்தை உருவாக்கியவர்... இந்த எல்லாப் பெருமைக்கும் உரியவர் விஞ்ஞானிதான்.

விஞ்ஞானிகள்தான் இந்த உலகுக்கு வெளிச்சம் பாய்ச்சுகிறார்கள். இந்த வெளிச்சம் இல்லையென்றால், அறியாமை இருளை அகற்ற முடிந்திருக்காது. நம்முடைய ஏற்றத்துக்கு உதவக்கூடிய இந்தக் கருவிகளெல்லாம் முற்காலத்தில் கிடையாது. அறிவுப்பாதையில் அழைத்துச்செல்லும் இத்தகைய அறிவியல் இல்லையென்றால் வாழ்வில் முன்னேற்றம் இருந்திருக்காது. இன்னும் ஒரு படி மேலே சென்று வருங்காலத்தில், கடல்நீரிலே பயிர் விளைச்சல் செய்வதற்கும், வெப்பம் கொதிக்கும் பாலையிலே படகில் செல்வதற்கும், இறந்தவர்களை எழுப்புவதற்கும், மனிதன் தன்னை உயர்த்திக்கொண்டு ஆண்டவனைப் போல் எல்லாவற்றையும் ஆள்வதற்கும் அறிவியல் வழிவகுக்கும். அறிவு எனும் பத்திரத்தில் வெற்றி எனும் கையெழுத்திட்டு இந்த உலகை அறிவியல் வழிநடத்தும். இவ்வாறு அறிவியலின் முக்கியத்துவத்தைச் சொல்கிறார் மீரா.

## நூலைப் பற்றி

'விஞ்ஞானி' எனும் இக்கவிதை 'மூன்றும் ஆறும்' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இத்தொகுப்பில் மொத்தம் ஒன்பது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இதனை எழுதியவர் மீரா. இவரது இயற்பெயர் மீ.இராசேந்திரன். மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகிய இரு தளங்களிலும் பரவலாக அறியப்பட்டவர். சிவகங்கை அரசுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். இவர் எழுதிய 'ஊசிகள்', 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்' ஆகிய கவிதை நூல்கள் நல்ல வரவேற்பைப் பெற்றவை. இவர் 'அன்னம் விடு தூது', 'கவி' ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார். அன்னம் பதிப்பகத்தின் மூலம் படைப்பாளர்கள் பலரை அறிமுகப்படுத்தி ஊக்குவித்தார்.

## பொருள் அறிவோம்

1. வாகை – வெற்றி
2. ஈகை – கொடுத்தல்
3. விஞ்ஞானம் – அறிவியல்
4. விஞ்ஞானி – அறிவியலாளர்
5. பகுத்தறிவு – ஆய்ந்து அறிதல்
6. செவி – காது
7. அஞ்ஞானம் – அறியாமை
8. மாண்டவன் – இறந்தவன்
9. மெய்ஞ்ஞானம் – உண்மையறிவு
10. மேதினி – உலகம்

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(உலகம், மூன்றும் ஆறும், மீ.இராசேந்திரன், ஒன்பது, மீரா)

1. கவிஞர் மீராவின் இயற்பெயர் ________________.
2. மேதினி என்பதன் பொருள் ________________
3. அன்னம் பதிப்பகத்தின் மூலம் படைப்பாளர்களை ஊக்குவித்தவர் ________________.
4. விஞ்ஞானி என்னும் கவிதை ________________ என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
5. மூன்றும் ஆறும் என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளின் எண்ணிக்கை ________________.

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கவிஞர் மீரா நடத்திய இதழ்களைக் குறிப்பிடுக.
2. எது இல்லையென்றால் அஞ்ஞான இருளை அகற்ற வழியில்லை?
3. அறிவியலால் நாம் அடைந்த மூன்று பயன்களைப் பாடப் பகுதியிலிருந்து கூறுக?
4. கவிஞர் மீரா எழுதிய கவிதை நூல்களின் பெயர்களை எழுதுக.
5. விஞ்ஞானம் எதற்கெல்லாம் வழிவகுக்கும் என மீரா கூறுகிறார்?

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. விஞ்ஞானி குறித்த மீராவின் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

## 20.3 படிப்போம்

### ஏவுகணை நாயகர்



இந்தியாவின் தலைசிறந்த அறிவியலாளர்களுள் ஒருவர், தொழில்நுட்ப வல்லுநர், மிகச்சிறந்த நிருவாகி, இந்தியாவின் 11ஆவது குடியரசுத்தலைவர், இந்திய ஏவுகணை நாயகர், நல்ல ஆசிரியர், அற்புதமான பேச்சாளர், 'இளைஞர்களின் கையில்தான் எதிர்கால இந்தியா' என்று முழக்கமிட்டவர் முனைவர் ஆ. ப. ஜெ. அப்துல்கலாம்.

தமிழ்நாட்டிலுள்ள இராமேஸ்வரம் தீவில் 1931 அக்டோபர் 15 அன்று ஜைனுலாப்தீன், ஆஷியம்மா தம்பதிக்கு ஐந்தாவது மகனாகப் பிறந்தார் அப்துல் கலாம். வறுமையான பின்னணியிலிருந்து முகிழ்த்தெழுந்து இலட்சக்கணக்கான இளம் தலைமுறையினருக்கு முன்மாதிரியாக வாழ்ந்தார். பள்ளிக்கட்டணம் செலுத்தக்கூட வழியில்லாமல், இளம் வயதிலேயே வேலைக்குச் சென்றார். இப்படியான சூழல் நிலவியபோதும் தம்முடைய கனவுகளில் அவர் சமரசம் செய்துகொள்ளவில்லை.

அவர் விடாமுயற்சியுடன் படித்தார். இயற்பியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார். பிறகு, தொழில்நுட்பக் கல்வியில் தென்னகத்தின் மணிமகுடமாகக் கருதப்பட்ட மெட்ராஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் (MIT) விண்வெளிப் பொறியியல் படிப்புக்காக விண்ணப்பித்தார். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியலில் அப்துல் கலாம் பெயரும் இருந்தது. ஆனால், பணம் செலுத்துவதற்கான வசதி இல்லை. இந்த இக்கட்டான சூழலில் அவருடைய சகோதரி ஜோஹராதான் உதவினார்; தங்க வளையல்களையும் சங்கிலியையும் அடமானம் வைத்துக் கொடுத்தார். தன்னுடைய சொந்தச் சம்பாத்தியத்தில் அந்த நகைகளை மீட்டுக்கொடுப்பேன் என்று சங்கல்பம் எடுத்துக்கொண்ட அப்துல் கலாம் சொல்கிறார்: 'அந்தக் கட்டத்தில் பணம் சம்பாதிக்க எனக்குத் தெரிந்த ஒரே வழி தீவிரமாகப் படித்து உதவித்தொகை பெறுவது மட்டுமே.'

மெட்ராஸ் தொழில்நுட்ப வளாகத்தில் அப்துல் கலாம் கண்ட காட்சிதான் அவரைப் பரவசத்தில் திக்குமுக்காட வைத்தது. ஓரம் கட்டப்பட்ட இரண்டு விமானங்களை அங்கே நிறுத்தியிருந்தார்கள். எல்லா மாணவர்களும் விடுதிக்குப் போன பிறகு, அவர் மட்டும் நீண்ட நேரம் தனியாக அந்த விமானங்களின் அருகிலேயே அமர்ந்திருப்பார். பறவையைப் போல் சுதந்திரமாகப் பறக்க வேண்டும் என்ற மனிதனின் விடாப்பிடியான உறுதியை நினைத்து வியப்படைந்தார். இந்த நினைவுகளில் அவருடைய மனம் சிறகு விரித்துப் பறக்கும்.

இதன் விளைவாக, விமானப் படையில் விமானியாக வேண்டும் என்று அவர் கனவு கண்டார். அவருடைய அப்பாவோ அவரை கலெக்டராக்கிப் பார்க்க விரும்பினார். வானத்தில் பறக்க ஆசைப்பட்ட அப்துல் கலாம், பின்னாளில் இராக்கெட் பொறியாளராக உருமாறி விண்வெளியை எட்டினார். ஏவுகணை நாயகராக அவதாரம் எடுத்தார். இந்தக் கனவு நாயகர், இந்திய இளைஞர்கள் எல்லோரும் கனவு காண வேண்டும் என்று அறிவுறுத்தினார். 'உறக்கத்திலே வருவதல்ல கனவு; உன்னையும் என்னையும் உறங்கவிடாமல் செய்வதுதான் கனவு' என்று கனவுக்குப் புதிய வரையறையை உருவாக்கினார். 'நாம் அனைவருமே நமக்குள்ளே ஒரு தெய்வீக அக்னியுடன் பிறந்திருக்கிறோம். இந்த அக்னியைக் கொழுந்துவிட வைத்து அதன் பொன்னொளியை இந்த உலகத்தில் பரப்புவதற்காக முனைவது நம்முடைய கடமை' என்றார்.

படிப்பை முடித்த பிறகு, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திலும் (DRDO), இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலும் (ISRO) விண்வெளிப் பொறியாளராகப் பொறுப்பு வகித்தார். இந்தக் காலகட்டத்தில் அப்துல் கலாம் ஆற்றிய பணி அளப்பரியது. துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கியப் பங்காற்றினார். 1980இல் SLV-III இராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகிணி-I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார். இது உலக அளவில் இந்தியாவுக்கே பெருமை சேர்த்தது. 1998இல் நடந்த பொக்ரான்-II அணு ஆயுதப் பரிசோதனையில் மிகப்பெரும் பங்காற்றினார். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய அப்துல் கலாம், ஐந்து ஏவுகணைத் திட்டங்களில் பணிபுரிந்துள்ளார்.

இளைய தலைமுறைக்குப் பயன்படும் விதமாக அப்துல் கலாம் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். 'அக்னிச் சிறகுகள்', 'இந்தியா 2020', 'எழுச்சி தீபங்கள்' ஆகியவை அவருடைய முக்கியமான நூல்களாகும்.

விண்வெளித்துறையில் அப்துல் கலாம் புரிந்த தொடர் சாதனைகளுக்காக இந்திய அரசு இவருக்கு 'பத்ம பூஷண்' விருது வழங்கிக் கௌரவித்தது. இந்தியாவின் மிகவும் மரியாதைக்குரிய உயரிய விருதான பாரத ரத்னாவும் இவருக்கு வழங்கப்பட்டது. 2002 முதல் 2007 வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர், 'மக்களின் ஜனாதிபதி' என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டார். மக்கள் மனத்தில் நீங்கா இடம்பெற்றார்.

## பொருள் அறிவோம்

1. முழக்கம் - உரக்கச் சொல்லுதல்
2. சங்கல்பம் - உறுதி
3. அக்னி - தீ அல்லது நெருப்பு
4. ஆற்றிய - செய்த

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. இந்தியாவின் 11-ஆவது குடியரசுத் தலைவர் யார்?

   அ) பிரணாப் முகர்ஜி ஆ) அப்துல் கலாம்

   இ) ராதாகிருஷ்ணன் ஈ) பிரதீபா பாட்டீல்

2. தமிழ்நாட்டின் எந்த இடத்தில் அப்துல் கலாம் பிறந்தார்?

   அ) திருநெல்வேலி ஆ) கரூர் இ) இராமேஸ்வரம் ஈ) திண்டுக்கல்

3. 1980இல் SLV-III இராக்கெட்டைப் பயன்படுத்தி எந்தத் துணைக்கோள் வெற்றிகரமாக ஏவப்பட்டது?

   அ) ரோகிணி-I ஆ) போக்ரான்-II இ) ரோகிணி-II ஈ) போக்ரான்-I

4. அப்துல் கலாம் பிறந்த நாள் எது?

   அ) அக்டோபர் 10 ஆ) அக்டோபர் 12 இ) அக்டோபர் 14 ஈ) அக்டோபர் 15

5. அப்துல் கலாம் எந்தத் துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றார்?

   அ) வேதியியல் ஆ) இயற்பியல் இ) கணிதவியல் ஈ) பொறியியல்

### ஆ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. 'இளைஞர்களின் கையில்தான் எதிர்கால இந்தியா' என்று முழக்கமிட்டவர் அப்துல் கலாம். (சரி/தவறு)
2. ஜைனுலாப்தீன், ஆஷியம்மா தம்பதிக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார் அப்துல் கலாம். (சரி/தவறு)
3. அப்துல் கலாம் புரிந்த தொடர் சாதனைகளுக்காக இந்திய அரசு இவருக்கு 'பத்ம பூஷண்' விருது வழங்கிக் கௌரவித்தது. (சரி/தவறு)
4. இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய அப்துல் கலாம், ஆறு ஏவுகணைத் திட்டங்களில் பணிபுரிந்துள்ளார். (சரி/தவறு)
5. 2002 முதல் 2007 வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர், 'மக்களின் ஜனாதிபதி' என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டார். (சரி/தவறு)

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. அப்துல் கலாம் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.
2. எம்.ஐ.டி.யின் எந்தத் துறையில் படிக்க அப்துல் கலாம் விண்ணப்பித்தார்?
3. அப்துல் கலாமின் எந்தச் செயல் உலக அளவில் இந்தியாவுக்குப் பெருமை சேர்த்துத் தந்தது?
4. அப்துல் கலாமுக்கு வழங்கப்பட்ட விருதுகள் யாவை?
5. கனவு பற்றி அப்துல் கலாம் கூறிய வாசகம் என்ன?

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. அப்துல் கலாமின் இளமைக் காலம் குறித்தும் சாதனைக் காலம் குறித்தும் கட்டுரை ஒன்று எழுதுக.

## 20.4 தெரிந்துகொள்வோம்

### வழுநிலை – வழாநிலை

நாம் பேசும்போதும் எழுதும்போதும் இலக்கண நெறியைப் பின்பற்ற வேண்டும். இதனை வழாநிலை என்பர். அந்நெறிகளிலிருந்து பிறழும்போது அதனை வழுநிலை என்பர். இப்பகுதியில் ஏழு வகைகளில் ஏற்படும் வழுநிலை குறித்தும் அவற்றின் வழாநிலை குறித்தும் காண்போம்.

### 1. திணை

உயர்திணை/அஃறிணையைப் பயன்படுத்தித் தொடர் அமைக்கும்போது அத்திணைக்கு உரிய வினையைக் கொண்டுதான் முடிக்க வேண்டும். அவ்வாறு முடிக்காவிட்டால் அது திணைவழுவாகும்.

| | வழு | வழாநிலை |
|---|---|---|
| சான்று | அக்கா வந்தது | அக்கா வந்தாள் |

### 2. பால்

ஐந்து பால்களுக்கு உரிய பெயர்கள் எழுவாயாகவோ வினை நிகழ்த்தும் பொருளாகவோ வரும்போது, அவற்றிற்கான வினை அவற்றிற்கு உரிய பாலில் அமையாமல் வேறு பாலில் அமைதல் வழுவாகும்.

| | வழு | வழாநிலை |
|---|---|---|
| சான்று | அறிஞர்கள் வந்தான் | அறிஞர்கள் வந்தனர் |

### 3. இடம்

மூவிடங்களில் ஒன்றின் இடத்திற்கு உரிய எழுவாய், சொற்றொடரில் இடம்பெறும்போது பயனிலை அதற்குரியதாக அமையாமல் வேறு இடத்திற்கு உரியதாக அமையுமானால் வழுவாகும்.

| | வழு | வழாநிலை |
|---|---|---|
| சான்று | நீ பாடினேன் | நீ பாடினாய் |

### 4. காலம்

ஒரு காலத்திற்குரிய வினையை வேறு காலத்தில் கூறுவது வழுவாகும்.

| | வழு | வழாநிலை |
|---|---|---|
| சான்று | நேற்றுச் சாப்பிடுவான் | நேற்றுச் சாப்பிட்டான் |

### 5. வினா

வினாவின் எழுவாயாக வரும் பெயர்களின் திணை, பால் ஆகியனவும் வினாப் பயனிலைகளில் வரும் திணை, பால் ஆகியனவும் மாறி வருதல் வழுவாகும்.

| | வழு | வழாநிலை |
|---|---|---|
| சான்று | அங்கே வருகிறவன் ஆணா? பெண்ணா? | அங்கே வருபவர் ஆணா? பெண்ணா? |

### 6. விடை

விடையில் இடம்பெறும் எழுவாயின் திணையும் பாலும் மாறுபட்டு வரும் விடைத் தொடர்கள் விடை வழுநிலைத் தொடர்கள் எனப்படும்.

| | வழு | வழாநிலை |
|---|---|---|
| சான்று | அங்கே வருகிறவன் பெண் | அங்கே வருகிறவன் ஆண் |

### 7. மரபு

முன்னோர் ஒரு பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினர் என அறியாமல், அதற்கு மாறுபட வழங்குவது மரபு வழுவாகும்.

| | வழு | வழாநிலை |
|---|---|---|
| சான்று | மயில் கூவியது | மயில் அகவியது |

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அம்மா வந்தது – இத்தொடரில் உள்ளது எவ்வகை வழு?

அ) கால வழு ஆ) திணை வழு இ) இட வழு ஈ) மரபு வழு

2. கீழ்க்காண்பவற்றுள் எது கால வழு?

அ) நாளை வருவேன் ஆ) நேற்று படித்தேன்

இ) இன்று வருகிறேன் ஈ) நேற்று விளையாடுவேன்

3. குயில் கத்தியது- இதில் உள்ள வழு?

அ) மரபு வழு ஆ) இட வழு இ) திணை வழு ஈ) கால வழு

4. பொருந்தாததைக் கண்டறிக.

அ) மாடு வந்தது ஆ) மயில் அகவியது இ) அவன் வந்தான் ஈ) நாளை வந்தேன்

5. 'அங்கே வருவது முருகன்' – இதில் உள்ள வழு?

அ) மரபு வழு ஆ) இட வழு இ) திணை வழு ஈ) கால வழு

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வழு என்றால் என்ன?

2. வழு எத்தனை வகைப்படும்? அவை யாவை?

3. வழாநிலை என்றால் என்ன?

4. வழாநிலை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

5. கால வழாநிலையை விளக்குக.

6. மரபு வழாநிலைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

7. விடை வழாநிலையைச் சான்றுடன் விளக்குக.

## 20.5 கருத்துவிளக்கப்படம்




### வினாக்கள்

1. தமிழ்நாடு அறிவியல் இயக்கம் நடத்தும் நிகழ்வு யாது?
2. தமிழ்நாடு அறிவியல் இயக்கம் எந்த மாவட்டத்தில் தன் பயிற்சிப்பட்டறையை நடத்துகிறது?
3. பயிற்சிப்பட்டறை எந்தக் கிழமை நடைபெறுகிறது?
4. பயிற்சிப்பட்டறை நடக்கும் பள்ளி எது?
5. பயிற்சிப்பட்டறையில் எதைப் பற்றிக் கற்றுக்கொடுக்கப்படுகிறது?

### தகவல் துளி



முகமது ரிஃபாத் சாருக்

முகமது ரிஃபாத் சாருக் 'இந்தியாவின் இளம் விஞ்ஞானி' என அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா (NASA) பாராட்டியுள்ளது. இவர் தமிழ்நாட்டின் கரூர் மாவட்டம் பள்ளப்பட்டியில் மேல்நிலை வகுப்பு பயிலும்போதே செயற்கைக்கோள் ஒன்றை உருவாக்கினார். இதன் எடை 64 கிராம் மட்டுமே. இது 240 மணிநேரம் விண்ணில் பறக்கக்கூடியது. இதற்கு அந்த மாணவர் வைத்த பெயர் 'கலாம் சாட்'. இதுவே உலகின் எடை குறைந்த செயற்கைக்கோள். இந்தச் செயற்கைக்கோளை நாசா விண்ணில் ஏவியது. மிக இளம் வயதிலேயே இச்சாதனையைச் செய்த மாணவன் முகமது ரிஃபாத் சாருக் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

## 20.6 கேட்டல் கருத்தறிதல்

### இணையம்வழித் தமிழ்

கல்வியாளர், அறிவியலாளர், தமிழறிஞர், கவிஞர், நூலாசிரியர், பேராசிரியர் எனப் பன்முக ஆளுமையாக விளங்கியவர் வா. செ. குழந்தைசாமி. இவர் உலகெங்கும் பரந்துபட்டு வாழும் தமிழர்களின் அடையாளத்தைத் தமிழ்மொழியின் மூலம் மட்டுமே தக்கவைத்துக்கொள்ள முடியும் என்றார். அந்த நோக்கத்தில் தமிழைப் புலம்பெயர்ந்த தமிழர்களும் எளிதாகக் கற்க, இணையத் தமிழ் எழுத்துகளைச் சீரமைக்க முன்னோடியாக இருந்தார்.

தமிழ்நாட்டில் கணினித்தமிழ் வேரூன்றத் தொடங்கும்போது தமிழ்நாடு அரசு நாடிய குறிப்பிட்ட சில அறிஞர்களுள் ஒருவர் இவர். இணையம் வழியாகத் தமிழைக் கற்பிக்க நிறுவப்பட்ட தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் நிறுவனத்தலைவராக வழிகாட்டினார். தமிழில் உயர்மட்ட அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் கற்பிப்பதில் பெருமுனைப்பு கொண்டு பல முயற்சிகளைத் தொடங்கினார். பல துறைகளின் ஆங்கிலக் கலைச்சொற்களைத் தொகுத்து அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்த பெரும்பணியை இவர் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் செயல்படுத்தினார். தமிழைச் செம்மொழியாக இந்திய ஒன்றிய அரசு அறிவித்ததில் இவரது பங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1980ஆம் ஆண்டு இவரது தமிழ்த்தொண்டுகளைப் பாராட்டி, கௌரவ முனைவர் பட்டமளித்தது.

கவிஞர் குலோத்துங்கன் என்ற பெயரில் கவிதைகளை எழுதினார். அறிவியல், தொழில்நுட்பம், வரலாறு, இலக்கியம் என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகளை எழுதிக் குவித்தார். இவரது 'அறிவியல் தமிழ்', 'வாழும் வள்ளுவம்', 'உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் தமிழ்' ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. 'வாழும் வள்ளுவம்' நூலுக்காக இவர் சாகித்ய அகாதமி விருது பெற்றார். கல்வி மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் இவரது தொண்டிற்காக பத்மஸ்ரீ, பத்மபூஷண் ஆகிய விருதுகளை இந்திய அரசு அளித்துச் சிறப்பித்தது. இவரது தொழில்நுட்பத் தலைமையையும் தொண்டையும் பாராட்டி காமன்வெல்த் நாடுகளின் அமைப்பு விருது வழங்கியது.

## வினாக்கள்

1. பரந்துபட்டு வாழும் தமிழர்கள் தம் அடையாளத்தைத் தமிழ்மொழியின் மூலம் மட்டுமே தக்கவைத்துக்கொள்ள முடியும் என்றவர் யார்?
2. தமிழ்நாடு அரசின் எந்நிறுவனத்தில் நிறுவனத்தலைவராக வா. செ. குழந்தைசாமி பொறுப்பேற்றார்?
3. வா. செ. குழந்தைசாமிக்கு இந்திய அரசு வழங்கிய விருதுகள் யாவை?
4. வா. செ. குழந்தைசாமி எந்தப் புனைபெயரில் கவிதைகளை எழுதினார்?
5. 1980ஆம் ஆண்டு வா. செ. குழந்தைசாமிக்குக் கௌரவ முனைவர் பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம் எது?

## 20.7 மொழிபெயர்ப்போம்

Thomas Alva Edison was considered a great personality in the world of inventions. His inventions in a wide range of fields changed the lifestyle of people. Using his innovations he also became a successful businessman. His contributions have had a significant influence on modern life.

---

---

---

## 20.8 அறிந்துகொள்வோம்

1. விஞ்ஞானி - Scientist
2. பகுத்தறிவு - Rationality
3. ஆற்றல் - Ability
4. விஞ்ஞானம் - Science
5. வல்லுநர் - Expert
6. குடியரசுத்தலைவர் - President
7. இளங்கலைப் பட்டம் - Bachelors degree
8. விண்வெளிப் பொறியியல் - Aerospace Engineering
9. உதவித்தொகை - Scholarship
10. விமானி - Pilot
11. விமானப்படை - Air Force
12. ஏவுகணை - Missile
13. செயற்கைக்கோள் - Satellite

## 20.9 உயர்நிலைத்திறன்

**பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தி, மேடையில் பேசுவதற்கேற்ற உரை உருவாக்குக.**

**அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆக்கத்திற்கா? அழிவிற்கா?**

### அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆக்கத்திற்கே!

மக்களின் நாகரிக வாழ்க்கைக்கு அடிப்படை – புதுமையான கண்டுபிடிப்புகள் – அன்றாட வாழ்க்கையில் பயன் மிகுதி – வேலை எளிமை – மனிதர்களுக்குப் பேருதவி – மண்ணுக்குள் சுரங்கம் – விண்ணைத் தாண்டிய பயணம் – செயற்கைக்கோள் உதவி – தகவல் தொழில்நுட்பம் – நாடுவிட்டு நாடு, கண்டம்விட்டுக் கண்டம் - பயணம் - அனைத்துத் துறைகளிலும் பயன்பாடு.


### அறிவியல் கண்டுபிடிப்புகள் அழிவிற்கே!

மனித உழைப்பு குறைவு – உடற்பயிற்சி இன்மை – கண்டுபிடிப்புகளைக் கவனமாகக் கையாளுதல் – கவனம் சிதறினால் மரணம் – அணுகுண்டு வெடிப்பு – போர்க்கப்பல் – ஏவுகணைத் தாக்குதல் – உயிரிழப்பு.

அறிவியல் - முறையான பயன்பாடு – ஆக்கத்திற்கான வழி.

## 20.10 செயல் திட்டம்

உங்களைக் கவர்ந்த ஐந்து அறிவியல் கண்டுபிடிப்புகள் பற்றி எழுதி வருக.



பாடம்
21

## 21.1 பேசுவோம்

### கலந்துரையாடுவோம்

உங்கள் அன்றாட வாழ்வில் அறிவியல் / தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து வகுப்பு நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 21.2 படிப்போம்

### மணிமேகலை

இயற்கையில் உருவான வளங்களை அதன் ஆற்றலை வீணடிக்காமல் மனிதப் பயன்பாட்டிற்கு ஏற்றாற்போல வடிவமைக்கும் தொழில்நுட்பத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கினர். ஏரி, குளங்களில் மழைநீரைச் சேகரித்தும் ஆற்றுநீரை அணைகட்டித் தேக்கியும் நிலத்தடிநீரைக் கிணறு வெட்டி இயந்திரம் மூலம் இறைத்தும் பயன்படுத்தினர். ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில் இது தொடர்பான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

மன்னவன் தானும் மலர்க்கணை மைந்தனும்
இன்இள வேனிலும் இளங்கால் செல்வனும்
எந்திரக் கிணறும் இடுங்கல் குன்றமும்
வந்துவீழ் அருவியும் மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையும் கரப்புநீர்க் கேணியும்
ஒளித்துறை இடங்களும் பளிக்குஅறைப் பள்ளியும்
யாங்கணும் திரிந்து தாழ்ந்து விளையாடி....

(சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை 102 – 106)

## பாடலின் பொருள்

அரசனும் மலராகிய அம்புகளை உடைய மன்மதனும் இன்பம் பயக்கும் இளவேனில் காலத்தில் இளந்தென்றல் வீசும் அழகிய சோலையில் விளையாடினர். அச்சோலையானது நீரை இறைப்பதற்கான இயந்திரம் அமைந்த கிணறு, கற்களால் அமைந்த சிறுகுன்று, வந்து வீழும் அருவி, பூத்துக் குலுங்கும் அழகிய பந்தல் ஆகியவற்றை உடையது. மேலும், நீர் நிரம்பிய குளத்தையும், மறைந்திருக்கும் நீரை உடைய கிணற்றையும் ஒளிந்து விளையாடுவதற்குரிய மறைவான இடங்களையும் பளிங்குக் கற்களால் ஆன அறையுள்ள இடத்தையும் கொண்டது. இவ்வாறு மணிமேகலை கூறுகிறது.

## நூலைப் பற்றி

தமிழில் தோன்றிய பௌத்தக் காப்பியங்களுள் முதன்மையானது மணிமேகலை. இது முப்பது காதைகளைக் கொண்டது. மேற்கண்ட பாடல் அடிகள் சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதையில் இடம்பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக்காப்பியங்கள் என அழைக்கப்படுகின்றன.

## பொருள் அறிவோம்

1. கணை - அம்பு
2. குன்றம் - மலை
3. பொய்கை - இயற்கையாக அமைந்த நீர்நிலை / குளம்
4. கேணி - கிணறு
5. பளிக்கறை - பளிங்கால் ஆன அறை

## பயிற்சிகள்

### அ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. முப்பது காதைகளைக் கொண்டது மணிமேகலை. (சரி/தவறு)
2. கணை என்பதன் பொருள் கிணறு. (சரி/தவறு)
3. மணிமேகலை ஒரு பௌத்தக் காப்பிய நூல். (சரி/தவறு)
4. 'எந்திரக் கிணறும் இடுங்கற் குன்றமும்' என்ற பாடல் அடி பளிக்கறை புக்க காதையில் இடம்பெற்றுள்ளது. (சரி/தவறு)
5. திருத்தக்க தேவர் எழுதிய நூல் மணிமேகலை. (சரி/தவறு)

### ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(இயந்திரம், இரட்டைக்காப்பியங்கள், மணிமேகலை)

1. தமிழில் தோன்றிய பௌத்தக் காப்பியங்களில் முதன்மையானது ______.
2. நிலத்தடி நீரைக் கிணறு வெட்டி ______ மூலம் இறைத்தனர்.
3. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ______ என அழைக்கப்படுகின்றன.

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இரட்டைக் காப்பியங்கள் எவை?
2. பொருள் தருக.

   அ) கேணி ஆ) பொய்கை
3. நீரை எந்தெந்த வகைகளில் தேக்கிப் பயன்படுத்தலாம்?
4. மணிமேகலை – குறிப்பு வரைக.
5. சோலையின் வருணனை குறித்து எழுதுக.

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. நீர்நிலைகள் சார்ந்த தொழில்நுட்பம் குறித்து மணிமேகலை கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## 21.3 படிப்போம்

### இயற்கை மொழி ஆய்வு

மனித மூளையின் வியக்கத்தக்க படைப்புகள்தான் மனிதரின் இயற்கை மொழிகள். இவற்றை வளர்த்தெடுக்க மனிதச் சமுதாயம் தொடர்ந்து முயன்றுள்ளது. அதன் ஒரு பயனே இயற்கை மொழிகளுக்கான வரிவடிவங்கள். இவை, காலம் கடந்தும் இடம் கடந்தும் தனது கருத்துகளை நிலைபெறச் செய்ய மனிதன் உருவாக்கிய மொழித் தொழில்நுட்பமாகும். இவை பானைகளிலும் பாறைகளிலும் எழுத்துகளாகத் தொடங்கித் தட்டச்சு, அச்சு, கணினி எழுத்துருக்கள் வரை வளர்ச்சி அடைந்துள்ளன.

**மின்தமிழ்**

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர், கணினியில் தமிழை உள்ளீடு செய்வதற்கே வசதி கிடையாது. மெல்லமெல்லத் தமிழை ரோமன் எழுத்துகளில் உள்ளீடு செய்து, அதைத் தமிழ் எழுத்துருக்களில் மாற்றும் வசதி உருவாக்கப்பட்டது. பின்னர், ஆதமி போன்ற மென்பொருள்கள் உருவாக்கப்பட்டன. தமிழ் எழுத்துருக்களும் தமிழ் விசைப்பலகைகளும் உருவாக்கப்பட்டன. இதன் பயனாக, நேரடியாகவே தமிழைக் கணினியில் உள்ளீடு செய்யும் வசதி ஏற்பட்டது.

தமிழில் இணையதளங்கள், வலைப்பூக்கள் தோன்ற ஆரம்பித்தன. அச்சில் இடம்பெற்ற அனைத்தும் கணினியிலும் இடம்பெற்றன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒருங்குறிக் குறியேற்றம் Unicode Encoding (யூனிகோட் என்கோடிங்) பன்னாட்டுக் கணினி நிறுவனங்களின் வணிக முயற்சிகளால் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழுக்குத் தனியே ஒருங்குறிக் குறியேற்ற எண்கள் வழங்கப்பட்டன. இதன் பயனாக, தற்போது மின்னணுச் சாதனங்களில் தமிழை உள்ளீடு செய்ய முடிகிறது.

**அடுத்த கட்ட வளர்ச்சி**

கல்வெட்டு, ஓலைச்சுவடி, அச்சு, கணினி ஆகியவற்றால் தங்களிடம் பதியப்பட்டவற்றைப் புரிந்துகொள்ள முடியாது; சேமித்துவைக்க மட்டுமே முடியும். இதைத் தன்முனைப்பில்லாத, செயலூக்கமில்லாத மொழித் தொழில்நுட்பம் எனலாம். மொழியைப் புரிந்துகொண்டு கணினி செயல்பட்டால் அதுவே தன்முனைப்புள்ள, செயலூக்கமுள்ள மொழித் தொழில்நுட்பமாகும். இது இயந்திர மனிதர் போன்றது.

**மொழித் தொழில்நுட்பக் கருவிகள்**

MS Word (எம்.எஸ். வோர்டு) போன்ற மென்பொருள்களைக் கொண்டு ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யும்போது எழுத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகள் இருந்தால் உடனே அவை கண்டறியப்பட்டு அடிக்கோடிட்டுக் காட்டப்படுகின்றன. நாம் அவற்றைத் திருத்திக்கொள்ளவும் உதவுகின்றன. தானியங்கிச் சொற்பிழை திருத்தி, இலக்கணப் பிழை திருத்திகள் இவற்றில் இடம்பெற்றுள்ளன.

டிராகன் போன்ற சில மென்பொருள்கள், நாம் ஆங்கிலத்தில் பேசினால் தட்டச்சு செய்துவிடுகின்றன. இவற்றைப் 'பேச்சு எழுத்து மாற்றி' என்று அழைக்கின்றனர். கணினியில் உள்ளதை அப்படியே நமக்கு வாசித்துக்காட்டும் மென்பொருள்களும் உள்ளன. இவற்றை 'எழுத்து பேச்சு மாற்றி' என்று அழைக்கின்றனர். இதையும் தாண்டி, சில பக்கங்களைக் கணினியில் உள்ளீடு செய்தால் அவற்றில் உள்ள கருத்துகளைப் புரிந்துகொண்டு, நமக்குக் கூறும் மென்பொருள்களும் இருக்கின்றன. இதைப் 'பனுவல் சுருக்கக் கருத்துருவாக்கம்' என்று அழைக்கின்றனர். தற்போது ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்க்கும் மென்பொருள்கள் உருவாகியுள்ளன.

### கணினி வளர்ச்சியில் தமிழுக்கான இடம்

பல மேலைநாட்டு மொழிகளின் சொற்களஞ்சிய அறிவும் இலக்கண அறிவும் கணினிக்கு நிரல்களாக உருவாக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தமிழ் மொழிக்கும் செயல்படுத்த வேண்டும். தமிழ் இலக்கண நூல்களும் இன்றைய மொழியியல் ஆய்வுகளும் மனித மூளைக்காக உருவாக்கப்பட்டவை. அவற்றை அப்படியே கணினிக்குக் கொடுத்தால் கணினியால் புரிந்துகொள்ள முடியாது. கணினியின் மின்னணுச் சில்லுகளுக்குப் புரியக்கூடிய கணினி நிரல்களாக அவை மாற்றப்பட வேண்டும். தமிழ் அகராதிகள் எல்லாம் கணினிக்குப் புரியக்கூடிய வகையில் மின்னகராதிகளாக மாற்றப்பட வேண்டும். அதற்கான துறையாக, கணினி மொழியியல் மற்றும் மொழித் தொழில்நுட்பத் துறை இன்று வளர்ந்துவருகிறது.

### இன்றைய தலையாய பணி

இன்று மின்தமிழ் வளர்ச்சியில் தமிழை உள்ளீடு செய்வதற்கான பணிகள் பெருமளவில் வெற்றி பெற்றுள்ளன. தமிழ் எழுத்துருக்கள், விசைப்பலகைகள் உருவாக்கத்தில் பல சிக்கல்கள் தீர்க்கப்பட்டுவிட்டன. அதையொட்டி, தமிழ் விக்கிப்பீடியா, வலைப்பூக்கள், இணையதளங்கள் பெருகிக்கொண்டிருக்கின்றன. இவையெல்லாம், வரவேற்கத்தக்க தமிழ்ப்பணிகள். ஆனால், இவையெல்லாம் கணினித் தமிழ் வளர்ச்சியின் முதல் கட்டமே ஆகும். அடுத்த கட்ட வளர்ச்சியான தன்முனைப்பும் செயலூக்கமும் உள்ள மொழித் தொழில்நுட்பத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

## பொருள் அறிவோம்

1. உள்ளீடு - கணினியில் பதிவுசெய்தல்
2. ஒருங்குறி - பொதுவான குறிமுறை
3. செயலி - பயன்பாட்டு மென்பொருள்
4. அகராதி - சொற்பொருள் தொகுப்பு
5. எழுதிகள் - எழுத்துகளை உள்ளீடு செய்யும் முறை

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(பேச்சு எழுத்து மாற்றி, இயற்கை மொழிகளை, மின்னகராதிகளாக, விசைப்பலகைகள், எழுத்து பேச்சு மாற்றி)

1. தமிழ் ________________ உருவாக்கப்பட்டதன் பயனாக, நேரடியாகவே தமிழைக் கணினியில் உள்ளீடு செய்யும் வசதி ஏற்பட்டது.
2. கணினியில் உள்ளதை அப்படியே நமக்கு வாசித்துக்காட்டும் மென்பொருளை ________________ என்று அழைக்கின்றனர்.
3. தமிழ் அகராதிகள் எல்லாம் கணினிக்குப் புரியக்கூடிய வகையில் ________________ மாற்றப்பட வேண்டும்.
4. மனிதரின் ________________ வளர்த்தெடுக்க மனித சமுதாயம் தொடர்ந்து முயன்றுள்ளது.
5. நாம் பேசினால் அவை தட்டச்சு செய்யப்படுவதை ________________ என்று அழைக்கின்றனர்.

### ஆ) சேர்த்து எழுதுக.

1. மென்மை + பொருள் =
2. காலம் + தோறும் =
3. எழுத்து + உரு =
4. பேச்சு + உணரி =
5. மயங்கு + ஒலிகள் =

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழ் மொழியைக் கணினியில் உள்ளீடு செய்வது குறித்து விளக்குக.
2. செயலூக்கமுள்ள மொழித் தொழில்நுட்பம் என்றால் என்ன?
3. பிழை திருத்திக் கருவிகள் குறித்து எழுதுக.
4. மின்தமிழ் வளர்ச்சி குறித்து விளக்குக.
5. மனிதன் தனது கருத்துகளை நிலைபெறச் செய்ய உருவாக்கிய மொழித் தொழில்நுட்பம் எதுவரை வளர்ந்துள்ளது?

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. மொழித் தொழில்நுட்பத்தில் கணினித் தமிழின் வளர்ச்சி நிலைகளைத் தொகுத்து எழுதுக.

## 21.4 தெரிந்துகொள்வோம்

### வழுவமைதி

| | | |
|---|---|---|
| வழு | = | குற்றம் / பிழை |
| அமைதி | = | ஏற்றுக்கொள்வது |
| வழுவமைதி | = | குற்றமாக இருந்தாலும் ஏதாவது காரணம் கருதி ஏற்றுக்கொள்வது |

திணை முதலாகக் கூறப்பட்டவற்றுள் ஒன்று வேறொன்றாக மயங்கி வந்தாலும், சான்றோரால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயின் அது வழுவமைதி ஆகும்.

ஒருவன் தன் பசுமாட்டைப் பார்த்து 'என் லட்சுமி மூன்று லிட்டர் பால் தருவாள்' என்று கூறுவது, அஃறிணையை உயர்திணையாய்க் கருதிக் கூறுதலாகும். இவ்வாறு கூறினாலும், உயர்வு கருதி ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

வழுவமைதி திணை வழுவமைதி, பால் வழுவமைதி, இட வழுவமைதி, கால வழுவமைதி, மரபு வழுவமைதி என ஐந்து வகைப்படும்.

## திணை வழுவமைதி

அஃறிணையை உயர்திணையாகக் கூறுவதும் உயர்திணையை அஃறிணையாகக் கூறுவதும் திணை வழுவமைதி ஆகும். மகிழ்ச்சி, உயர்வு, மிகுதி, சிறப்பு, சினம், இழிவு முதலிய காரணங்களால் திணை வழுவமைதி ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

### உயர்வு

நத்தையாரே நத்தையாரே எங்கே போறீங்க? (அஃறிணை, உயர்திணை ஆயிற்று)

### இழிவு

முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா (உயர்திணை, அஃறிணை ஆயிற்று)

## பால் வழுவமைதி

ஆண்பாலைப் பெண்பாலாகவும் பெண்பாலை ஆண்பாலாகவும் கூறுவது பால் வழுவமைதி. மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, சினம், இழிவு முதலிய காரணங்களால் பால் வழுவமைதி ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

## மகிழ்ச்சி

மகளைப் பார்த்துத் தந்தை, 'வாடா செல்லமே' என்றழைப்பது.

பெண்பாலை ஆண்பாலாகக் கருதி அழைப்பதால் இது பால் வழுவமைதி ஆகும்.

## சிறப்பு

'தாய்க்குத் தாயாகிய இறைவன்' (ஆண்பாலுக்குப் பெண்பால்) விகுதி கொண்டு அழைப்பதால் இது பால் வழுவமைதி ஆகும்.

## இட வழுவமைதி

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடத்திற்குரிய சொற்கள் இடம்மாறி அமைந்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அஃது இட வழுவமைதி ஆகிறது. சூழல் காரணமாக இட வழுவை ஏற்றுக்கொள்வது, இட வழுவமைதி ஆகும்.

'வீரனின் தாய் அழுவேனா?'

இத்தொடரில், வீரனின் தாய் என்ற படர்க்கைப் பெயர், 'அழுவேனா'? என்னும் தன்மை வினைகொண்டு முடிந்தது எனவே, இது இட வழுவமைதி ஆகும்.

## கால வழுவமைதி

முக்காலத்தினுள் ஒன்று மற்றொன்றாக மயங்கி வந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுமாயின் அது கால வழுவமைதி ஆகும். விரைவு, மிகுதி, தெளிவு, இயல்பு ஆகிய காரணங்களால் முக்காலங்களுள் ஒன்று மற்றொன்றாக மயங்கிவரும்.

ஒருவர் தன்னை அழைக்கும்போது, தயாராக இல்லையாயினும் உடனே விடையளிக்கும் பொருட்டு, 'இதோ வந்துவிட்டேன்' என்று கூறுவது கால வழுவமைதி ஆகும். இத்தொடரில், எதிர்கால நிகழ்வை இறந்த காலத்தில் சொல்வதாகும். இத்தொடர், விரைவு காரணமாக எழுந்தது.

## மரபு வழுவமைதி

காலம் காலமாகப் பின்பற்றப்படும் மரபு மீறப்பட்டாலும் அது ஏற்றுக்கொள்ளப்படுமாயின் மரபு வழுவமைதியாக ஆகும்.

'கத்தும் குயிலோசை எந்தன் காதினில் வந்து விழ வேண்டும்'

குயில் கூவும் என்பதே மரபு. ஆனால், அழகியல் கருதி 'கத்தும் குயில்' என்று பாரதியார் பயன்படுத்தி உள்ளார். இது மரபு வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வழுவமைதி என்பதன் பொருள்

அ) பிழையை மறுப்பது ஆ) பிழையைக் காரணம் கருதி ஏற்றுக்கொள்வது

இ) பிழையைத் திருத்துவது ஈ) பிழையின்றி எழுதுவது

2. சிறு வயதில் இங்குதான் விளையாடுவோம் என்பது

அ) கால வழுவமைதி ஆ) இட வழுவமைதி

இ) மரபு வழுவமைதி ஈ) திணை வழுவமைதி

3. 'நாளை சிங்கப்பூருக்கு வருகிறேன்' என்பது

அ) திணை வழுவமைதி ஆ) மரபு வழுவமைதி

இ) இட வழுவமைதி ஈ) கால வழுவமைதி

4. 'நத்தையாரே நத்தையாரே' என்பது

அ) கால வழுவமைதி ஆ) இட வழுவமைதி

இ) மரபு வழுவமைதி ஈ) திணை வழுவமைதி

5. 'வீரனின் தாய் அழுவேனா?' என்பது

அ) கால வழுவமைதி ஆ) இட வழுவமைதி

இ) மரபு வழுவமைதி ஈ) திணை வழுவமைதி

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வழுவமைதி என்பது யாது?
2. திணை வழுவமைதி எக்காரணங்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது?
3. இட வழுவமைதி என்றால் என்ன? சான்று தருக.
4. கீழ்க்காணும் வாக்கியத்தில் அமைந்துள்ளவை எவ்வகை வழுவமைதிகள் எனக் குறிப்பிடுக.

அ) சிறுவயதில் இந்தக் குளத்தில்தான் குளிப்போம்.

ஆ) பசுவை 'என் அம்மை வந்தாள்' எனக் கூறுவது.

இ) அக்கா வந்தது.

## 21.5 மொழியோடு விளையாடுவோம்

### வரிசை மாறிய சொற்களைச் சரியான வரிசையில் அமைப்போம்

முதன்முதலாக தமிழ் இதழ்களில் வெளியிட்டவர் பாரதியார் கருத்துப்படங்களை.

தொகுக்கப்பட்ட நானூறு கொண்டது பாடல்களைக் புறநானூறு.

திருவள்ளுவர் உலகப் பொதுமறை எழுதிய திருக்குறள் அழைப்படுகிறது என.

இலக்கியத்திற்கு இந்தியாவில் ஞானபீடம் உயரிய வழங்கப்படும் விருது.

ஆண்டு 2004ஆம் செம்மொழித் தமிழுக்குச் தகுதி வழங்கப்பட்டது.

### தகவல் துளி

30 வயதில் மூளைச்சாவு அடைந்த ஆன் ஜான்சன் என்ற பெண்மணி, பக்கவாதத்தால் முடக்கப்பட்டார். 48 வயதுவரை அவரால் ஒரு வார்த்தைகூடப் பேச முடியாத சூழலில், இப்போது செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் அவரைப் பேசவைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆன் ஜான்சனின் மூளையில் பேச்சுச் செயல்பாட்டுடன் தொடர்புடைய பகுதிகளோடு 250க்கும் மேற்பட்ட மின்முனைகள் பொருத்தப்பட்டு, இவை கணினியுடன் இணைக்கப்பட்டன. பின்னர், ஆன் ஜான்சனின் குரலை அப்படியே பிரதிபலிக்கும் விதமாக ஒரு அவதார் உருவாக்கப்பட்டது. ஆன் ஜான்சன் என்ன பேச வேண்டுமென நினைக்கிறாரோ அதை இந்த அவதார் பேசும். ஆன் ஜான்சன் போன்ற நபர்கள் சக மனிதர்களுடன் தங்கள் எண்ணங்களைப் பரிமாறிக்கொள்வதற்கான தொழில்நுட்பமாக இது திகழ்கிறது.

## 21.6 கேட்டல் கருத்தறிதல்

### தமிழர் கப்பற்கலை

தமிழர் கப்பற்கலை என்பது கப்பல் கட்டுவது, பராமரிப்பது, செலுத்துவது ஆகிய செயற்பாடுகளில் தமிழர்களின் தொழில்நுட்பத்தைக் குறிக்கிறது. பழங்காலந்தொட்டுக் கப்பற்கலையிலும் கடல் பயணத்திலும் தமிழர்கள் தேர்ந்து விளங்கினர். இத்துறை வல்லுநர்கள் கம்மியர் என்று அழைக்கப்பட்டனர்.

தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் கடலும் கலமும் இயல்பாய்க் கூறப்பட்டிருப்பதிலிருந்து, கடலைத் தமது வாழ்க்கையின் ஒரு பகுதியாகத் தமிழர்கள் அமைத்துக்கொண்டதை அறிகிறோம். 'நாவாய் சாத்திரம்' என்பது 18ஆம் நூற்றாண்டில் கப்பற்கலை பற்றி வெளிவந்த தமிழ் நூல் ஆகும். கடலின் இயற்பியல் மாற்றங்கள், அவை நிகழும் பருவங்கள், அதன்படி கலங்களைச் செலுத்துதல் பற்றிய தகவல்களை இந்த நூல் தருகிறது. கப்பல் அல்லது மரக்கலம் என்பதற்கு மற்றுமொரு சொல் 'நாவாய்' ஆகும்.

சங்ககாலம் தொட்டே தமிழர்கள் பயன்படுத்திய கலம் ஓட்டும் தொழில்நுட்பத்தில் ஒன்று 'ஓதம் அறிதல்'. ஓதத்தைக் (Tide) கழி ஓதம் (Tide towards the Shore - High Tide), கடல் ஓதம் (Tide towards the Sea - Low Tide) என இரண்டாகப் பிரித்தனர். கழி ஓதத்தின்போது கடல் நீரானது கரையை நோக்கி நகரும். ஓதம் குறையும்போது கடலை நோக்கி நீர் நகரும் என்பதால் அப்போதுதான் கப்பல்களைக் கடலுக்குள் செலுத்துவர். இவ்வாறு கப்பல் கட்டுதல் முதல் கப்பல் செலுத்துதல் வரையிலான பல்வேறு தொழில்நுட்பங்களை 'நாவாய் சாத்திரம்' பேசுகிறது.

### வினாக்கள்

1. கப்பல் என்பதைக் குறிக்கும் மற்றுமொரு சொல்?
2. கப்பல் கட்டுதல் முதல் கப்பல் செலுத்துதல் வரையிலான பல்வேறு தொழில்நுட்பங்களைக் கூறும் நூல் எது?
3. பழங்காலந்தொட்டுத் தமிழர்கள் எவற்றில் தேர்ந்து விளங்கினர்?
4. ஓதம் அறிதல் என்றால் என்ன?
5. ஓதத்தின் பிரிவுகள் யாவை?

## 21.7 மொழிபெயர்ப்போம்

மொழியின் எழுத்து வடிவம் என்பது மனிதர்கள் உருவாக்கிய முதல் மொழித் தொழில்நுட்பமாகும். இதன் மூலம் தங்களுடைய கருத்துகளைக் காலம் கடந்து, இடம் கடந்து நிலைபெறச் செய்தார்கள். பானைகள், பாறைகள், கற்கள், ஓலைச்சுவடிகள்

என்று பல்வேறு ஊடகங்களில் மனிதர்கள் எழுதிவைக்கத் தொடங்கினர். அதன் இன்றைய வளர்ச்சியே அச்சு, தட்டச்சு மற்றும் கணினி எழுத்துருக்கள் ஆகும்.

## 21.8 அறிந்துகொள்வோம்

1. இயந்திரம் – Machine
2. இயற்கை மொழி – Natural Language
3. பகுப்பாய்வு – Analysis
4. தொழில்நுட்பம் – Technology
5. எழுத்துருக்கள் – Fonts
6. மென்பொருள்கள் – Softwares
7. அச்சு – Print
8. வலைப்பூக்கள் – Blogs
9. மின்னணுச் சாதனம் – Electronic device
10. சொற்பிழை – Spell checker
11. மொழிபெயர்ப்பு – Translation
12. சொற்களஞ்சியம் – Glossary
13. மின்னகராதி – Electronic dictionary
14. கணினி மொழியியல் – Computational Linguistics
15. மொழித் தொழில்நுட்பம் – Language Technology

## 21.9 உயர்நிலைத்திறன்

**பின்வரும் கவிதையைப் படித்து அதன் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

ஒன்றும் சுழியும் கணினி மொழியாம்
ஒன்றுடன் சுழியம் ஒத்துழைக்காதெனில்
ஒவ்வொரு முடிவும் ஒவ்வாது முடியும்
ஒத்த கருத்தால் உலகம் ஒத்துக்கொண்ட முறையாம்

விசைப்பலகை வழியே உந்து செயல் நுழையும்
ஒவ்வொன்றும் கணினி மின் திரையில் தெரியும்
பார்த்தவாறே வார்த்தையால் தூண்டல் செய்யின்
பலமான பலபல வெளியிடுகளைக் கொடுக்கும்

நிலையான மொழியென இதற்குப் பல்வேறு உண்டு
நிதிக்கேற்று இதனில் வகைகளும் உண்டு
தினையளவு இதற்குத் திட்டங்கள் கொடுத்தால்
பனையளவு நமக்கு இது பல பயனைக் கொடுக்கும்.

- நன்னாடன்

## 21.10 செயல் திட்டம்

உங்களைக் கவர்ந்த ஏதேனும் ஒரு கணித்தமிழ் மென்பொருள் குறித்துச் செயல் விளக்கம் தருக.

பாடம் 22

## 22.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

உங்கள் பகுதியில் திரைப்படத் துறையின் வளர்ச்சி நிலைகள் குறித்து வகுப்பு நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 22.2 படிப்போம்

### பாரத தேசம்

ஒரு நாட்டின் வளர்ச்சி வெவ்வேறு காரணிகளால் அளவிடப்படுகிறது. அதில் மிகவும் முக்கியமானது தொழில்துறையாகும். தொழில்நுட்பத் திறனில் சிறந்து விளங்கும் நாடுகளால்தான் ஆலைகளைப் பெருக்க முடியும்; பொருளாதாரத் தன்னிறைவை எட்ட முடியும். இது குறித்து மகாகவி பாரதியார் குறிப்பிடுவனவற்றை இந்தப் பாடப்பகுதியில் காணலாம்.

பாரத தேசம்என்று பெயர்சொல்லுவார் - மிடிப்
பயம்கொல்லுவார் துயர்ப் பகைவெல்லுவார்.

காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கு ஓர் கருவி செய்வோம்
ராசபுத்தானத்து வீரர் தமக்கு
நல்இயல் கன்னடத்துத் தங்கம் அளிப்போம் (பாரத)

பட்டினில் ஆடையும் பஞ்சினில் உடையும்
பண்ணி மலைகள் என வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவருவார்
காசினி வணிகருக்கு அவை கொடுப்போம் (பாரத)

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலைசாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம் (பாரத)

குடைகள் செய்வோம் உழுபடைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும்பு ஆணிகள் செய்வோம்
நடையும் பறப்பும்உணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம் (பாரத)

மந்திரம் கற்போம் வினைத்தந்திரம் கற்போம்
வானை அளப்போம் கடல்மீனை அளப்போம்
சந்திர மண்டலத்துஇயல் கண்டு தெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம் (பாரத)

காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம் (பாரத)

- பாரதியார்

## பாடலின் பொருள்

பாரத தேசம் என்று சொல்லும்போதே வறுமை, பயம், துயர், பகை ஆகியவற்றை வெல்லும் வல்லமையை மக்கள் பெறுவர்.

காசியிலே அறிஞர்கள் பேசும் விரிவுரைகளைத் தெற்கேயுள்ள காஞ்சியில் இருந்தபடியே கேட்கும் கருவியை நாம் செய்ய வேண்டும். ராஜ புத்திர வீரர்களுக்குக் கன்னட தேசத்துத் தங்கத்தைப் பரிசளிக்க வேண்டும்.

பட்டு உடை, பருத்தி உடை எல்லாம் செய்து மலை மலையாகக் குவித்துவைத்து, அவற்றை உலகம் முழுவதுமிருந்து வரும் வணிகர்களிடம் விற்று நம் நாட்டுப் பொருளாதாரத்தைப் பெருக்க வேண்டும்.

ஆயுதங்களும் காகிதங்களும் நாமே செய்ய வேண்டும். இதற்காக ஆலைகளும் தொழில் வளர்வதற்கேற்ற கல்விச்சாலைகளும் நம் நாட்டிலேயே உண்டாக்க வேண்டும். ஓயக் கூடாது, தலைசாயக் கூடாது. உண்மைகளைப் பேச வேண்டும். கொடையுள்ளம் கொள்ள வேண்டும்.

குடைகள், உழுபடைகள், கோணிச்சாக்குகள், இரும்பு ஆணிகள் ஆகியவற்றையும் நாம் செய்ய வேண்டும். விண்ணிலும் மண்ணிலும் செல்லும் வாகனங்கள் செய்ய வேண்டும். பிரம்மாண்டமான கப்பல்கள் செய்ய வேண்டும்.

நாம் மந்திரங்கள் கற்பதுபோல் கைவினைத்திறனையும் கற்போம். ஆகாயத்தை அளப்போம். கடலை அளப்போம். நாட்டிலே சாலைகளும் வீதிகளும் சந்திகளும் பெருக்குவதோடு, சந்திர மண்டல இயல்புகளையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

காவியங்கள், கலைகள், ஓவியங்கள் செய்ய வேண்டும். காடு வளர்க்க வேண்டும். அதோடு, ஊசிகளும் செய்ய வேண்டும். உலகத் தொழில் அனைத்தும் மனமாரச் செய்ய வேண்டும். இவ்வாறு ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் தொழில், தொழில்நுட்பம், கலை, அறிவியல் ஆகியவற்றை எடுத்துக்கூறுகிறார் பாரதியார்.

## நூலைப் பற்றி

பாரதியார் கவிதைகளில் 'பாரத தேசம்' என்னும் தலைப்பில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது. இந்திய விடுதலைக்காகப் பாரதியாரால் பாடப்பட்ட 'வந்தே மாதரம் என்போம்', 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி, 'மன்னும் இமய மலையெங்கள்' ஆகிய மூன்று பாடல்களும் 'சுவதேச கீதங்கள்' என்ற தலைப்பில் அச்சிடப்பட்டன. பாரதியின் அச்சேறிய முதல் நூல் இதுதான். பின்னர் மேலும் சில பாடல்கள் சேர்க்கப்பட்டு 14 பாடல்கள் கொண்ட சிறு நூலாக இது வெளிவந்தது. பாரதியார் தமிழ் நவீனக் கவிதைகளின் முன்னோடி ஆவார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன் என்றாலும், சுப்பையா என்று அழைக்கப்பட்டார். மகாகவி, தேசியக்கவி, மக்கள்கவி, முண்டாசுக்கவி என்று அழைக்கப்படுகிறார். பாரதியாரின் படைப்புகள் தமிழ்நாடு அரசால் 1949ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமை ஆக்கப்பட்ட படைப்புகள் பாரதியாருடையவை.

## பொருள் அறிவோம்

1. வண்மை - கொடை
2. ஞாலம் - உலகம்
3. திரவியம் - செல்வம்
4. காசினி - உலகம்
5. பறப்பு - விரைவு
6. இயல் - தன்மை

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(சுப்பிரமணியன், கொடை, பாரதியார், உவந்து, கல்விச்சாலைகள்)

1. வண்மை என்பதன் பொருள் ____________________.
2. ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம். ஆலைகள் வைப்போம் ____________________ வைப்போம்.
3. பாரதியாரின் இயற்பெயர் ____________________.
4. தமிழ் நவீனக் கவிதைகளின் முன்னோடி ____________________.
5. உலகத் தொழில் அனைத்தும் ____________________ செய்வோம்.

### ஆ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. ஒரு நாட்டின் வளர்ச்சியை அளவிடும் காரணிகளில் முக்கியமானது தொழில்துறை. (சரி/தவறு)
2. இந்திய விடுதலைக்காகப் பாரதியாரால் பாடப்பட்ட பாடல்களுள் ஒன்று 'வந்தே மாதரம்'. (சரி/தவறு)
3. பாரதிதாசனுடைய படைப்புகள் தான் இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமை ஆக்கப்பட்டன. (சரி/தவறு)

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.


1. பாரதியாரின் எந்த மூன்று பாடல்கள் எந்தப் பெயரில் முதலில் அச்சிடப்பட்டன?
2. பாரதியாரின் படைப்புகள் எப்போது நாட்டுடைமை ஆக்கப்பட்டன?
3. பாரதியார் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
4. பாரதியார் எவற்றை வணிகர்களிடம் விற்க வேண்டும் என்கிறார்?

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. நாட்டின் வளர்ச்சி எப்படி இருக்க வேண்டுமென பாரதியார் விரும்புகிறார்?

## 22.3 படிப்போம்

### திரைக்கலை நுட்பங்கள்



திரைப்படம் என்ற கலைவடிவம் இன்று உலகின் மூலைமுடுக்கெங்கும் செல்வாக்கு செலுத்தக்கூடியதாக இருக்கிறது. பலதரப்பட்ட மக்களுக்கு அது திருவிழா போன்ற கொண்டாட்டமாகத் திகழ்கிறது. எண்ணற்ற திறமையான கலைஞர்களின் கூட்டு உழைப்பால் உருவாகும் திரைப்படக் கலையானது பெரும் வணிக நோக்கத்தையும் கொண்டுள்ளது. ஒரு திரைப்படம் உருவாவதற்குப் பயன்படுத்தப்படும் திரைக்கலை நுட்பங்களுள் சிலவற்றை இந்தப் பாடப்பகுதியில் காணலாம்.

**கதை**

திரைப்படத்திற்குக் கதை எழுத நல்ல கற்பனையும் தெளிவாகக் கதை சொல்லும் திறனும் வேண்டும். திரைப்படத்திற்காக எழுதப்படும் கதைக்கு மூன்று நிலைகள் இருக்கின்றன. முதலாவது, கதையின் சுய வடிவம். அதாவது, ஒரு நாவல், சிறுகதை, நாடகம், புராணக்கதையைத் திரைப்படத்திற்காக எடுத்துக்கொள்வது அல்லது திரைப்படத்திற்காகப் புதிதாகக் கதை எழுதுவது. இரண்டாவது, அந்தக் கதையைத் திரைப்படத்திற்காகப் பண்படுத்துதல், அல்லது மாற்றியமைத்தல். மூன்றாவது, காட்சிகளாகக் கதையை எழுதுவது.

**திரைக்கதை**

ஒரு கதை என்பது தொடக்கம் முதல் முடிவு வரை பல்வேறு பகுதிகளாக ஒரு தொடர்ச்சியுடன் எழுதப்பட்டதாக இருக்கும். எழுதப்பட்ட கதையை அப்படியே திரைப்படமாகத் தயாரிக்க முடியாது. எனவே, கதையைத் திரைப்படமாகவோ தொலைக்காட்சித் தொடராகவோ தயாரிப்பதற்கு ஏற்பக் காட்சிகளை மாற்றி, படம் விறுவிறுப்பாக அமையும் விதமாக எழுதுவது திரைக்கதை எனப்படும்.

### இயக்கம்

கதையை ஒவ்வொரு காட்சியாக எழுதி முடித்த பிறகு, இயக்குநர் அவற்றையெல்லாம் அலசிப்பார்த்துப் படத்திற்கு வேண்டிய மாறுதல்களைச் செய்துகொள்வார். பண்படுத்தப்பட்டுக் கதை வசனங்களுடன் இயக்குநர் அதை எப்படிப் படமாக்குவது, எப்படிக் காட்சிகளாகப் பிரிப்பது என்று திட்டம்போட்டுக் கொள்வார். பின்னர், அந்தக் காட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்படும்.

### ஒளிப்பதிவு

திரைப்படமாக உருவாவதற்குத் தயாராக இருக்கும் கதையானது துண்டுதுண்டான காட்சிகளாக ஒளிப்பதிவு செய்யப்படும். இயக்குநர் தன்னுடைய மனத்தில் இருக்கும் காட்சிகளை ஒளிப்பதிவாளரின் உதவியுடன் பதிவுசெய்து கொள்வார். காட்சியைப் படம் பிடிப்பதற்கு ஒளி மிகவும் முக்கியம். திரைப்படத்தைப் பொறுத்தவரை இயற்கையான ஒளியில், செயற்கையான ஒளியில் என இரண்டு விதமாக ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன.

### ஒலிப்பதிவு

ஒளிப்பதிவின்போது திரைப்படங்கள் பொதுவாக மௌனப் படங்களாகவே பதிவாகின்றன. கதாபாத்திரங்கள் பேசும் வசனங்களும், காட்சிகளுக்குத் தேவைப்படும் இதர ஒலிகளும் பின்னணியில் இணைக்கப்படும். திரைப்படத்தில் ஒளியும் ஒலியும் ஒரு வாக்கியத்தில் இருக்கும் எழுவாயும் பயனிலையும் போன்றது. இதனால் அதற்குப் பலம், அதனால் இதற்குப் பலம்.

### படத்தொகுப்பு

ஒளிப்பதிவு செய்யப்பட்ட திரைப்படக் காட்சிகள் துண்டுதுண்டாகவும் உதிரிகளான காட்சிகளின் தொகுப்பாகவும் இருக்கும். இதை ஓர் ஒழுங்குமுறைக்குள் கொண்டுவரும் பணியே படத்தொகுப்பு ஆகும். வேண்டாத பகுதிகளை நீக்குவது, எந்த வரிசையில் காட்சிகளை அடுக்க வேண்டும் என்பன போன்ற செயல்கள் படத்தொகுப்பில் மேற்கொள்ளப்படும். படத்தொகுப்பாளர் ஏற்கெனவே பதிவுசெய்யப்பட்ட எல்லாத் தனித்தனிக் காட்சித் தொகுப்புகளையும் ஒன்றாகத் தொடுத்துத் திரைப்படத்திற்கு முழு உருவம் கொடுப்பார்.

### இசை

திரைப்படத்தைப் பொறுத்தவரை இசையில் இரண்டு வகை உள்ளது. ஒன்று, பாடல்கள்: இன்னொன்று, பின்னணி இசை. இவை இரண்டும் படத்திற்கு உயிரூட்டுபவையாக இருக்கின்றன. திரைப்படக் காட்சி அமைப்புகளுக்கு ஏற்பப் பின்னணி இசையும் பாடல்களும் இசையமைப்பாளரால் உருவாக்கப்படும். திரைப்படப் பாடல்களைப் பொறுத்தவரை பொதுவாக, ஒவ்வொரு பாட்டிலும் பல்லவி, அனுபல்லவி, இரண்டு சரணங்கள் இருக்கும். தற்காலத்தில் இந்த வரையறைகளை உடைத்து, விதவிதமான கட்டமைப்பில் பாடல்கள் உருவாகின்றன.

மேற்குறிப்பிட்டிருக்கும் திரைப்பட நுட்பங்கள் தவிர இன்னும் பல்வேறு கலை நுட்பங்கள் ஒரு திரைப்படம் உருவாவதற்கு உதவுகின்றன. ஊர் கூடித் தேர் இழுப்பதைப் போன்றதுதான் ஒரு திரைப்படத்தைத் தயாரிக்கும் பணி எனலாம்.

## பொருள் அறிவோம்

1. நுட்பம் - நுணுக்கம்
2. உதிரிகளாக - தனித் தனியாக
3. தொகுப்பு - சேர்த்தல்
4. தொடுத்து - சேர்த்து

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. திரைப்படத்திற்கான கதைக்கு எத்தனை நிலைகள் உள்ளன?

   அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

2. ஒரு கதையைத் திரைப்படத்திற்கு ஏற்பக் காட்சிகளாக எழுதுவது

   அ) ஒளிப்பதிவு ஆ) படத்தொகுப்பு இ) இயக்கம் ஈ) திரைக்கதை

3. பின்வரும் கூற்றுகளில் எவை சரி?

   கூற்று 1: திரைப்படத்திற்குக் கதை எழுத நல்ல கற்பனை தேவை.

   கூற்று 2: காட்சிகளைப் பதிவுசெய்வது இயக்குநரின் பணி.

   கூற்று 3: பல்லவி, அனுபல்லவி ஆகியவை திரைப்படப் பாடலில் இடம்பெறும் பகுதிகள்.

   அ) கூற்று 1, 2 ஆ) கூற்று 2 இ) கூற்று 1, 3 ஈ) கூற்று 2, 3

4. ஒளிப்பதிவிற்குப் பின் காட்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்குவது?

   அ) படத்தொகுப்பு ஆ) திரைக்கதை இ) ஒளிப்பதிவு ஈ) ஒலிப்பதிவு

5. திரைப்படத்தின் ஒலியும் ஒளியும் எவற்றுடன் ஒப்பிடப்படுகின்றன?

   அ) எதுகை மோனை ஆ) எழுவாய் பயனிலை

   இ) முள்ளும் மலரும் ஈ) சொல்லும் பொருளும்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. திரைக்கலை நுட்பங்கள் என்னென்ன?
2. ஒலிப்பதிவு குறித்து எழுதுக.
3. திரைக்கதை என்றால் என்ன?
4. திரையிசை பற்றிக் கூறுக.
5. படத்தொகுப்பு – குறிப்பு வரைக.

### இ) பின்வரும் வினாவுக்கு விரிவாக விடை எழுதுக.

1. திரைக்கலை நுட்பங்களுள் எவையேனும் நான்கினைப் பற்றிக் கூறுக.

## 22.4 தெரிந்துகொள்வோம்

### புணர்ச்சி

நிலைமொழியின் ஈறும் வருமொழியின் முதலும் சேர்ந்து புணர்வது புணர்ச்சி எனப்படும். இப்பகுதியில் உடம்படுமெய்ப்புணர்ச்சி, குற்றியலுகரப்புணர்ச்சி ஆகியவற்றை மட்டும் விரிவாகக் காண்போம்.

### உடம்படுமெய்ப் புணர்ச்சி

நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் வரும் உயிரெழுத்துகளை இணைக்கும் மெய்யெழுத்துகளே உடம்படுமெய்கள் எனப்படும்.

சான்று:

மலை + அருவி = மலை + ய் + அருவி = மலையருவி

இளங்கோ + அடிகள் = இளங்கோ + வ் + அடிகள் = இளங்கோவடிகள்

நிலைமொழி இறுதியில் இ, ஈ, ஐ நின்று, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் யகர உடம்படுமெய் பெற்று வரும்.

| நிலைமொழி | வருமொழி | உடம்படுமெய் தோன்றல் | சொல் |
|---|---|---|---|
| மணி | அழகு | மணி + ய் + அழகு | மணியழகு |
| கலை | ஆகும் | கலை + ய் + ஆகும் | கலையாகும் |

நிலைமொழி இறுதியில் அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ நின்று, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் வகர உடம்படுமெய் பெற்று வரும்.

| நிலைமொழி | வருமொழி | உடம்படுமெய் தோன்றல் | சொல் |
|---|---|---|---|
| பல | அணி | பல + வ் + அணி | பலவணி |
| பூ | இதழ் | பூ + வ் + இதழ் | பூவிதழ் |

நிலைமொழி இறுதியில் 'ஏ' என்னும் எழுத்து நின்று, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் யகர, வகர உடம்படுமெய் பெற்று வரும்.

| நிலைமொழி | வருமொழி | உடம்படுமெய் தோன்றல் | சொல் |
|---|---|---|---|
| சே | அடி | சே + ய் + அடி | சேயடி |
| சே | அடி | சே + வ் + அடி | சேவடி |

## குற்றியலுகரப் புணர்ச்சி

நிலைமொழியின் ஈற்றில் குற்றியலுகரச்சொல் (குறுகி ஒலிக்கின்ற உகரம்) நிற்க, வருமொழி முதலில் உயிரெழுத்து வருமானால் நிலைமொழி ஈற்றில் உள்ள உகரம் கெட்டு மெய்யீறாய் நிற்கும். அந்த மெய்யீற்றின் மேல் வருமொழியின் முதலில் உள்ள உயிரேறிப் புணரும்.

சான்று:

நாடு + ஆகும் = நாடாகும்
நிலைமொழியின் ஈற்றில் உள்ள உகரம் நீங்கியது = நாட் + ஆகும்
வருமொழியின் முதலில் உள்ள உயிரேறிப் புணர்ந்தது = நாடாகும்

குற்றியலுகரப் புணர்ச்சி ஆறு வகைப்படும்.

| வ.எண் | வகை | சான்று |
|---|---|---|
| 1. | நெடில்தொடர்க் குற்றியலுகரம் | காடு + ஆறு = காட்டாறு |
| 2. | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் | உலகு + ஆளும் = உலகாளும் |
| 3. | ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் | அஃது + என்ன = அஃதென்ன |
| 4. | வன்தொடர்க் குற்றியலுகரம் | தடுப்பு + அணை = தடுப்பணை |
| 5. | மென்தொடர்க் குற்றியலுகரம் | பஞ்சு + ஆலை = பஞ்சாலை |
| 6. | இடைத்தொடர்க் குற்றியலுகரம் | சால்பு + ஐ = சால்பை |

டு, று என்னும் எழுத்துகளை ஈற்றில் கொண்ட நெடில்தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலைமொழியாக நின்று, வருமொழி முதலில் உயிரோ, மெய்யோ வந்து புணரும்போது, நிலை மொழி ஈற்று ஒற்று இரட்டித்துப் புணரும்.

| வ.எண் | நிலைமொழி + வருமொழி | நிலைமொழி ஈற்று இரட்டித்தல் | புணர்ச்சி |
|---|---|---|---|
| 1. | ஆடு + குட்டி | ஆட்டு + குட்டி | ஆட்டுக்குட்டி |
| 2. | ஈறு + எழுத்து | ஈற்று + எழுத்து | ஈற்றெழுத்து |
| 3. | கயிறு + ஏணி | கயிற்று + ஏணி | கயிற்றேணி |
| 4. | முரடு + காளை | முரட்டு + காளை | முரட்டுக்காளை |

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. புணர்ச்சி என்பது இவை சேர்வது

அ) நிலைமொழி + நிலைமொழி ஆ) வருமொழி + நிலைமொழி

இ) நிலைமொழி + வருமொழி ஈ) வருமொழி + வருமொழி

2. சே + அடி பெறும் உடம்படுமெய்

அ) ய் மட்டும் ஆ) வ் மட்டும் இ) ய், வ் இரண்டும் ஈ) ய், வ் இரண்டும் அன்று

3. 'ஏடாகும்' என்பதை பிரித்தெழுதுக.

அ) ஏட் + ஆகும் ஆ) ஏடு + ஆகும் இ) ஏட்டு + ஆகும் ஈ) ஏட்ட் + ஆகும்

4. பற்று, தோடு - எவ்வகைக் குற்றியலுகரம்

அ) வன்தொடர், நெடில்தொடர் ஆ) மென்தொடர், இடைத்தொடர்

இ) ஆய்தத்தொடர், உயிர்த்தொடர் ஈ) நெடில்தொடர், வன்தொடர்

5. கரடு + மண் = ____________________

அ) கரடுமண் ஆ) கரமண் இ) கரட்டுமண் ஈ) கரல்மண்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. புணர்ச்சி என்றால் என்ன? சான்று தருக.

2. குற்றியலுகரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

3. உடம்படுமெய்ப் புணர்ச்சி என்றால் என்ன? சான்று தருக.

4. பின்வரும் சொற்களை இணைத்து எழுதுக.

அ) மாடு + வண்டி ____________________

ஆ) கனி + இதழ் ____________________

இ) நிலா + ஒளி ____________________

ஈ) ஆறு + மணல் ____________________

உ) பஞ்சு + ஆலை ____________________

ஊ) பூ + இதழ் ____________________

எ) மலை + அருவி ____________________

## 22.5 கருத்துவிளக்கப்படம்

# கணினித்தமிழ் வளர்ச்சி மாநாடு

**21.05.2023 ஞாயிறு**

**சென்னை மாநிலக் கல்லூரி**
**புதியதேர்வரங்கம்**

**தொடக்க விழா** **நேரம் காலை 10.00**

| | | |
|---|---|---|
| **வரவேற்புரை** | : | பேராசிரியர் ந. **தெய்வசுந்தரம்** |
| **வாழ்த்துரை** | : | **இயக்குநர்**<br>நடுவண் மொழியியல் நிறுவனம், மைசூர்<br>**முதல்வர்**, மாநிலக் கல்லூரி |
| **பங்கேற்பாளர்கள்** | : | ஆய்வு மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும்<br>துறை சார்ந்த வல்லுநர்கள் |

### வினாக்கள்

1. இங்கே கொடுக்கப்பட்டது எந்த மாநாட்டிற்கான அழைப்பிதழ்?
2. கணினித்தமிழ் வளர்ச்சி மாநாடு எக்கல்லூரியில் நடைபெற்றது?
3. இம்மாநாட்டில் வரவேற்புரை வழங்கியவர் யார்?
4. வாழ்த்துரை வழங்குபவர்கள் யார் யார்?
5. இந்த மாநாட்டில் யார் யார் பங்கேற்கலாம்?

### தகவல் துளி

உலகில் குடியுரிமை பெற்ற முதல் இயந்திர மனிதர் சோபியா. இது 2016ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியது. இது பெண் உருவ அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு 2017ஆம் ஆண்டு சவுதி அரேபிய அரசு குடியுரிமை வழங்கியது. உலகப் பயணத்தை மேற்கொள்ள, உலகின் முதல் இயந்திர மனிதருக்கான நுழைவு இசைவைப் (விசா) பெற்றதும் இதுவே ஆகும். இதற்குள் மனிதருக்கான அத்தனை செயல்பாடுகளும் பதிவேற்றப்பட்டுள்ளன. மனிதர்கள்போல் சிந்தித்துச் செயல்படும் திறனுடையது இது.



இயந்திர மனிதர் சோபியா

## 22.6 கேட்டல் கருத்தறிதல்

### நிகோலா டெஸ்லா
### (1856 – 1943)

நிகோலா டெஸ்லா 1856 ஆம் ஆண்டு குரோஷியாவில் பிறந்தார். இளம் வயதிலேயே டெஸ்லா அங்கிருந்து அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்தார். புகழ்பெற்ற அறிவியலாளர் தாமஸ் ஆல்வா எடிசனிடம் பணிபுரிய 1884இல் அவர் நியூயார்க் வந்தார்.

மின்சார, இயந்திரவியல் பொறியாளராக அவர் அமெரிக்க மண்ணில் காலடி எடுத்துவைத்தபோது, அவரது பைகளில் இரண்டு சென்ட்களும் பறக்கும் இயந்திரத்தை உருவாக்குவதற்கான செய்முறைக் கணக்கும் மட்டும்தான் இருந்தன. ஆனால், டெஸ்லாவைப் பிரபலப்படுத்தியது அந்தப் பறக்கும் இயந்திரம் அன்று.

உலகம் வேகமாக வளர்ந்துவந்த நிலையில் அதிக மின்னாற்றல் தேவைப்பட்டது. விளக்குகளை ஒளிரச்செய்யவும் இயந்திரங்களை இயக்கவும் பயனுள்ள வழியைக் கண்டறிவதற்கான தேவை அதிகமானது. இந்தப் பின்னணியில், மின்சாரக் கடத்தலுக்கு மாற்று மின்னோட்டம் பயன்படுத்தப்பட வேண்டுமா அல்லது நேரடி மின்னோட்டம் பயன்படுத்தப்பட வேண்டுமா என்பதை நிறுவ அமெரிக்கத் தொழிலதிபர் ஜார்ஜ் வெஸ்டிங்ஹவுஸ், தாமஸ் ஆல்வா எடிசன் இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. எடிசனின் நிறுவனம் நேரடி மின்னோட்டத்தில் முதலீடு செய்தது. ஆனால், மாற்று மின்னோட்டத்தை டெஸ்லா வலியுறுத்தியதால், இருவருக்கும் இடையே பிரிவு ஏற்பட்டது. ஐரோப்பாவில் டெஸ்லா பணிபுரியும்போதே மாற்று மின்னோட்டத்தில் பரிசோதனை மேற்கொண்டிருந்தார். மேலும், 1883 இலேயே தமது முதல் மோட்டாரை உருவாக்கியிருந்தார். நெடுந்தூர மின் பரிமாற்றங்களில் மாற்று மின்னோட்ட முறையே சிறந்ததாகத் திகழ்ந்ததால், டெஸ்லா உலகப் புகழ்பெற்றார்.

### வினாக்கள்

1. நிகோலா டெஸ்லா எங்கு எப்போது பிறந்தார்?
2. ஜார்ஜ் வெஸ்டிங்ஹவுஸ் மற்றும் தாமஸ் ஆல்வா எடிசனுக்கு இடையே கடும் போட்டி நிலவக் காரணம் என்ன?
3. எடிசனின் நிறுவனம் எதில் முதலீடு செய்தது?
4. டெஸ்லா எப்போது தனது முதல் மோட்டாரை உருவாக்கினார்?
5. டெஸ்லா உலகப் புகழ்பெறக் காரணம் என்ன?

## 22.7 மொழிபெயர்ப்போம்

அன்றாட வாழ்வில் மனிதர்களின் தேவையைப் பூர்த்திசெய்வதில் தொழில்நுட்பம் முக்கியப் பங்குவகிக்கிறது. மனிதர்களின் வேலைப்பளுவைக் குறைப்பதற்குத் தொழில்நுட்பம் பெரிதும் உதவுகிறது. அறிவியல் முறையில் பொறியியல் இயந்திரங்களைக் கொண்டு நுணுக்கமான வேலைகளைச் செய்யத் தொழில்நுட்பம் பயன்படுகிறது.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

## 22.8 அறிந்துகொள்வோம்

1. தன்னிறைவு – Self-Sufficiency
2. அளவு – Measure
3. அணு உலை – Atomic Reactor
4. ஆயுதம் – Weapon
5. திரைப்படம் – Movie
6. ஒளிப்பதிவு – Cinematography
7. ஒலிப்பதிவு – Audio Recording
8. படத்தொகுப்பு – Film Editing
9. அடித்தளம் – Foundation
10. காப்புரிமை – Patent
11. மேதை – Genius
12. உதவியாளர் – Assistant

## 22.9 உயர்நிலைத்திறன்

ஏதேனும் ஒரு தலைப்பை மையமாக வைத்துத் திரைப்படத்திற்குக் காட்சி அடிப்படையில் திரைக்கதை ஒன்றை எழுதி வருக.

## 22.10 செயல் திட்டம்

உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு திரைப்படத்திற்குத் தமிழில் விமர்சனம் எழுதி வருக.

பாடம்
23

## 23.1 பேசுவோம்




### கலந்துரையாடுவோம்

அறச்செயல்களில் சட்டம், நன்னெறி, விழுமியம், நியாயம் ஆகியவற்றின் பங்கு குறித்து வகுப்பு நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 23.2 படிப்போம்

### செல்வ நிலையாமை

மனிதர்கள் தமக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்கமுறைகளையே அறம் என்பர். 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே' அறங்களுள் தலைசிறந்தது. ஆகவே, செல்வம் இருக்கிற காலத்திலேயே அச்செல்வத்தைப் பகிர்ந்தளித்து வாழ வேண்டும் என்ற கருத்தை நாலடியார் பாடல்வழி அறியலாம்.

துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்

பகடு நடந்தகூழ் பல்லாரோடு உண்க;

அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்

சகடக்கால் போல வரும்.

- நாலடியார் (பாடல் – 2)

### பாடலின் பொருள்

யாரிடமும் செல்வம் நிலையாக நிற்பதில்லை. வண்டிச்சக்கரம் உருள்வது போல மேலும் கீழுமாகச் சுற்றிசுற்றி இடம்மாறிக்கொண்டே போகும் இயல்பைக் கொண்டது அது. அதனால், எருமைகளைக் கொண்டு நெற்போரடித்துப் பெற்ற குற்றமற்ற பெருஞ்செல்வத்தை யாருக்கும் வழங்காமல் பூட்டி வைக்காதீர்கள். அனைவரும் பசியின்றி வாழ அச்செல்வத்தைப் பகிர்ந்து உண்பீர்களாக!

### நூலைப் பற்றி

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நாலடியார். இது நான்கு அடிகளைக் கொண்ட நானூறு வெண்பாக்களால் ஆனது. இதனால், இது 'நாலடி நானூறு' எனவும் 'வேளாண் வேதம்' எனவும் அழைக்கப்படுகிறது. இந்நூல் சமண முனிவர்களால் இயற்றப்பட்டது. ஜி. யு. போப் இந்நூலினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

### பொருள் அறிவோம்

1. துகள்தீர் - குற்றமற்ற
2. தோன்றியக்கால் - சேர்ந்த நேரம்
3. பகடு - எருமைக் கடா
4. அகடுற - நிலையாக
5. சகடக்கால் - வண்டிச் சக்கரம்

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(நாலடியார், சகடக்கால், எருமைக் கடா, பதினெண்கீழ்க்கணக்கு, ஜி. யு. போப்)

1. நாலடியார் ________________ நூல்களுள் ஒன்று.
2. நாலடியாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ________________.
3. நாலடி நானூறு என்று அழைக்கப்படும் நூல் ________________.
4. ________________ கொண்டு நெற்போரடித்தனர்.
5. செல்வம் ________________ போல வரும்.

### ஆ) பொருள் எழுதுவோம்

1. துகள்நீர் -
2. பகடு -
3. அகடுற -
4. சகடக்கால் -

### இ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. அறங்களுள் தலைசிறந்தது 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'. (சரி/தவறு)
2. நாலடியார் பௌத்த சமயத்தவர்களால் இயற்றப்பட்டது. (சரி/தவறு)
3. நாலடியார் நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. (சரி/தவறு)

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. நாலடியாரின் வேறு பெயர்கள் யாவை?
2. சகடக்கால்போல வருவது எது?
3. 'நாலடி நானூறு' பெயர்க்காரணம் தருக.
4. எதனால் பகிர்ந்து உண்ண வேண்டும் என்று நாலடியார் கூறுகிறது?
5. பாடப்பகுதி மூலம் அறியலாகும் கருத்து யாது?

### உ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. செல்வ நிலையாமை குறித்து நாலடியார் கூறும் கருத்துகளை எழுதுக.

## 23.3 படிப்போம்

### போரில் அறம்



அகம், புறம் என வாழ்க்கையைப் பகுத்து வாழ்ந்த சங்ககாலத் தமிழர்கள் தங்களுடைய வாழ்க்கை முறையை அறம் சார்ந்து அமைத்துக்கொண்டார்கள். போர் முறைகளுக்கும் இலக்கணம் வகுத்திருந்த அவர்கள், அவற்றிலும் அறம் சார்ந்தே செயல்பட்டார்கள். போர்க் காலங்களில் எப்படி அவர்கள் அறத்துடன் செயல்பட்டார்கள் என்பதை இந்தப் பகுதியில் காணலாம்.

### போர் முன்னறிவிப்பு

ஒரு நாட்டின் மீது போர் தொடுக்க நினைக்கும் அரசன் பகை நாட்டு அரசனுக்கு முன்கூட்டியே அறிவிக்க வேண்டும். அறிவித்த பின்னரும் அம்மன்னன் பதிலளிக்காமல் இருப்பானாயின் அந்நாட்டிலுள்ள பசுக்களைக் கவர்ந்து கொண்டுசெல்வர். இச்செயல்பாடே போரின் தொடக்கமாக அமைந்திருந்தது. போர் தொடங்கும் முன்பாக முரசறைந்து மக்களுக்குத் தெரிவிப்பர்.

**போரின்போது கடைப்பிடிக்கப்பட்ட அறம்**

போர் நிகழும் காலத்தில் பசுக்கள், வயதானவர்கள், பெண்கள், நோயுற்றோர், குழந்தைப்பேறு இல்லாதோர் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்படுவர். அதன் பின்பே போர் தொடங்கும்.

காலையில் முரசறைந்து போர் தொடங்குவர். சூரியன் மறையும் வரை மட்டுமே போர் புரிவர். பின் முரசறைந்து போரை நிறுத்துவர். போர் எவ்வளவு நாள் நடைபெற்றாலும் இதுவே நடைமுறையாக இருந்துள்ளது. அன்றைய மன்னர்கள், பகைவர்கள் ஆயுதத்தை இழந்தபோதும், போரில் தோற்று ஓடும்போதும் அவர்கள் மேல் படை செலுத்தாமல் அறநெறியைக் காத்தார்கள். பகைவர்களுக்குத் தகுந்த வாய்ப்பளித்து மறுநாள் போர் புரிந்தனர். போரில் இறந்தவர்களுக்கு மனம் இரங்கும் நற்குணத்தைக் கொண்டிருந்தனர்.

ஒருமுறை, சேர நாட்டிலுள்ள கருவூரைச் சோழ மன்னன் கிள்ளிவளவன் முற்றுகையிட்டான். சோழனின் வீரர்கள் தன் நாட்டில் உள்ள காவல் மரங்களை வெட்டுவதையும் பொருட்படுத்தாமல் சேரன் தன் அரண்மனையிலேயே இருந்தான். அதைக் கண்ட புலவர் ஆலத்தூர் கிழார், "போருக்கு வராமல் அரண்மனையில் அடைபட்டுக்கிடக்கும் சேரனோடு போர்புரிவது உன்னைப் போன்ற வீரனுக்கு நாணத்தக்க செயலாகும்" என்று கிள்ளிவளவனிடம் கூறினார். அவ்வாறான சூழலில் சோழன் போரிடாமல் அமைதிகாத்தான். இது போரில் தமிழர்கள் கடைப்பிடித்த அறத்திற்குச் சான்றான ஒரு நிகழ்வாகும்.

பண்டைய தமிழ்ச்சமூகத்தில் போர் தவிர்க்க இயலாத ஒன்றாக இருந்தது. அத்தகைய போர்ச்சூழலிலும் தமிழர்கள் அறத்தைப் பின்பற்றினர். வீரமும் வெற்றியும் முதன்மை பெறும் போர்களில்கூட மனிதநேயப்பண்புகள் கடைப்பிடிக்கப்பட்டன என்பதைச் சங்கப்பாடல்கள் வழி அறிய முடிகிறது.

## பொருள் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பகுத்தல் | - | வகைப்படுத்தல் |
| 2. | கவர்தல் | - | பிடித்து வருதல் |
| 3. | முரசறைதல் | - | முரசு கொட்டுதல் |
| 4. | முற்றுகை | - | சுற்றி வளைத்தல் |
| 5. | நாணம் | - | வெட்கம் |
| 6. | தவிர்க்க இயலாத | - | தடுக்க முடியாத |

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(பசுக்களைக், சேர, முரசறைந்து, சூரியன், அறம்)

1. சங்ககாலத் தமிழர்கள் போர் முறைகளில் ________________ சார்ந்தே செயல்பட்டார்கள்.
2. ________________ மறையும் வரை மட்டுமே போர் செய்வர்.
3. போர் தொடங்கும் முன் மன்னன் ________________ கவர்ந்துகொண்டு செல்வான்.
4. கிள்ளிவளவன் ________________ நாட்டை முற்றுகையிட்டான்.
5. போர் தொடங்கும் முன்பாக ________________ மக்களுக்குத் தெரிவிப்பர்.

### ஆ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. சங்ககாலத் தமிழர்கள் தங்கள் வாழ்க்கை முறையை அறம் சார்ந்து அமைத்துக்கொண்டனர். (சரி/தவறு)
2. ஒரு நாட்டின் மீது போர் தொடுக்க நினைக்கும் அரசன் பகை நாட்டு அரசனுக்கு முன்கூட்டியே அறிவிக்க மாட்டான். (சரி/தவறு)
3. காலையில் முரசறைந்து போர் தொடங்குவர். (சரி/தவறு)
4. பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் போர் தவிர்க்க இயலாத ஒன்றாக இருந்தது. (சரி/தவறு)
5. பகை நாட்டிலுள்ள பெண்களைக் கவர்ந்து செல்வது போரின் தொடக்கமாக இருந்தது. (சரி/தவறு)

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சங்ககாலத் தமிழர்கள் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்ட விதம் என்ன?
2. போருக்கு முந்தைய முன்னறிவிப்பு குறித்து எழுதுக.
3. போர் தொடங்கும் முன் யாரெல்லாம் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்?
4. கிள்ளிவளவனிடம் புலவர் ஆலத்தூர் கிழார் என்ன கூறிப் போரை நிறுத்தினார்?
5. தமிழர்கள் பின்பற்றிய போர் அறம் இரண்டைக் கூறுக.

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. தமிழரின் போர் அறம் குறித்துக் கட்டுரை எழுதுக.

## 23.4 தெரிந்துகொள்வோம்

### வினை வகைகள்

உலகம் செயல்களால் நிரம்பியது. செயல்களை வினை என்று இலக்கணம் கூறுகிறது. இந்த வினைகளைக் கொண்டு தொடர்களை அமைக்கிறோம். அவ்வினைவகைத் தொடர் எட்டு வகைப்படும். அவையாவன:

1. உடன்பாட்டு வினைத் தொடர்
2. எதிர்மறை வினைத் தொடர்
3. செய்வினைத் தொடர்
4. செயப்பாட்டுவினைத் தொடர்
5. தன்வினைத் தொடர்
6. பிறவினைத் தொடர்
7. நேர்க்கூற்றுத் தொடர்
8. அயற்கூற்றுத் தொடர்

இப்பாடப்பகுதியில் தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களைக் காண்போம்.

### 1. தன்வினை

எழுவாய், தானே செய்யும் செயலை உணர்த்துவது தன்வினைத் தொடர் எனப்படும்.

சான்று : கயல்விழி கற்றாள், வளவன் உண்டான்.

### 2. பிறவினை

எழுவாய் தானே செய்யாமல், அதேசமயம் அச்செயல் நடைபெறக் காரணமாக இருப்பதை உணர்த்துவது பிறவினைத் தொடர் எனப்படும்.

சான்று : கயல்விழி கற்பித்தாள், தாய் ஊட்டினாள்.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| பாண்டியன் பாடம் படித்தான் | பாண்டியன் பாடம் படிப்பித்தான் |
| கனிமொழி உணவு உண்டாள் | கனிமொழி உணவு உண்பித்தாள் |
| பொன்மணி மலர் சூடினாள் | பொன்மணி மலர் சூட்டினாள் |
| ஆசிரியர் பாடம் கற்றார் | ஆசிரியர் பாடம் கற்பித்தார் |

### 3. செய்வினை

செய்பவனுக்கு முதன்மை அளிக்கும் வினை செய்வினை, எழுவாயே செயலைச் செய்வதாகக் கூறுவது செய்வினைத் தொடர் எனப்படும்.

சான்று : இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

பூங்குழலி இட்டலி அவித்தாள்.

## 4. செயப்பாட்டு வினை

செயப்படு பொருளுக்கு முதன்மை அளிக்கும் வினை செயப்பாட்டுவினை. செயப்படுபொருளை எழுவாயாகப் பெற்றும், எழுவாய் மூன்றாம் வேற்றுமை உருபைப் பெற்றும், பயனிலை 'படு' என்பதைப் பெற்றும் வருகின்ற தொடர் செயப்பாட்டுவினைத் தொடர் எனப்படும்.

சான்று : சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது.

இட்டலி பூங்குழலியால் அவிக்கப்பட்டது.

| செய்வினை | செயப்பாட்டுவினை |
|---|---|
| கம்பர் இராமாயணத்தை இயற்றினார். | இராமாயணம் கம்பரால் இயற்றப்பட்டது. |
| ஆசிரியர் மாணாக்கர்களை உருவாக்கினார். | மாணாக்கர்கள் ஆசிரியரால் உருவாக்கப்பட்டனர். |
| முதலமைச்சர் திட்டங்களைத் தொடங்கினார். | திட்டங்கள் முதலமைச்சரால் தொடங்கப்பட்டன. |
| கவிஞர் நூலை வெளியிட்டார். | நூல் கவிஞரால் வெளியிடப்பட்டது. |
| வேடன் வலை விரித்தான். | வலை வேடனால் விரிக்கப்பட்டது. |

### பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தன்வினையைப் பிறவினையாக மாற்றுக.

அ) தேரை ஓட்டினான்  ஆ) கல்வி கற்றார்

இ) கவிதை எழுதினான் ஈ) அப்பா சென்றார்

2. செய்வினையைச் செயப்பாட்டுவினையாக மாற்றுக.

அ) காமராசர் கல்விக்கண் திறந்தார்

ஆ) மாணவர் இணையத்தைப் பார்த்தனர்

இ) தந்தை அறிவுரை வழங்கினார்

ஈ) இயக்குநர் படம் எடுத்தார்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தன்வினை என்றால் என்ன? சான்று தருக.
2. பிறவினை என்றால் என்ன? சான்று தருக.
3. செய்வினை என்றால் என்ன? சான்று தருக.
4. செயப்பாட்டுவினை என்றால் என்ன? சான்று தருக.

## 23.5 மொழியோடு விளையாடுவோம்

### விடைக்கேற்ற வினா அமைக்க

- ❖ பாடகர் பாடத் தொடங்கினார்.

______________________________________________

- ❖ மக்களை உயர்திணை என்பர்.

______________________________________________

- ❖ அமுதா தேர்வில் வெற்றிபெற்றார்.

______________________________________________

- ❖ தடகள விளையாட்டில் மாணவர்கள் ஆர்வமாகப் பங்கேற்றனர்.

______________________________________________

- ❖ பருவமழை நன்கு பெய்ததால் வேளாண்மை செழித்தது.

______________________________________________

## தகவல் துளி



நடுகல்

இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக் கல்லே நடுகல் ஆகும். இவற்றை 'வீரக்கற்கள்' என்றும் கூறுவர். ஆங்கிலத்தில் 'HERO STONE' எனப்படுகிறது. நினைவுக் கற்கள் எடுக்கும் வழக்கம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கோ, ஒரு பிரதேசத்துக்கோ, தனிப்பட்ட பண்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கோ உரிய வழக்கம் அன்று. உலகின் பல பகுதிகளிலும் பெருங்கற்காலம் முதலே இவ்வழக்கம் இருக்கிறது. இந்தியாவிலும் வடக்கு, தெற்கு என்ற பேதமின்றி நெடுங்காலமாகவே நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன. இறந்தவர் யாராக இருந்தாலும் நடுகற்கள் எடுக்கப்பட்டன என்றாலும், வீரச்சாவு அடைந்தவர்களுடைய நடுகற்களுக்குப் பெருமதிப்பு கொடுக்கப்பட்டது. வீரர்களுக்காக எடுக்கப்படும் நினைவுக்கற்களை மக்கள் வணங்கியமை பற்றியும் பண்டைய இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

## 23.6 கேட்டல் கருத்தறிதல்

### பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

குறைந்த அடிகளை உடைய பாடல்களால் மிகப்பெரும் செய்திகளைக் கூறக்கூடிய 18 நூல்களின் தொகுப்புதான் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்று மயிலைநாதரும் இன்னும் சில பேராசிரியர்களும் பெயர் சூட்டினார்கள். அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பெரும் பொருள்களையும் நான்கு அடிகளுக்கு மிகாமல் எடுத்துரைக்கும் இலக்கியங்கள் இவை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பான்மையானவை நீதிநூல்கள். மக்களுக்கு ஒழுக்கநெறிகளை அறிவுறுத்துவதற்காக எழுந்ததே நீதி நூல் எனப்படுகிறது. பண்டைக்காலம் தொட்டே தமிழில் பல்வேறு நீதிநூல்கள் எழுந்துள்ளன. சங்ககால நூல்கள் பலவற்றில் நீதிக்கருத்துகள் ஆங்காங்கே பரவிக் காணப்பட்டாலும், நீதி நூல் என்று கூறும் அளவுக்குத் தனியான நூல் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், சங்கம் மருவிய காலத்து நூல்களின் தொகுப்பான பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள 18 நூல்களுள் 11 நீதிநூல்களாகக் காணப்படுகின்றன. இவற்றுள் புகழ்பெற்றதும், பரவலாக அறியப்பட்டதும், வெளிநாட்டு அறிஞர்களின் கவனத்தை ஈர்த்ததுமான நூல் திருக்குறளாகும். இதுவே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்நூல் ஆகும்.

### வினாக்கள்

1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள நீதி நூல்கள் எத்தனை?
2. மக்களுக்கு ஒழுக்கநெறிகளை அறிவுறுத்துவதற்காக எழுந்த நூல்கள் எவ்வாறு அழைக்கப்டுகின்றன?
3. வெளிநாட்டு அறிஞர்களின் கவனத்தை ஈர்த்த நூல் எது?
4. அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்நூல் எது?
5. சங்கம் மருவிய காலத்து நூல்களின் தொகுப்பு எது?

## 23.7 மொழிபெயர்ப்போம்

Donating to charity can make you happy. The knowledge that you are helping others is hugely fulfilling. Research has identified a link between making a donation to charity and increased activity in the pleasure centres in the brain. This proves the old adage that goes, "it really is far better to give than to receive".

## 23.8 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒழுக்கம் | - | Discipline |
| 2. | செல்வம் | - | Wealth |
| 3. | எருமை | - | Buffalo |
| 4. | வேளாண் | - | Agriculture |
| 5. | நிலையாமை | - | Impermanence |
| 6. | குடிமக்கள் | - | Citizens |
| 7. | முரசு | - | Drum |
| 8. | பயிர் | - | Crop |
| 9. | வேடன் | - | Hunter |
| 10. | வலை | - | Net |
| 11. | இணையம் | - | Internet |
| 12. | பாடகர் | - | Singer |
| 13. | தடகள விளையாட்டு | - | Athletics |
| 14. | கவனம் | - | Attention |
| 15. | அரண்மனை | – | Palace |

## 23.9 உயர்நிலைத்திறன்

**அமைதி என்னும் தலைப்பில் பாடல் புனைக.**

____________________________________

____________________________________

____________________________________

____________________________________


____________________________________

## 23.10 செயல் திட்டம்

உங்கள் நாட்டு வரலாற்றில் நிகழ்ந்த ஏதேனும் இரண்டு போர்களைப் பற்றி உரை நிகழ்த்துக.

பாடம்
24

## 24.1 பேசுவோம்



## கலந்துரையாடுவோம்

தன்னலம் கருதாமல் பொதுநலம் கருதிச் செய்யப்படும் செயல்களின் சிறப்புக் குறித்து உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 24.2 படிப்போம்

### குருதிக்கொடை

உரிய காலத்தில் பிறரின் தேவையறிந்து உதவுதலே சிறந்த அறம். எனவேதான் ஔவையாரும் 'அறம் செய விரும்பு' என்கிறார். வெற்றியழகனின் இக்கவிதை பிறர் உயிரைக் காக்க, இரத்தத்தைத் தானமாகக் கொடுக்கும் அறத்தை வலியுறுத்துகிறது.

இறைக்கின்ற கிணற்றில்நீர் சுரப்ப தைப்போல்
  இரத்தத்தைக் கொடுப்பதனாற் குருதி ஊறும்!
அரைக்கின்ற சந்தனந்தான் மணப்ப தைப்போல்
  அளிப்பதனாற் குருதியது தூய்மை யாகும்!
தருகின்ற குருதியதே உயிரைக் காக்கும்
  தன்னுடலுக்கு ஊறேதும் நேர்ந்தி டாது!
குருதிக்கொடை ஒன்றேதான் கொடையுள் மேலாம்!
  குவலயத்துள் இதுபோன்ற கொடையொன் றில்லை!

- வெற்றியழகன்

### பாடலின் பொருள்

இறைக்க இறைக்கக் கிணற்றில் நீர் ஊறும். அதுபோல, நம் உடலிலுள்ள குருதியைக் கொடையாக அளிக்க அளிக்க அது மேன்மேலும் ஊறும்.

சந்தனக்கட்டை அரைக்க அரைக்க மணம் பரப்பும். குருதி உடலிலிருந்து நீங்க நீங்கப் புதுக் குருதி ஊறுவதால் உடல் தூய்மையாகும்.

கொடையாகக் கொடுக்கப்படும் குருதி பிறர் உயிரைக் காக்கப் பயன்படும். குருதியினை வழங்குவதால் எத்தகைய துன்பமும் வழங்குவோருக்கு நேராது.

குருதிக்கொடை ஒன்றுதான் பிற கொடைகளைவிடச் சிறந்ததாகும். உலகில் இதுபோன்று பிறிதொரு கொடையில்லை.

### நூலைப் பற்றி

கவிஞர் வெற்றியழகனின் இக்கவிதை 'குருதிக்கொடை' என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. வெற்றியழகனின் இயற்பெயர் ஜெயராமுலு. 'அறிவார்ந்த கதைகள்', வெற்றியழகன் கவிதைகள் (மூன்று தொகுதிகள்), 'வெண்ணிலா' போன்ற நூல்களைப் படைத்துள்ளார். தமிழ்நாடு அரசின் பாவேந்தர் விருது பெற்றவர். இவர்தம் உடலை மருத்துவ ஆய்வுக்குத் தானமாக வழங்கியுள்ளார்.

## பொருள் அறிவோம்

1. குருதி - இரத்தம்
2. ஊறு - துன்பம்
3. குவலயம் - உலகம்
4. கொடை - கொடுப்பது

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அறம், சந்தனக்கட்டை, ஜெயராமுலு, கிணற்றில், குருதிக்கொடை)

1. இரத்த தானம் குறித்து வெற்றியழகன் எழுதிய கவிதைத் தலைப்பு ________________.
2. இறைக்க இறைக்க ______________________ நீர் ஊறும்.
3. அரைக்க அரைக்க மணம் பரப்புவது ______________________.
4. வெற்றியழகனின் இயற்பெயர் ______________________.
5. உரிய காலத்தில் பிறரின் தேவையறிந்து உதவுதலே சிறந்த ______________________.

### ஆ) சேர்த்து எழுதுக.

1. வெற்றி + அழகன் -
2. வெண்மை + நிலா -
3. குருதி + கொடை -
4. சந்தனம் + கட்டை -
5. தூய்மை + ஆகும் -

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கிணற்றுநீர், குருதி ஒப்பீடு செய்க.
2. வெற்றியழகன் படைத்த நூல்கள் யாவை?
3. உடல் தூய்மையடைய வெற்றியழகன் கூறும் கருத்து யாது?
4. குவலயம் என்பதன் பொருள் யாது?
5. வெற்றியழகன் தமிழ்நாடு அரசின் எந்த விருதினைப் பெற்றார்?

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. இரத்த தானம் குறித்துக் 'குருதிக்கொடை' கவிதை கூறும் கருத்துகளை எழுதுக.

## 24.3 படிப்போம்

### உலகளாவிய அறம்

பிறரிடம் பகிர்ந்துகொள்வதே வாழ்வு, தனக்கு மட்டுமே வேண்டும் என்று எந்த உயிரும் வாழ்வதில்லை. பூக்கள் மணத்தை வெளியிட மறுத்து இதழ்களை மூடி வைத்துக்கொள்வதில்லை. மரம் தனக்கே என்று பழங்களைக் கிளைகளில் தக்க வைத்துக்கொள்வதில்லை. பிறருக்குத் தந்து மகிழ்வதே சிறந்த அறம். இக்கருத்தை வெ. இறையன்பு இஆப எழுதிய 'வாழ்க்கையே ஒரு வழிபாடு' என்ற நூல் பதிவுசெய்கிறது. இந்நூலில் உள்ள அறம் சார்ந்த கருத்துகளை இப்பாடப் பகுதியில் காண்போம்.

பிறருடன் தன்னிடமிருப்பதைப் பகிர்ந்துகொள்ளும்போது பொருள் குறைந்தாலும் மகிழ்ச்சி கூடும். 'செல்வம் பிறருக்குப் பங்களிப்பதற்கே' என்ற அடிப்படையில்தான் 'பேரறிவுடையவன் செல்வம், ஊர்க்குளம் நீரால் நிறைந்தது போன்றது' என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். தருவது என்றால் பொருள்களை மட்டுமல்ல; அன்பை, இதயத்தை, நல்லெண்ணத்தைக் கொடுப்பதும் ஈகையே. கொடுக்கிறோம் என்கிற உணர்வின்றிக் கொடுப்பதே நல்ல தானம்.

சிலருக்கு எதையும் கொடுக்கவே மனம் வராது. அவர்கள் குப்பையைக்கூட வைத்துப் பாதுகாப்பார்கள். பொருளே அழுகினாலும் பிறருக்குத் தர மாட்டார்கள். அவர்கள் பெறுவதை மட்டுமே அறிவார்கள். யார் எதைத் தருவார்கள் என்பதிலேயே அவர்களின் கவனம் இருக்கும். அவர்களின் கைகள் மட்டுமல்ல, அவர்களும் தாழ்ந்தே இருப்பார்கள்.

சிலர் தருவார்கள்; தருகின்ற நிலையில் மட்டுமே இருக்க வேண்டும் என்பதில் கவனமாய் இருப்பார்கள். அவர்கள் யார் எதைத் தந்தாலும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்படிப்பட்ட பெரும்போக்கே அவர்களின் கொடை உள்ளத்தைக் களங்கப்படுத்திவிடும்.

எனக்குத் தெரிந்தவர் ஒருவர். எல்லோருக்கும் எல்லாவற்றையும் கொடுப்பார். அவரிடம் வேலைசெய்யும் சிலர் அன்புடன் சில வாழைப்பழங்களைத் தந்தாலும் வாங்கிக்கொள்வார். அவரிடம் வாழைத்தோட்டமே உண்டு. உயர்ந்த வகைப் பழங்கள் நிறைய இருந்தாலும் அவர்கள் அளித்த பழங்களை மனம் மகிழ்ந்து சாப்பிடுவார். அவரிடம் கேட்டதற்கு, "நாமும் வாங்கிக்கொண்டால்தான் அவர்களுக்கு நாம் எதையாவது தரும்போது அதை அவர்கள் பிச்சை என்று கருத மாட்டார்கள்" என்றார்.

முதல் நாள் தாம் முன்கூட்டியே வணக்கம் வைத்தால், அடுத்த நாள் அவர்கள் முன்கூட்டியே வணக்கம் வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். இவர்கள் எப்போதுமே கடன் வாங்கிக் கழிப்பவர்கள். ஒருசிலரே தருவார்கள்; தருகிற எண்ணமின்றித் தக்க நேரத்தில் பெறுவார்கள்; தருவதும் பெறுவதும் அவர்களுக்குப் பெரிய சம்பவங்களல்ல.

கொடுக்கும்போது வாங்குபவர்களின் கண்களில் நன்றி தெரிய வேண்டும் என்றுகூட எதிர்பார்க்காமல் கொடுப்பவர்களே சிறந்த வள்ளல்கள். பெற்றுக்கொண்டவர்களிடம்

நன்றியுடன் இருப்பவர்களே மகான்களாக மலர முடியும். ரிசட்ஸீ என்கிற துறவியிடம் மடாலயத்தை விரிவுபடுத்தும் பொருட்டு உமேசு என்கிற வியாபாரி 500 தங்கக் கட்டிகளைக் கொண்டுவந்து கொடுத்தார். உடனே ரிசட்ஸீ, “சரி! எடுத்துக்கொள்கிறேன்” என்றார். இப்படிப் பதில் சொல்கிறாரே குரு என உமேசு எண்ணினார். மூன்று தங்கத் துண்டுகளில் ஒரு வருடத்திற்கான செலவை ஒருவர் செய்ய முடியும். ஆனால், 500 தங்கத் துண்டுகளைப் பெற்றுக்கொண்டு ஒரு நன்றிகூடச் சொல்லவில்லையே என நினைத்தார். “இந்த மூட்டையில் 500 தங்கத் துண்டுகள் இருக்கின்றன” என்றார். “அதைத்தான் முதலிலேயே சொல்லிவிட்டீர்களே” என்றார் ரிசட்ஸீ. “நான் பணக்காரராக இருந்தபோதிலும், எனக்கே இது பெரிய தொகை” என்றார் உமேசு.

“நான் நன்றி சொல்ல வேண்டும் என எதிர்பார்க்கிறாயா? தருபவர்கள்தான் நன்றியுடன் இருக்க வேண்டும்” என்றார். நல்ல செயலுக்கு நாமும் உதவ முடிந்தால் நாம்தான் நன்றி சொல்ல வேண்டும். பொருள்களை மட்டுமல்ல; அன்பைத் தரலாம், அரவணைப்பைத் தரலாம், வித்தையைத் தரலாம்; தன்னிடம் இருப்பவற்றில் பொருள்களைக் காட்டிலும் உயர்ந்தவற்றைத் தருவதே சிறந்த அறமாகும். யார் பெறுகிறார்கள் என்பது தெரியாமல் தருவதே உயர்ந்த கொடை. ஏனென்றால், அங்கே திரும்பப் பெறுகிற எண்ணம் துளியும் இல்லை. அதனால்தான் கண் தானமும் இரத்த தானமும் உயர்வாகப் பேசப்படுகின்றன.

பைபிளில் ‘வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியக் கூடாது’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் எப்போதுமே வேண்டாததைக் கொடுக்கிறோம். போகித் திருநாள் வரும்போது பலர் வள்ளல்களாகி விடுகிறார்கள். மிகுதியாக இருப்பதைக் கொடுத்து உதவுகிறோம்.

நம்மிடம் உள்ளனவற்றில் எது உபயோகம் என்பதை யார் தீர்மானிப்பது? சங்-சூ தன் சீடனுடன் செல்லும்போது வயதான ஒரு மரத்தைப் பார்த்த சீடன், “எப்படி இவ்வளவு ஆண்டுகள் இது வெட்டப்படாமல் இருக்கிறது?” என்றான். சங்-சூ, “இம்மரம் வளைந்தும் முடிச்சுகளோடும் இருக்கிறது. எந்த மரச்சாமானும் செய்ய முடியாத நிலையில் இருப்பதால் இவ்வளவு ஆயுள்” என்றார். அன்று மாலை நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றனர். நண்பர் சொன்னார், “என்னிடம் இரு வாத்துகள் இருக்கின்றன. ஒன்று, அந்நியர் வந்தால் எச்சரித்துக் கத்தும். மற்றொன்று, சும்மா இருக்கும்.” பயனில்லாத வாத்தை உங்களுக்கு உணவாகச் சமைக்கிறேன் என்றார். திரும்பி வரும்போது சீடன், “பயனில்லாத மரம் வாழ்கிறது. பயனில்லாத வாத்து வெட்டப்படுகிறது. எனவே, பயனுடன் இருப்பது சிறந்ததா, பயனின்றி வாழ்வது சிறந்ததா?” என்றான்.

சங்-சூ சொன்னார்: “வாழ்வின் பொருள், எப்போது பயனற்று இருக்க வேண்டும் அல்லது எப்போது பயனுடன் இருக்க வேண்டும் என்பதை உணர வேண்டும்.” அதைப் போலவே நாம் எப்போது தருவது, எப்போது பெறுவது என்பதைச் சரியாகத் தீர்மானிப்பதே நுண்ணறிவு. எனவே, நிலையற்ற இவ்வாழ்வில் அறத்துடன் வாழ்வதே சிறந்த வாழ்வாகும்.

## பொருள் அறிவோம்

1. பகிர்தல் - பங்கிட்டுக் கொள்ளுதல்
2. ஈகை - கொடை
3. களங்கம் - குற்றம்

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வாழ்க்கையே ஒரு வழிபாடு என்னும் நூலின் ஆசிரியர்?

   அ) வெ. இறையன்பு இ.ஆ.ப  ஆ) மு. வரதராசனார்

   இ) சுகி. சிவம்  ஈ) கலியமூர்த்தி

2. பேரறிவாளனுடைய செல்வம் எதைப் போல் பயன்படும்?

   அ) மரம்  ஆ) ஊர்க்குளம்  இ) நெற்கதிர்  ஈ) பழங்கள்

3. யார் பெறுகிறார்கள் என்பது தெரியாமல் தருவதே உயர்ந்த கொடை, ஏன்?

   அ) திரும்பப் பெறுகிற எண்ணம் துளியும் இருக்காது.

   ஆ) வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியக் கூடாது.

   இ) தருவதும் பெறுவதும் பெரிய நிகழ்வுகளல்ல.

   ஈ) யார் பெறுகிறார்கள் என்று தெரிந்தால் உள்ளம் களங்கமடையும்.

4. நல்ல செயலுக்கு நாமும் உதவ முடிந்தால் நாம்தான் என்ன சொல்ல வேண்டும்.

   அ) வணக்கம்  ஆ) நன்றி  இ) மன்னிப்பு  ஈ) உதவி

5. யார் பெறுகிறார்கள் என்பது தெரியாமல் தருவது எது?

   அ) உயர்ந்த பண்பு  ஆ) உயர்ந்த நிலை

   இ) உயர்ந்த கொடை  ஈ) உயர்ந்த அன்பு

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. எவற்றையெல்லாம் தருவது ஈகை?
2. கொடை உள்ளத்தைக் களங்கப்படுத்துவது எது?
3. சிறந்த வள்ளல் யார் என்று வெ.இறையன்பு இ.ஆ.ப வரையறுக்கிறார்?
4. கடன் வாங்கிக் கழிப்பவர்கள் யார் என 'உலகளாவிய அறம்' பாடம் கூறுகிறது?
5. வாழ்வின் பொருளாக சங்-சூ உரைப்பன யாவை?

### இ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. உலகளாவிய அறம் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
2. ரிசட்ஸீ, உமேசு இருவருக்கும் இடையேயான உரையாடல் குறித்து எழுதுக.

## 24.4 தெரிந்துகொள்வோம்

### யாப்பிலக்கணம் (எழுத்து, அசை, சீர்)

இலக்கியங்களை இயற்றும்போது இரண்டு வகையான ஊடகங்களில் இயற்றுவார்கள். அவற்றில் ஒன்று செய்யுள், மற்றது உரைநடை. பழைய காலத்தில் தமிழ் இலக்கியங்கள் யாவும் செய்யுளிலேயே இயற்றப்பட்டன. செய்யுளில் இயற்றப்பட்ட இலக்கியங்களுக்கும் இலக்கணங்களுக்கும் விளக்கம் கூறுவதற்கே உரைநடை பயன்படுத்தப்பட்டது. இலக்கியங்களை ஆக்கப் பயன்படும் செய்யுள்களின் அமைப்புப் பற்றிப் படிப்பதே யாப்பு இலக்கணம் ஆகும்.

செய்யுள்களில் பல வகைகள் உள்ளன. செய்யுளின் முக்கியக் கூறாக இருப்பது ஓசை. வெவ்வேறு விதமான ஓசைகளை அடிப்படையாகக் கொண்டு பல விதமான செய்யுள்கள் உருவாகியுள்ளன. இவை ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவை ஆகும். யாப்பு இலக்கணத்தில் செய்யுள் பற்றியும் செய்யுளின் உறுப்புகள் பற்றியும் கூறப்படும். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை யாப்பு இலக்கணத்தின் உறுப்புகள் ஆகும். இந்த உறுப்புகளைப் பற்றியும், ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய பாக்கள், அவற்றின் வகைகள் மற்றும் இனங்கள் பற்றியும் அறிவதே யாப்பு இலக்கணம் ஆகும்.

### அசை

எழுத்துகள் சேர்ந்து அசையாக வருகின்றன. அசை, நேர் அசை, நிரை அசை என்று இரண்டு வகைப்படும். ஒரு குறில் எழுத்து அல்லது நெடில் எழுத்து, தனியாகவோ மெய் எழுத்துடன் சேர்ந்தோ வருவது நேர் அசை எனப்படும்.

| | |
|---|---|
| க | குறில் எழுத்து |
| கல் | குறில் + மெய் எழுத்து |
| கா | நெடில் எழுத்து |
| கால் | நெடில் + மெய் எழுத்து |

இரண்டு குறில்கள் இணைந்து வருவதும், ஒரு குறிலோடு ஒரு நெடில் இணைந்து வருவதும், இவற்றுக்குப் பின் மெய்யெழுத்து வருவதும் நிரையசை ஆகும்.

| | |
|---|---|
| கிளி | இரண்டு குறில் எழுத்துகள் |
| மயில் | இரண்டு குறில் + மெய் எழுத்து |
| புறா | குறில் நெடில் எழுத்துகள் |
| இறால் | குறில் நெடில் + மெய் எழுத்து |

மெய் எழுத்தைத் தவிர்த்துப் பார்த்தால் நிரை அசையில் இரண்டு எழுத்துகள் இருக்கும்.

### சீர்:

அசைகள் இணைந்து வருவது சீர் ஆகும். ஒரே அசை சீராக இருப்பதும் உண்டு. இரண்டு, மூன்று, நான்கு அசைகள் சேர்ந்து சீராக அமைவதும் உண்டு. சீர்கள் பின்வருமாறு அமையும்:

#### ஓர் அசைச் சீர்

ஓர் அசை மட்டுமே வருவது ஓர் அசைச் சீர் ஆகும்.

| | |
|---|---|
| க, கல், கா, கால் | நேர் அசை |
| கடு, கடல், பலா, வரால் | நிரை அசை |

## ஈர் அசைச் சீர்

இரண்டு அசைகள் சேர்ந்து வருவது ஈரசைச் சீர் ஆகும்.

1) நேர் நேர்  2) நிரை நேர்  3) நிரை நிரை  4) நேர் நிரை

## மூவசைச் சீர்

மூன்று அசைகள் சேர்ந்து வருவது மூவசைச் சீர் ஆகும்.

நேர் அசையில் முடியும் மூவசைச் சீர்கள் நான்கும், நிரை அசையில் முடியும் மூவசைச் சீர்கள் நான்கும் ஆக மூவசைச் சீர்கள் எட்டு ஆகும்.

| நேரசையில் முடியும் சீர்கள் |
|---|
| நேர் நேர் நேர் |
| நிரை நேர் நேர் |
| நேர் நிரை நேர் |
| நிரை நிரை நேர் |

| நிரை அசையில் முடியும் சீர்கள் |
|---|
| நேர் நேர் நிரை |
| நிரை நேர் நிரை |
| நேர் நிரை நிரை |
| நிரை நிரை நிரை |

## நாலசைச் சீர்

நான்கு அசைகள் சேர்ந்து வருவது நாலசைச் சீர் எனப்படும். நேர் அசையில் முடியும் நாலசைச் சீர் எட்டும், நிரை அசையில் முடியும் நாலசைச் சீர் எட்டும் ஆக நாலசைச் சீர்கள் பதினாறு ஆகும்.

சீர்களைப் பற்றிக் கூறும்போது அவற்றை எளிமையாக நினைவில் வைக்கும் பொருட்டு அவற்றுக்கு வாய்பாடு கூறப்பட்டுள்ளது. சீர் வாய்பாடுகள் பின்வருமாறு அமையும்: ஓரசைச் சீர்களில் நேர் அசை வரும் சீர் நாள் என்றும், நிரை அசை வரும் சீர் மலர் என்றும் கூறப்படும்.

ஈரசைச் சீர் வாய்பாடு பின்வருமாறு அமையும்.

## மாச்சீர்

| | |
|---|---|
| நேர் நேர் | தேமா |
| நிரை நேர் | புளிமா |

## விளச்சீர்

| | |
|---|---|
| நேர் நிரை | கூவிளம் |
| நிரை நிரை | கருவிளம் |

நேர் ஈற்றுச் சீர்களை மாச்சீர் என்றும் நிரை ஈற்றுச் சீர்களை விளச்சீர் என்றும் கூறுவர்.

மூவசைச் சீர்களில் நேர் ஈற்றுச் சீர்களுக்கு மேற்கண்ட வாய்பாடுகளுடன் இறுதியில் காய் என்பதும் நிரை ஈற்றுச் சீர்களுக்கு இறுதியில் கனி என்பதும் வாய்பாடாக வரும்.

### காய்ச்சீர்

| | |
|---|---|
| நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| நிரை நிரை நேர் | கருவிளங்காய் |

### கனிச்சீர்

| | |
|---|---|
| நேர் நேர் நிரை | தேமாங்கனி |
| நிரை நேர் நிரை | புளிமாங்கனி |
| நேர் நிரை நிரை | கூவிளங்கனி |
| நிரை நிரை நிரை | கருவிளங்கனி |

சீர்களை எளிதில் நினைவில் வைத்திருக்க உதவியாக இருக்கும் என்பதால் வாய்பாடு கூறப்படுகிறது.

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஏதிலார் - இதில் அமைந்துள்ள வாய்பாடு

அ) கூவிளம் ஆ) கருவிளம் இ) தேமா ஈ) புளிமா

2. நிரை நேர் நேர் - இச்சீர் காட்டுவது

அ) காய்ச்சீர் ஆ) கனிச்சீர் இ) மாச்சீர் ஈ) விளச்சீர்

3. யாப்பின் உறுப்புகளில் அமையாதது

அ) தளை ஆ) அடி இ) படி ஈ) தொடை

4. நிரை நிரை நிரை வாய்பாடு என்ன?

அ) கூவிளங்கனி ஆ) கருவிளங்கனி இ) கருவிளங்காய் ஈ) கூவிளங்காய்

5. நான்கு அசைகள் இணைந்து வருவது?

அ) மூவசைச் சீர் ஆ) ஈரசைச் சீர் இ) நாலசைச் சீர் ஈ) ஓரசைச் சீர்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. யாப்பின் உறுப்புகள் யாவை?
2. அசை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
3. மூவசைச் சீர்களை வாய்பாட்டுடன் எழுதுக.
4. நேரசை – குறிப்பு எழுதுக.
5. நாலசைச் சீர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## 24.5 கருத்துவிளக்கப் படம்

Published on 03 Jun 2023 20:39 pm

# இரத்தம் தானம் வழங்க குவிந்த இளைஞர்கள்

இந்தியாவின் ஒடிசா மாநிலம் பாலசோர் பகுதிக்கு அருகில் மூன்று ரயில்கள் மோதிக்கொண்டதால் விபத்து ஏற்பட்டது. அவ்விபத்தில் காயமடைந்தவர்களுக்கு இரத்தம் தேவைப்பட்டது. இந்த அறிவிப்பு வந்த சிறிது நேரத்தில், இரத்ததானம் வழங்குவதற்காகக் காயம் அடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள கட்டாக் மருத்துவமனையில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கூடினர். இளைஞர்கள் பலர் விடிய விடிய 500 யூனிட் இரத்த தானம் வழங்கியுள்ளனர். இந்தச் செய்தி அனைவரையும் நெகிழச் செய்தது. மேலும், ரயில் பெட்டிகளுக்குள் சிக்கிக்கொண்டவர்களை மீட்கும் பணியில் அங்கிருந்த உள்ளூர் மக்கள் இரவு முழுவதும் உதவினர். இரத்தம் வழங்கிய இளைஞர்களுக்கும் உதவிய உள்ளூர் மக்களுக்கும் இந்தியப் பிரதமர் நன்றி தெரிவித்தார்.



## வினாக்கள்

1. இரயில் விபத்து எங்கு நடந்தது?
2. இரயில் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு என்ன தேவைப்பட்டது?
3. இரயில் பெட்டிகளுக்குள் சிக்கிக்கொண்டவர்களை மீட்க உதவியவர்கள் யார்?
4. யார் யாருக்குப் பிரதமர் நன்றிகூறினார்?
5. இந்தச் செய்தி வெளியான நாள் என்ன?

## தகவல் துளி

பண்டைய தமிழ் மொழியில் நிறுத்தற்குறியிடும் வழக்கம் இல்லை. தமிழில் சொற்களே, நிறுத்தச் சொல்லாகவும் விட்டிசைச் சொல்லாகவும் முற்றுச் சொல்லாகவும் வினாச்சொல்லாவும் விளியாகவும் இருந்துள்ளன. பழங்காலத்தில் பனை ஓலைகளிலோ கல்வெட்டுகளிலோ ஒரு பாடலை எழுதி முடித்ததும் அதனை எழுதி முடித்தமைக்கு அடையாளமாக அதன் இறுதியில் சுழியம் இடுதல் (O), இணைகோடுகள் இடுதல் (//) அல்லது கோடு இடுதல் (/) என்னும் வழக்கம் இருந்துள்ளது. எனினும், தமிழ் மொழி உரைநடைக்குத் தன்னைப் புதுப்பித்துக்கொண்டபோது பல்வேறு வகையான நிறுத்தற்குறிகள் பயின்றுவரத் தொடங்கின. இன்று தமிழ்மொழியின் இலக்கண நெறிகளுக்கு ஏற்ப, சொற்றொடர்களைப் பிரித்துப் பொருளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள நிறுத்தற்குறிகள் உதவுகின்றன.

## 24.6 கேட்டல் கருத்தறிதல்

### மணிமேகலை

ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று மணிமேகலை. இந்தக் காப்பியத்தின் தலைவி மணிமேகலை. இவரின் பெயராலேயே இவ்விலக்கியம் இப்பெயர் பெற்றது. இவர் சிலப்பதிகாரக் காப்பியத்தில் வரும் கோவலன் மற்றும் மாதவியின் மகளாவார். தமது கருத்துகள் மூலம் சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றியவர்.

ஆபுத்திரன் என்பவர் இவருக்கு அட்சயப்பாத்திரத்தை வழங்கினார். அனைத்தையும் வழங்கும் தன்மை கொண்டது அட்சயப்பாத்திரம். இருப்பினும், பிற உயிர்களின் பசியைத் தீர்ப்பதற்காகவே அட்சயப்பாத்திரத்தைப் பயன்படுத்தினார். அறம் எனப்படுவது மண்ணுயிர்க்கு எல்லாம் உண்டியும் உடையும் உறைவிடமும் கொடுப்பதே என்கிறார் மணிமேகலை. அதாவது உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றைக் கொடுப்பதே அறம் என்கிறார். இளமையும் உடலும் செல்வமும் நிலையானவை அல்ல; அறம் ஒன்றே நிலையானது என்கிறார். பசி ஒழிப்பு, மது ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சிறை ஒழிப்பு போன்ற பல சீர்திருத்தங்களைப் பேசுபவராக மணிமேகலை காட்டப்பட்டுள்ளார்.

### வினாக்கள்

1. மணிமேகலைக் காப்பியத்தின் தலைவி யார்?
2. மணிமேகலைக்கு அட்சயப் பாத்திரத்தை வழங்கியவர் யார்?
3. அறம் எனப்படுவது யாது என மணிமேகலை கூறுகிறார்?
4. மணிமேகலை கூறும் சீர்திருத்தங்கள் யாவை?
5. மணிமேகலை எதற்காக அட்சயப் பாத்திரத்தைப் பயன்படுத்தினார்?

## 24.7 மொழிபெயர்ப்போம்

ஒரு செயலுக்கு அடிப்படையாக இருப்பது எண்ணமாகும். ஒருவரின் எண்ணம் தூய்மையாக இருந்தால்தான் சொல்லும் செயலும் தூய்மையாக இருக்கும். எண்ணத்தின் இருப்பிடமாக உள்ள மனத்தில் பொறாமை, பேராசை, கோபம் போன்ற மன மாசுகளை நீக்க முயல்வதே அறம் ஆகும். மனத்தூய்மைக்கு அறம் பெரிதும் உதவுகிறது.

______________________________

______________________________

______________________________

______________________________

## 24.8 அறிந்துகொள்வோம்

1. குருதி – Blood
2. தூய்மை – Cleanliness
3. மணம் – Fragrance
4. மருத்துவ ஆய்வு – Clinical Examination
5. வழிபாடு – Worship
6. குளம் – Pond
7. நல்லெண்ணம் – Goodwill
8. களங்கம் – Blemish
9. மகான் – Great Soul
10. மடாலயம் – Monastery
11. நிறுத்தற்குறி – Punctuation
12. சீர்திருத்தம் – Reformation

## 24.9 உயர்நிலைத்திறன்

**பின்வரும் கதையைச் சரியான முறையில் வரிசையாக மாற்றி அமைத்து அதற்கேற்றாற்போல் தலைப்பு ஒன்றை இடுக.**

- ❖ என்னம்மா... இவ்வளவு சிறிய பையைத் தூக்கிக்கொண்டே மலை ஏற என்னால் முடியவில்லையே! உன்னால் எப்படியம்மா இந்தச் சிறுவனைத் தூக்கிக்கொண்டு ஏற முடிகிறது?
- ❖ குன்னூர் மலையடிவாரத்தில் மருதூர் என்ற அழகிய கிராமம் இருந்தது.

❖ சற்றுத் தூரம் இன்னும் முன்னால் போனதும், அங்கே ஒரு மலைவாழ் சிறுமி தனது மூன்று வயதுத் தம்பியைத் தூக்கிக்கொண்டும், உற்சாகமாய்ப் பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டும் மிகச்சாதாரணமாய் மலை உச்சி நோக்கிப் போவதைப் பார்த்தார்.

❖ செங்குத்தான மலை. எனவே, மேலே ஏறஏறச் சுமை அதிகமாகி மூச்சு வாங்கத் தொடங்கியது அவருக்கு.

❖ அய்யா... நீங்கள் தூக்கிக்கொண்டிருப்பது ஒரு சுமையை, ஆனால், நான் தூக்கிக் கொண்டிருப்பதோ என் தம்பியை! அன்பு எதையும் சுமக்கும் என்று அந்த நபருக்குப் புரிந்தது.

❖ பெரியவருக்கோ ஆச்சரியமான ஆச்சரியம். அவர் சிறுமியைப் பார்த்துக் கேட்டார்.

❖ அதற்கு அந்தச் சிறுமி பதில் சொன்னாள்.

❖ ஒரு நாள் அந்த ஊரிலிருந்து ஒருவர் தமக்குத் தேவையான பொருள்களைத் தூக்கிக்கொண்டு மலை உச்சியை நோக்கி ஏறிக்கொண்டிருந்தார்.

## 24.10 செயல் திட்டம்

'தனக்கு மிஞ்சித்தான் தானமும் தர்மமும்' என்ற தலைப்பில் ஒரு குழு, 'இறைக்கிற கிணறுதான் ஊறும்' என்ற தலைப்பில் ஒரு குழு என இரண்டாகப் பிரிந்து விவாத அரங்கம் ஒன்றை நிகழ்த்துக.

## மீள்பார்வை

**1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.**

(பண்பாட்டை, அறிவியல், அன்பு, இரட்டைக்காப்பியங்கள், நீலகேசி)

1. தன்னைச் சேர்ந்தவர்களை வெறுக்காமல் இருப்பது ________________.
2. மக்கள் தாம் வாழும் சமூகத்தை மையமாக வைத்தே ________________ அமைத்துக்கொள்கின்றனர்.
3. ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒலி, ஒளி பற்றிய அறிவியல் சிந்தனைகளைப் பற்றிக் கூறும் நூல் ________________.
4. அறிவுப்பாதையில் அழைத்துச்செல்லும் ________________ இல்லையென்றால் வாழ்வில் முன்னேற்றம் இருந்திருக்காது.
5. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ________________ என அழைக்கப்படுகின்றன.

**2) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா/தவறா எனக் குறிப்பிடுக.**

1. பாரதியாரின் படைப்புகள் தமிழ்நாடு அரசால் 1946ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. (சரி/தவறு)
2. நாலடியார் 'நாலடி நானூறு' எனவும் அழைக்கப்படுகிறது. (சரி/தவறு)
3. கவிஞர் வெற்றியழகனின் இயற்பெயர் வைரமுத்து. (சரி/தவறு)
4. தமிழில் தோன்றிய பௌத்தக்காப்பியங்களுள் முதன்மையானது மணிமேகலை. (சரி/தவறு)
5. கலித்தொகை வெண்பாவால் பாடப்பட்டது. (சரி/தவறு)

**3) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கலித்தொகை நூல் குறித்து விளக்குக.
2. ஒலி, ஒளி பற்றிய கருத்துகளை நீலகேசி எவ்வாறு விளக்குகிறது?
3. ஒரு நாட்டின் வளர்ச்சி குறித்து மகாகவி பாரதியார் குறிப்பிடுவனவற்றை எழுதுக.
4. கவிஞர் வெற்றியழகன் பற்றிக் குறிப்பு வரைக.
5. செல்வ நிலையாமை குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**4) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எகிப்தியர்களின் முக்கியமான உணவுப்பொருள் எது?

   அ) தேநீர் ஆ) பாதாம் இ) ரொட்டி ஈ) பீட்சா

2. தமிழில் எழுதப்பட்ட முதலாவது தருக்க நூல் எது?

   அ) நீலகேசி ஆ) நாலடியார் இ) மணிமேகலை ஈ) சிலப்பதிகாரம்

3. 'விஞ்ஞானி' எனும் இக்கவிதையை எழுதியவர் யார்?

   அ) பாரதியார் ஆ) மீரா இ) வைரமுத்து ஈ) வெற்றியழகன்

4. ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நூல் எது?.

   அ) நீலகேசி ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) நாலடியார்

5. தம் உடலை மருத்துவ ஆய்வுக்கு வழங்கிய கவிஞர் யார்?

   அ) வைரமுத்து ஆ) மீரா இ) வெற்றியழகன் ஈ) பாரதியார்

**5) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சங்கப்புலவர்களின் பரந்த மனப்பான்மை குறித்து விளக்குக.
2. சுவிட்சர்லாந்து நாடு குறித்து மகிழினி கூறும் தகவல்களைத் தொகுத்து எழுதுக.
3. ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் அவர்கள் எழுதிய நூல்கள் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட விருதுகள் யாவை?
4. திரைக்கதை குறித்து விளக்குக.
5. போர் முன்னறிவிப்பு பற்றி எழுதுக.

**6) கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.**

1. வேற்றுமைத்தொகை என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. குற்றியலுகரப்புணர்ச்சி என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. அசை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
4. தொகைநிலைத்தொடர் மற்றும் தொகாநிலைத்தொடரை எடுத்துக்காட்டுடன் வேறுபடுத்திக் காட்டுக.
5. வழுநிலை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**7) பின்வருவனவற்றைப் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. நெடில்தொடர்க் குற்றியலுகரம் | - | தன்வினை |
| 2. செடி வளர்ந்தது | - | சால்பு |
| 3. அம்மா வந்தது | - | நாடு |
| 4. பாண்டியன் பாடம் படித்தான் | - | எழுவாய் வேற்றுமை |
| 5. இடைத்தொடர்க் குற்றியலுகரம் | - | திணை வழு |

**8) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. Ceremony | - | 6. Reformation | - |
| 2. Value | - | 7. Stamp | - |
| 3. Fonts | - | 8. Dignity | - |
| 4. Glossary | - | 9. Scientist | - |
| 5. Fragrance | - | 10. Air Force | - |

**9) கீழ்க்காணும் பாடல்களை மற்றும் கவிதைகளைப் பிழையின்றி எழுதுக.**

1. 'ஆற்றுதல்' எனத் தொடங்கும் கலித்தொகைப் பாடலடிகளைப் பாடப்பகுதியிலிருந்து எழுதுக.
2. 'வாய்த்துரை' எனத் தொடங்கும் நீலகேசிப் பாடலை எழுதுக.
3. 'இறைக்கின்ற கிணற்றில்' எனத் தொடங்கும் வெற்றியழகனின் கவிதையை எழுதுக.
4. 'மன்னவன்' எனத் தொடங்கும் மணிமேகலைப் பாடலடிகளைப் பாடப்பகுதியிலிருந்து எழுதுக.
5. 'துகள்தீர்' எனத் தொடங்கும் நாலடியார் பாடலை எழுதுக.

**10) கீழ்க்காணும் இலக்கணக் கூற்றுகளை அதனதன் எடுத்துக்காட்டுடன் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் | - | பலா |
| 2. நேர் அசை | - | அஃதென்ன |
| 3. நிரை அசை | - | பூங்குழல் வந்தாள் |
| 4. அன்மொழித் தொகை | - | கால் |
| 5. வன்தொடர்க் குற்றியலுகரம் | - | தடுப்பணை |

**11) பின்வரும் தமிழ்ச்சொற்களுக்கு இணையான பொருளை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. குருதி | - | 6. ஆற்றுதல் | - |
| 2. சகடக்கால் | - | 7. பீடு | - |
| 3. திரவியம் | - | 8. தேறு | - |
| 4. கணை | - | 9. கேணி | - |
| 5. ஈகை | - | 10. காசினி | - |

**12) பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை எழுதுக.**

1. நடுகல்லை இவ்வாறும் அழைப்பர்?
2. குடியுரிமை பெற்ற உலகின் முதல் இயந்திர மனிதர் யார்?
3. முழுவதும் தமிழிலேயே அச்சான முதல் நூல் எது?
4. இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலைவர் யார்?
5. உலகின் எடை குறைந்த செயற்கைக்கோள் எது? அதை உருவாக்கியவர் யார்?

**13) பின்வரும் உரைப்பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. தமிழ்நாடு தென்னிந்தியாவின் ஒரு மாநிலமாகும், இது பண்பாடு மற்றும் பாரம்பரியத்தில் மிகவும் செழுமையானது. உலகின் பழமையான நாகரிகங்களுள் ஒன்றாக அறியப்படும் தமிழ்நாட்டு மக்கள் புகழ்பெற்ற திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

2. தொல்காப்பியம் தமிழ்மொழிக்கு இலக்கணம் கூற வந்த நூலாயினும் அறிவியல், தத்துவம், மருத்துவம், வானவியல், சோதிடம், கணிதம் போன்ற கருத்துகளை வெளியிடும் ஒரு நூலாகவும் அது அமைந்துள்ளது.

3. கணினித்துறையில் மனித மொழிகளின் பல்வேறு செயல்பாடுகளுக்காக மென்பொருள்களையும் வன்பொருள்களையும் உருவாக்கும் தொழில்நுட்பமே மொழித்தொழில் நுட்பம் என அழைக்கப்படுகிறது.

4. நம் முன்னோர்கள் வாழ்வு முழுவதும் அறத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அறவழியில் வாழ்ந்தனர். தமிழர் வாழ்வானது அறம், பொருள், இன்பம் என்ற மூன்று கோட்பாடுகளால் அமைந்தவை. இவை மூன்றிலும் அறத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.

5. உலகில் பல்வேறு மொழிகள் இருப்பினும், மக்கள் அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும் உலகமொழி, திரைப்படம். அது உதடுகளால் பேசும் மொழியன்று; உள்ளத்தால் பேசி, உணர்ச்சிகளால் உருவாகும் மொழி.

14) பின்வரும் விளம்பரத்தைப் படித்து, கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




**வினாக்கள்**

1. விளம்பரத்தில் காணப்படும் நிகழ்ச்சியின் தலைப்பு என்ன?
2. நிகழ்ச்சியை நடைபெற்ற மாவட்டம் எது?
3. நிகழ்ச்சி நடைபெறும் இடம் எது?
4. நிகழ்ச்சியில் யார் யார் கருத்துரை வழங்கினர்?
5. நிகழ்ச்சி எங்கு, எப்போது நடைபெற்றது?

15. பின்வரும் வினாவிற்கு உங்கள் சொந்தக் கற்பனையில் விடை எழுதுக.

அ) பொங்கல் விழா குறித்து இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் கட்டுரை ஒன்றை எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வதற்காக நியூயார்க்கில் உள்ள உன் நண்பனை அழைப்பது போல் கடிதம் ஒன்றினை எழுதுக.

பாடம்
25

## 25.1 பேசுவோம்



## கலந்துரையாடுவோம்

தமிழர்களின் உணவுமுறையில் அன்றாடம் பயன்படுத்திய மூலிகைப்பொருள்கள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 25.2 படிப்போம்

### ஆசாரக்கோவை

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது சான்றோர் வாக்கு. உடல் நலம்தான் அனைத்துச் செல்வங்களையும்விட உயர்ந்த செல்வமாகும். மற்ற செல்வங்களைப் பெறவும், பெற்ற செல்வங்களை அனுபவிக்கவும் உடல்நலம் மிக அவசியம். உண்ணும் முறையால் உடல்நலம் சிறக்கும் என்பதை ஆசாரக்கோவை தெளிவுபடுத்துகிறது.

கிடந்துண்ணார்; நின்றுண்ணார்; வெள்ளிடையும் உண்ணார்;
சிறந்து மிகவுண்ணார்; கட்டில்மேல் உண்ணார்;
இறந்தொன்றும் தின்னற்க நின்று. (பாடல் – 23)

கைப்பன எல்லாம் கடை, தலை தித்திப்ப,
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க, முறைவகையால் ஊண். (பாடம் – 25)

- பெருவாயின் முள்ளியார்

### பாடலின் பொருள்

1. படுத்துக்கொண்டும் நின்றுகொண்டும் திறந்தவெளியிலும் உணவு உண்ணக் கூடாது. நன்றாக இருக்கிறது என்று அளவுக்கு அதிகமாக உண்ணுதலும் கூடாது. கட்டில் மேல் அமர்ந்தும் உண்ணக் கூடாது. நெறிமுறை இல்லாமல் எந்தவொரு உணவுப்பொருளையும் நின்றுகொண்டு உண்ணுதலும் கூடாது.

2. உண்ணும்போது இனிப்பான உணவை முதலில் உண்ண வேண்டும். கசப்பான உணவை இறுதியில் உண்ண வேண்டும். மற்ற சுவையுடைய உணவை இடையில் உண்ண வேண்டும்.

### நூலைப் பற்றி

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று ஆசாரக்கோவை. ஆசாரம் என்றால் ஒழுக்கம் என்று பொருள். ஒழுக்க நெறிமுறைகளைக் கோவையாகச் சொல்வதால் இப்பெயர் பெற்றது. இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது. இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார்.

### பொருள் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கிடந்து | – | படுத்து |
| 2. | வெள்ளிடை | – | திறந்தவெளி |
| 3. | இறந்து | – | நெறிமுறை இல்லாமல் |
| 4. | தின் | – | உண் |
| 5. | கைப்பு | – | கசப்பு |

6. கடை – இறுதி

7. தலை – முதல்

8. தித்திப்பு – இனிப்பு

9. துய்க்க – உண்க

## பயிற்சிகள்

### அ) பொருத்துக.

1. கிடந்து – உண்
2. தின் – இறுதி
3. கைப்பு – படுத்து
4. கடை – இனிப்பு
5. தித்திப்பு – கசப்பு

### ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(ஆசாரக்கோவை, நூறு, ஒழுக்கம், சான்றோர், இனிப்பான)

1. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது ____________________ வாக்கு.
2. உண்ணும் முறையால் உடல்நலம் சிறக்கும் என்பதை ____________________ தெளிவுபடுத்துகிறது.
3. உண்ணும்போது ____________________ உணவினை முதலில் உண்ண வேண்டும்.
4. ஆசாரம் என்றால் ____________________ என்று பொருள்.
5. ஆசாரக்கோவை ____________________ வெண்பாக்களைக் கொண்டது.

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. எது குறைவற்ற செல்வம்?
2. ஆசாரக்கோவை - பெயர்க்காரணம் கூறுக.
3. ஆசாரக்கோவை – குறிப்பு வரைக.
4. எவ்வாறெல்லாம் உண்ணக் கூடாது என ஆசாரக்கோவை கூறுகிறது?
5. உணவை எந்த வரிசையில் உண்ண வேண்டும் என்று ஆசாரக்கோவை கூறுகிறது?

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. உணவை உண்ண வேண்டிய முறை குறித்து ஆசாரக்கோவை கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

## 25.3 படிப்போம்

### தமிழர் மருத்துவம்



தமிழர்கள் நோயின்றி வாழ்வதற்கான வழிமுறைகளைத் தங்கள் அன்றாட வாழ்க்கை முறைகளுடனேயே கடைப்பிடித்தனர். அதை நம் இலக்கியங்களும் ஓலைச்சுவடி முதலான ஆவணங்களும் எடுத்துரைக்கின்றன.

பழந்தமிழகத்தில் பயன்பாட்டில் இருந்துவந்த மருத்துவம் 'தமிழ் மருத்துவம்' என்றே அழைக்கப்பெற்றது. 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்னும் திருமூலரின் கூற்று தமிழர்கள் உடல் நலத்திற்கு அளித்துவந்த முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. மருத்துவன் தாமோதரன், மருத்துவன் நல்லச்சுதன் போன்ற புலவர்களின் பெயர்களைச் சங்கநூல்கள் காட்டுகின்றன. மருத்துவமனைகளை 'ஆதுரசாலை' என்று அழைத்ததையும், 'சல்லியக்கிரியை' என்ற பெயரால் அறுவைச் சிகிச்சை நடைபெற்றதையும் சோழர்காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. 'திருந்திய யாக்கையும் மருத்துவர் ஊட்டிய மருந்துபோல' என்ற அடிகள் கலித்தொகையிலும், 'மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்' என்ற அடி மூதுரையிலும் மருந்து பற்றிய குறிப்புகளைத் தருகின்றன.

ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஆகிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அவற்றின் பெயரிலேயே மருத்துவத்தைத் தாங்கியுள்ளன. ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு சேர்ந்த சூரணம் நோயைத் தீர்ப்பதுபோல ஒவ்வொரு பாடலிலும் ஆறு பொருள்கள் பற்றிய கருத்துகளை முன்வைத்து அறிவுரை சொல்வதுபோல் அமைந்த நூல் ஏலாதி ஆகும். சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றும் உடலில் உள்ள நோயைத் தீர்ப்பதுபோல வாழ்க்கைக்குத் தேவையான நல்ல செய்திகளை, பாடலுக்கு மூன்றாகக் கூறும் நூல் திரிகடுகம். சிறுமல்லி, பெருமல்லி,

சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, நெருஞ்சி ஆகிய ஐந்து வேர்கள் எவ்வாறு நோயைப் போக்குகின்றனவோ அதுபோல் படிப்போர் உள்ளத்தில் உள்ள அறியாமையை ஐந்து கருத்துகளால் போக்கும் நூல் சிறுபஞ்சமூலம். இவற்றை வைத்துப் பார்க்கும்போது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மருத்துவத்துறையில் தமிழர்கள் பெற்றிருந்த அறிவையும் வளர்ச்சியையும் அறிந்துகொள்ள முடிகிறது.

திருவள்ளுவர் மருத்துவத்திற்கென்றே தனி அதிகாரம் படைத்துள்ளார். நோயற்ற மக்களைக் கொண்ட நாடே உலகில் சிறந்த நாடாகத் திகழ முடியும் என்பதை,

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு (724)

என்னும் குறளில் குறிப்பிடுகிறார். மேலும்,

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (942)

என்ற குறளில் உணவே அருமருந்து என்பதை நிறுவுகிறார்.

அந்நாளில் போர்க்களங்களில் காயம் பட்டவர்களை மருத்துவமனைகளில் வைத்து மருத்துவம் செய்தனர். அவ்வாறு செய்வதற்குப் பயன்பட்ட பல வகையான மருந்துகள், அறுவை சிகிச்சை செய்வதற்குப் பயன்பட்ட பொருள்கள் போன்றவை இலக்கியங்களிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. 600 வகையான மருந்துகளும் 100 வகையான அறுவை மருத்துவ ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டதை அறிய முடிகிறது. தமிழரின் மருத்துவத்தில் 'வெல்லூசி' எனும் ஊசி பயன்பட்டதைப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. அது மட்டுமன்றி மருத்துவர் எவ்வாறு இருந்தார் என்பதை,

அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் (நற்.136)

என்னும் நற்றினை அடிகள் எடுத்துரைக்கின்றன. அதாவது, மருத்துவர் நோயின் தன்மையைக் கண்டு நோய்க்கு ஏற்ற மருந்தை ஆய்ந்து கொடுக்க வேண்டும். இவ்வாறு மருந்தை ஆய்ந்து கொடுப்பவர் 'அறவோன்' என்று அழைக்கப்பட்டார்.

மருத்துவம் பற்றிய புரிதலிலும் உடற்கூறு குறித்த அறிவிலும் தமிழர்கள் சிறந்து விளங்கினர். உலகில் பல்வேறு மருத்துவ முறைகள் இருந்தாலும், தமிழர்கள் தமக்கென மரபு சார்ந்த முறைகளை உருவாக்கிப் பின்பற்றினர். இயற்கையோடு இணைந்ததாகப் பழந்தமிழரின் மருத்துவ முறை இருந்தது. அவர்கள் தாவரங்களின் வேர், பட்டை, இலை, பூ, கனி முதலியவற்றை மருந்தாகப் பயன்படுத்தினர்.

உடல்நலனுக்குத் தமிழர்கள் முதன்மையான இடம் அளித்திருந்தனர் என்பதை மேற்கண்ட குறிப்புகள் உறுதிப்படுத்துகின்றன.

## பொருள் அறிவோம்

1. கூற்று - சொல்லுதல்
2. ஆதுரசாலை - மருத்துவமனை
3. பிணி - நோய்

4. ஆய்ந்து - ஆராய்ந்து

5. திரிகடுகம் - சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் சேர்ந்த மருந்து.

## பயிற்சிகள்

### அ) பின்வரும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1. சோழர்காலக் கல்வெட்டுகளில் மருத்துவமனைகள் 'ஆதுரசாலை' என்று அழைக்கப்பெற்றன. (சரி/தவறு)
2. 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்ற வரி திருவள்ளுவருடையது. (சரி/தவறு)
3. பசித்த பிறகு உண்டால் மருந்து தேவையில்லை என வள்ளுவர் கூறுகின்றார். (சரி/தவறு)
4. 'வெல்லூசி' என்னும் ஊசி மருத்துவத்தில் பயன்பட்டதைக் கூறும் நூல் சிறுபஞ்சமூலம். (சரி/தவறு)
5. தாவரங்களின் வேர், பட்டை, இலை, பூ, கனி முதலியவற்றைப் பழந்தமிழர்கள் மருந்தாகப் பயன்படுத்தினர். (சரி/தவறு)

### ஆ) கீழ்க்காணும் பகுதியிலுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அறவோன், ஏலாதி, சோழர்காலக், மருத்துவர், மூதுரை)

1. நூலின் பெயரிலேயே மருத்துவத்தைக் கூறும் நூல் ____________.
2. 'மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்' என்று கூறுவது ____________.
3. 'ஆதுரசாலை' பற்றிச் ____________ கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.
4. 'அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்' என்னும் அடிகளில் குறிப்பிடப்படுபவர் ____________.
5. மருந்து ஆய்ந்து கொடுப்பவர் ____________ என்று அழைக்கப்பட்டார்.

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மருத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடும் நூல்களைப் பட்டியலிடுக.
2. மருந்து தொடர்பான திருக்குறள் அதிகாரத்தில், உங்களுக்குத் தெரிந்த கருத்துகள் ஏதேனும் இரண்டை எழுதுக.
3. தமிழர் மருத்துவத்திற்குப் பயன்பட்ட பொருள்கள் யாவை?

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடை எழுதுக.

1. தமிழர்கள் நோயின்றி வாழ்வதற்கான வழிமுறைகளைத் தங்கள் அன்றாட வாழ்வில் கடைப்பிடித்து வந்தனர் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் கூறும் சான்றுகளுடன் விளக்குக.
2. தமிழர் மருத்துவத்தின் இன்றைய தேவையும் போக்கும் குறித்து இணையதளம் வாயிலாக அறிந்து எழுதுக.

## 25.4 தெரிந்துகொள்வோம்

### யாப்பின் உறுப்புகள் (தளை, அடி, தொடை)

தளை என்பதற்குப் பிணைத்தல் அல்லது கட்டுதல் என்று பொருள். முதற்சீரின் கடைசி அசையும் அடுத்த சீரின் முதல் அசையும் சேருதல் தளை. ஓர் அடியில் நான்கு சீர் இருந்தால், இவற்றுக்கு இடையே மூன்று தளைகள் தோன்றும்.

சான்று:

| சீர் 1 | | சீர் 2 | | சீர் 3 | | சீர் 4 |
|---|---|---|---|---|---|---|
| மலர்மிசை | ↓ | ஏகினான் | ↓ | மாணடி | ↓ | சேர்ந்தார் |
| ஒரு தளை | | ஒரு தளை | | | ஒரு தளை | |

### தளை வகைகள்:

தளைகள் ஏழு வகைப்படும். அவை,

| | | |
|---|---|---|
| 1. | நேர் ஒன்றாசிரியத்தளை | ஆசிரியப்பாவிற்கு உரியன |
| 2. | நிரை ஒன்றாசிரியத்தளை | |
| 3. | இயற்சீர் வெண்டளை | வெண்பாவிற்கு உரியன |
| 4. | வெண்சீர் வெண்டளை | |
| 5. | கலித்தளை | கலிப்பாவிற்கு உரியது. |
| 6. | ஒன்றிய வஞ்சித்தளை | வஞ்சிப்பாவிற்கு உரியன. |
| 7. | ஒன்றாத வஞ்சித்தளை | |

### அடி

இரண்டும் இரண்டிற்கும் மேற்பட்ட சீர்களும் தொடர்ந்து வருவது அடி எனப்படும். இது ஐந்து வகைப்படும்.

| வ.எண். | அடி | அடி இலக்கணம் |
|---|---|---|
| 1. | குறளடி | இரண்டு சீர்களைக் கொண்டது |
| 2. | சிந்தடி | மூன்று சீர்களைக் கொண்டது |
| 3. | அளவடி | நான்கு சீர்களைக் கொண்டது |
| 4. | நெடிலடி | ஐந்து சீர்களைக் கொண்டது |
| 5. | கழிநெடிலடி | ஆறும் அதற்கு மேற்பட்ட சீர்களையும் கொண்டது |

## தொடை

செய்யுள்களின் சீர்களும் அடிகளும் தொடுத்துச்செல்கிற முறையுடன் தொடர்புபட்டிருப்பதால் தொடை என வழங்கப்படுகிறது. செய்யுள்களின் ஓசை நயத்துக்கும் அவற்றின் இனிமைக்கும் தொடைகள் முக்கியமானவை. தொடைகள் எட்டு வகைப்படும். அவை,

1. மோனைத் தொடை    2. எதுகைத் தொடை

2. இயைபுத் தொடை    4. முரண் தொடை

5. அளபெடைத் தொடை    6. அந்தாதித் தொடை

7. இரட்டைத் தொடை    8. செந்தொடை

என்பனவாகும். இவற்றுள் மோனை, எதுகை, முரண் மற்றும் அளபெடைத் தொடைகள் செய்யுள் அடிகளின் முதற் சீருடன் தொடர்புடையவை. அடிகளின் இறுதிச் சீருடன் தொடர்புடையது இயைபுத் தொடை ஆகும்.

### யாப்பிலக்கண நூல்கள்

இதுவரை கிடைத்துள்ள தமிழ் இலக்கண நூல்களிலே மிகவும் பழமையான நூலாகிய தொல்காப்பியத்திலேயே யாப்பிலக்கணம் கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில் ஏற்பட்ட யாப்பிலக்கண வளர்ச்சிகளையும் உட்படுத்தி எழுதப்பட்ட நூல் யாப்பருங்கலக் காரிகை. இதன் ஆசிரியர் அமிர்தசாகரர்.

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(ஏழு, இரண்டு, பிணைத்தல், எட்டு, ஆசிரியப்பா)

1. தளை என்ற சொல்லின் பொருள் ____________________.
2. தளைகள் ____________________ வகைப்படும்.
3. நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை ஆகிய இரண்டு தளைகளும் ____________________ பாவிற்கு உரிய தளைகள்.
4. குறளடி ____________________ சீர்களைக் கொண்டது.
5. தொடைகள் ____________________ வகைப்படும்.

### ஆ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. தளை என்றால் என்ன?
2. தளையின் வகைகள் குறித்து எழுதுக.
3. யாப்பிலக்கணம் கூறும் அடி, தொடை குறித்து எழுதுக.
4. அடி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. தொடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## 25.5 மொழியோடு விளையாடுவோம்

**கலைந்துள்ள எழுத்துகளைக் கொண்டு சொல் உருவாக்குவோம்**

| | சரியான சொல் | புதிய சொல் | புதிய சொல் |
|---|---|---|---|
| ழிற்ள்சாதொகலை | | | |
| னமாவிம் | | | |
| டள்பம்க்ளிகூ | | | |
| ணறிண்நுவு | | | |
| ருத்மவம்து | | | |

## தகவல் துளி

### யோகா

ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 21 பன்னாட்டு யோகா நாளாகக் கொண்டாடப்படுகிறது. யோகம் என்ற சொல்லுக்கு இணைதல் அல்லது இணக்கமாக இருத்தல் என்று பொருள். யோகம் என்பது இந்தியாவில் கடைப்பிடிக்கப்படும் நல்வாழ்விற்கான பழக்கமுறைகளில் இன்றியமையாத ஒன்றாகும். நோன்பியர் எனப்படும் தவ முனிவர்கள் தங்கள் கைகளை ஊன்றிக்கொண்டு இருக்கையில் அமர்ந்திருந்தது பற்றி நற்றிணைப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. யோகாவை அப்பாடல் கையூண் இருக்கை என்று குறிப்பிடுகிறது. மனிதரின் உடல் நலத்தையும் உள நலத்தையும் ஒருசேரப் பேணுவதற்குப் பயன்படும் கலை இது.

## 25.6 கேட்டல் கருத்தறிதல்

### டாக்டர் வை. கிருஷ்ணமூர்த்தி
### (1929 – 2002)

இப்புவி மனிதர்களுக்கானது மட்டுமன்று; தாவரங்கள், பறவைகள், விலங்குகள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களுக்குமானது. இவ்வாறு பிற உயிரினங்களின் நலத்தைப் பேணுவதற்காகத் தன் வாழ்நாள் முழுக்க அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டவர்கள் பலர். அவர்களுள் 'யானை டாக்டர்' என அழைக்கப்படும் டாக்டர் வை. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடத்தக்கவர். இவரை 'டாக்டர் கே' என்று அழைப்பர்.

இவர் தமிழ்நாட்டின் முக்கியமான வனவியல் வல்லுநர்களில் ஒருவர். யானைகளுக்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்தவர். உலகப் புகழ்பெற்ற அறிவியல் இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். வனப்பேணுநர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான 'வேணுமேனன் ஏலீஸ்' விருதினை (Venu Menon Allies Award) 2000ஆம் ஆண்டில் பெற்றார். தமிழகக் கோவில் யானைகளுக்கு வனப் புத்துணர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதை அரசின் மூலம் செயல்படுத்தியவர்.

"உண்மையில், இருப்பதிலேயே மிகவும் பலவீனமான மிருகம் மனிதன்தான். மற்ற மிருகங்களெல்லாம் நோயையும் வலியையும் பொறுத்துக்கொள்வதில் இருக்கும் கம்பீரத்தைப் பார்த்தால் கண்களில் தண்ணீர் வந்துவிடும். உயிர்போகிற வலி இருந்தாலும் யானை அலறாது, துடிக்காது; கண் மட்டும் நன்றாகச் சுருங்கியிருக்கும். உடல் ஆங்காங்கே அதிரும். யானை சம்மதித்தால் அதற்கு மயக்க மருந்தே தராமலே அறுவை சிகிச்சை செய்துவிடலாம். அந்த அளவுக்குப் பொறுமையாக நிற்கும். என்னே, ஓர் உயிரினம்! கடவுள் தன்னுடைய நல்ல படைப்பு மனநிலையில் யானையை உருவாக்கியிருக்கிறார்" என்று யானைகளின் இயல்பு குறித்து டாக்டர் கே குறிப்பிடுகிறார்.

### வினாக்கள்

1. இப்புவி யாருக்கானது?
2. டாக்டர் கிருஷ்ணமூர்த்தியை எவ்வாறு குறிப்பிடுவர்?
3. மனிதன், விலங்குகள் குறித்த டாக்டர் கே-வின் பார்வையைக் குறிப்பிடுக.
4. டாக்டர் கே. பெற்ற உயரிய விருது யாது?
5. யானைகளுக்காக டாக்டர் கே. அறிமுகப்படுத்திய திட்டம் யாது?

## 25.7 மொழிபெயர்ப்போம்

இயற்கையாகக் கிடைக்கும் மருத்துவக் குணமுடைய செடிகளைக் கொண்டு நோய்களைக் குணப்படுத்தும் மருத்துவ முறை மூலிகை மருத்துவம் எனப்படுகிறது. சித்த மருத்துவர்களும், மரபு வழி மருத்துவர்களும் இதை அதிக அளவில் பயன்படுத்தினர். இம்மருத்துவ முறையில் 'உணவே மருந்து, மருந்தே உணவு' என்கிற

கோட்பாடு கடைப்பிடிக்கப்படுகிறது. சித்த மருத்துவம் தமிழ்நாட்டின் தொன்மையான மருத்துவம் என்றால் மிகையன்று.

---

---

---

---

## 25.8 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | உடல் நலம் | – | Health |
| 2. | உளநலம் | – | Mental Health |
| 3. | தித்திப்பு | – | Sweetness |
| 4. | ஆவணம் | – | Document |
| 5. | அறுவை சிகிச்சை | – | Surgery |
| 6. | மருந்து | – | Medicine |
| 7. | உடற்கூறு | – | Anatomy |
| 8. | மருத்துவமனை | – | Hospital |
| 9. | சர்வதேசம் | – | International |
| 10. | முனிவர் | – | Sage |
| 11. | அர்ப்பணிப்பு | – | Dedication |
| 12. | ஆய்வுக்கட்டுரை | – | Dissertation |
| 13. | புத்துணர்ச்சி | – | Refreshment |
| 14. | பொறுமை | – | Patience |

## 25.9 உயர்நிலைத்திறன்

சிறுதானிய உணவுத் திருவிழாவிற்கு விளம்பரப் பதாகை ஒன்றை உருவாக்குக.

## 25.10 செயல் திட்டம்

தமிழர்கள் தங்கள் உணவில் அன்றாடம் பயன்படுத்தும் இயற்கை உணவுப் பொருள்களைத் தொகுத்துப் படத்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.

## 26.1 பேசுவோம்

பாடம் 26

❖ மனித உடலில் ஏற்படும் சளியை அகற்றுகிறது.

❖ சிறந்த கிருமி நாசினியாகச் செயல்படுகிறது.



துளசி



சிறுபீளை

❖ விஷக்கடிகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

❖ மனிதர்களின் சிறுநீரகத்தில் ஏற்படும் கல்லைப் போக்குகிறது.

❖ நீரிழிவு (டயாபடிஸ்) நோய்க்கு அருமருந்தாகப் பயன்படுகிறது.

❖ புற்றுநோய்க்கு எதிரான ஆற்றலைக் கொண்டுள்ளது.



ஆவாரை



கீழாநெல்லி

❖ மஞ்சள் காமாலை நோய்க்குச் சிறந்த மருந்தாக உள்ளது.

❖ கண் நோய், நீரிழிவு நோய், கல்லீரல் நோய், ஆறாத புண் ஆகியவற்றைப் போக்குகிறது.

## கலந்துரையாடுவோம்

உங்கள் பகுதியில் இருக்கும் மருத்துவக் குணங்கள் உள்ள தாவரங்கள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 26.2 படிப்போம்

### உடல்நலம்

இயற்கை மருத்துவத்தின் உயிர்நாடியாக விளங்குவது மூலிகைத்தாவரங்களே. இவ்வகைத் தாவரங்களின் பாகங்கள் நமக்கு உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன. இவை நோயைப் போக்குவதோடு மட்டுமல்லாமல் நோய்கள் வராமல் தடுக்கவும் செய்கின்றன. பின்வரும் பாடல், உடல்நலத்திற்கு நன்மை செய்யும் தாவரங்களைப் பற்றிக் கூறுகிறது.

வேப்பிலையைத் தின்னலாம்

விரும்பித் துளசி தின்னலாம்

காப்பதவையே உடல்நலம்

கருதித் தின்றால் கெடலில்லை!

பாகற்காயோ கசப்புத்தான்

பழகிப்போனால் சுவைப்புத்தான்

நாவுக்காக வாழாமை

நலத்துக்கான வாழ்வாமே!

சோற்றுக்காக வாழ்வதோ?

சுவையைக் கருதி வாழ்வதோ?

கூற்றைவெல்லும் ஆற்றலைக்

கொள்ளலாகும் நா காத்தால்!

நாவுச்சுவையை விரும்புதல்

நாளும் நோய்க்கே விரும்புதல்

கூவிமகிழ வேண்டினால்

கொஞ்சம் அடக்கு நாவையே!

- இரா.இளங்குமரன்

## பாடலின் பொருள்

வேப்பிலையையும் துளசியையும் விரும்பி உண்ண வேண்டும். ஏனென்றால், அவை உடல்நலத்தைக் காக்கும். அவற்றின் மருத்துவக் குணங்களை அறிந்து முறையோடு உண்டால் உடலுக்கு எந்தக் கெடுதலும் இல்லை. பாகற்காய் கசப்புச்சுவையை உடையதுதான். ஆனால், பழகிவிட்டால் அது விரும்பத்தக்க சுவையாக மாறிவிடும்.

நாக்கின் சுவைக்காக வாழாமல் நலத்துக்காக வாழ வேண்டும். சுவையோடு உண்ணும் ஆசையைத் தவிர்த்து வாழ்ந்தால் நோயற்று நெடுங்காலம் வாழலாம். சுவைக்காகச் சாப்பிட்டு வந்தால் அது நோயை விரும்பி ஏற்றுக்கொள்வதற்கு ஒப்பாகும். மகிழ்ச்சியோடு வாழ விரும்பினால், நாக்கு விரும்புகிறபடி உண்ணுவதை அடக்கிக்கொள்ள வேண்டும்.

## நூலைப் பற்றி

இப்பாடல் 'சிற்றருவி' என்னும் கவிதைத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இந்நூல் மழலையர், சிறுவர்கள் பாடல்களைக் கொண்ட தொகுப்பு. இதை இயற்றியவர் இரா. இளங்குமரன். இவர் 'இயற்கை இன்பம்', 'தேனருவி', 'இலக்கண வரலாறு', 'தமிழிசை இயக்கம்' போன்ற நூல்களைப் படைத்துள்ளார். இவரது 'தனித்தமிழ் இயக்கம்' என்னும் நூலுக்குத் தமிழ்நாடு அரசு பரிசு வழங்கியுள்ளது.

## பொருள் அறிவோம்

1. தின் - உண்
2. கெடலில்லை - கெடுதல் இல்லை
3. சோறு - அன்னம்
4. கூற்று - எமன்
5. நா - நாக்கு

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எவற்றைத் தின்றால் உடலுக்குக் கேடு இல்லை என்கிறார் கவிஞர்?

அ) வேப்பிலை, பாகற்காய் ஆ) துளசி, பாகற்காய்

இ) வேப்பிலை, துளசி ஈ) துளசி, வேப்பிலை, பாகற்காய்

2. இரா. இளங்குமரன் எந்த நூலுக்குத் தமிழ்நாடு அரசு பரிசைப் பெற்றார்?

அ) சிற்றருவி ஆ) தமிழிசை இயக்கம்

இ) இலக்கண வரலாறு ஈ) தனித்தமிழ் இயக்கம்

3. எந்த ஒரு சுவையையும் நமக்கு விருப்பமுடையதாக்கிக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கும் பாடலடி எது?

அ) வேப்பிலையைத் தின்னலாம் விரும்பித் துளசி தின்னலாம்

ஆ) பாகற்காயோ கசப்புதான் பழகிப்போனால் சுவைப்புதான்

இ) நாவுக்காக வாழாமை நலத்துக்கான வாழ்வாமே!

ஈ) நாவுச்சுவையை விரும்புதல் நாளும் நோய்க்கே விரும்புதல்

4. 'உடல்நலம்' என்னும் தலைப்பில் அமைந்த இப்பாடல் இரா. இளங்குமரனின் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது.

அ) சிற்றருவி ஆ) தேனருவி

இ) இயற்கை இன்பம் ஈ) வையை வளம்

5. கூற்று என்பதன் பொருள்

அ) உணவு ஆ) சோறு இ) எமன் ஈ) நாக்கு

## ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(மூலிகைத் தாவரங்கள், நோய், கசப்புச் சுவை, உடல்நலம், தேனருவி)

1. வேப்பிலையும் துளசியும் ________________ காக்கும்.
2. பாகற்காய் ________________ உடையது.
3. இரா. இளங்குமரன் எழுதிய நூல்களுள் ஒன்று ________________.
4. இயற்கைத் மருத்துவத்தின் உயிர் நாடியாக இருப்பது ________________.
5. சுவையோடு உண்ணும் ஆசையைத் தவிர்த்து வாழ்ந்தால் ________________ இல்லாமல் வாழலாம்.

## இ) பிரித்து எழுதுக.

1. சிற்றருவி-
2. தேனருவி -
3. தமிழிசை -
4. தனித்தமிழ் -
5. நெடுங்காலம் -

## ஈ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. 'உடல்நலம்' கவிதையில் இரா. இளங்குமரன் கூறும் மூலிகைகள் யாவை?
2. நாக்கு விரும்புகிறபடி உண்ணுவதை அடக்குவதால் ஏற்படும் நன்மைகளாக இரா. இளங்குமரன் குறிப்பிடுவன யாவை?
3. இரா. இளங்குமரன் இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக.
4. சுவைக்காக வாழ்வதால் ஏற்படும் தீங்குகளாக இரா. இளங்குமரன் கூறுவன யாவை?
5. 'உடல்நலம்' கவிதை இடம்பெற்றுள்ள நூல் குறித்து எழுதுக.

## உ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. 'உடல்நலம்' கவிதையில் இரா. இளங்குமரன் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

## 26.3 படிப்போம்

### உலக மருத்துவ முறை

நோய்களைக் கண்டுபிடிக்கவும் அவற்றைக் குணப்படுத்தவும் வராமல் தடுக்கவும் உதவும் அறிவியல் அல்லது கலையே மருத்துவம். நாடோடியாக மனிதர்கள் வாழ்ந்த காலத்தில் இலைச்சாற்றையும் பிற இயற்கைப் பொருள்களையுமே நோய்களுக்கான மருந்துகளாகப் பயன்படுத்தினர். இன்றோ சித்த மருத்துவம், ஆயுர்வேதம், அலோபதி, ஹோமியோபதி, யுனானி, இயற்கை மருத்துவம் (Naturopathy), மலர் மருத்துவம், அக்குபங்சர் போன்ற பல வகையான மருத்துவ முறைகள் வழக்கத்தில் உள்ளன.

**சித்த மருத்துவம்**

சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவ முறையாகும். 'உணவே மருந்து, மருந்தே உணவு' என்பதே சித்த மருத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். சித்தர்கள் இதை உருவாக்கித் தந்தனர். இயற்கையில் கிடைக்கக்கூடிய தாவரப்பொருள்கள், தாதுப் பொருள்கள் போன்றவை சித்த மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுகின்றன. அவரவர் உடலுக்குப் பொருந்தாத மற்றும் முறையில்லாத உணவாலும் நோய்கள் உருவாகின்றன என்கிறது சித்த மருத்துவம்.

**ஆயுர்வேதம்**

ஆயுர்வேதம் இந்தியாவில் தோன்றிய மிகப்பழமையான மருத்துவ முறை ஆகும். 'ஆயுர்' என்றால் வாழ்க்கை. 'வேதம்' என்றால் அறிவு. மனிதன் வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும், வாழக் கூடாது என்று அறிதலே ஆயுர்வேதம். ஆயுர்வேதத்தில் ஒவ்வொரு வேரும் இலையும் மரப்பட்டையும் மருந்தாகப் பயன்படுகிறது. இது பல நாடுகளில் ஒரு மாற்று மருத்துவ முறையாகப் பயன்பாட்டில் உள்ளது.

**அலோபதி**

நவீன மருத்துவம் என்றழைக்கப்படும் ஆங்கில மருத்துவ முறையே அலோபதி. இது அறிவியலை அடிப்படையாகக் கொண்ட மருத்துவ முறை ஆகும். மனித உடலை ஆராய்ந்து நோய்க்கான உண்மையான காரணத்தை அறிந்து சிகிச்சை அளிக்கும் வழிமுறையைக் கொண்டது இது. மருந்து என்பதற்கு ஆங்கிலத்தில் Medicine என்பர். இதன் பொருள் 'குணப்படுத்தும் கலை' என்பதாகும். கிரேக்க மருத்துவ அறிஞரான ஹிப்போகிரடீஸ்தான் நவீன மருத்துவ அறிவியல் முறையை அறிமுகப்படுத்தியவர். அதனால் இவர் 'மருத்துவத்தின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார்.

**ஹோமியோபதி**

ஹோமியோபதி மருத்துவம் என்பது ஜெர்மனியில் தோன்றிய மருத்துவ முறையாகும். இம்மருத்துவ முறையில் நோயின் அறிகுறிகளுக்கு மட்டுமே மருந்து அளிக்கப்படுவதில்லை. நோயாளியின் உடல், உளவியல் பண்புகள் கேட்டறியப்பட்டு மருந்துகள் தரப்படுகின்றன. எந்தப் பொருளால் ஆரோக்கியமான மனிதனுக்கு நோய் ஏற்பட்டதோ அந்தப் பொருளைத் தூய்மையான நிலையில் கொடுத்தால் அந்த நோயைக் குணப்படுத்த முடியும் என்பதே ஹோமியோபதி மருத்துவத்தின் அடிப்படை. தாவரங்கள்,

விலங்குப் பொருள்கள், தாதுப்பொருள்கள் போன்றவற்றிலிருந்து இதற்கான மருந்துகள் உருவாக்கப்படுகின்றன.

**யுனானி**

'யுனானி' என்ற சொல்லுக்கு 'கிரேக்கத்தைச் சார்ந்தது' என்று பொருள். யுனானி மருத்துவம் கிரேக்கத்திலிருந்து உலகம் முழுவதும் பரவியது. மனிதரின் நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிக்கும் மருத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. மனித உடலில் இருக்கும் நான்கு திரவங்களான கோழை (Phlegm), குருதி (Dam), மஞ்சள் பித்தம் (Yellow bile), கரும் பித்தம் (Black bile) ஆகியவற்றுக்கிடையே உள்ள சமநிலையின்மைதான் நோய்க்கான காரணம் என்கிறது யுனானி.

## பொருள் அறிவோம்

1. கோட்பாடு - கொள்கை
2. வேதம் - அறிவு
3. கோழை - சளி
4. குருதி - இரத்தம்
5. பித்தம் - ஈரலினின்று தோன்றும் நீர்வகை

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அலோபதி, சித்த மருத்துவத்தின், ஹோமியோபதி, யுனானி, ஆயுர்வேதம்)

1. உணவே மருந்து மருந்தே உணவு என்பது ________________ அடிப்படைக் கோட்பாடு.
2. இந்தியாவில் தோன்றிய மிகப்பழமையான மருத்துவ முறை ________________.
3. நவீன மருத்துவம் என்று அழைக்கப்படும் மருத்துவ முறை ________________.
4. ஜெர்மனியில் தோன்றிய மருத்துவ முறை ________________.
5. கிரேக்கத்திலிருந்து உலகம் முழுவதும் பரவிய மருத்துவ முறை ________________.

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. யுனானி மருத்துவத்தில் எவை மருந்துகளாகப் பயன்படுகின்றன.
2. ஆயுர்வேத மருத்துவம் குறித்து எழுதுக,
3. ஹோமியோபதி மருத்துவ முறை பற்றி எழுதுக.
4. சித்த மருத்துவம் - குறிப்பு தருக.
5. அலோபதி குறித்து எழுதுக.

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. உலகிலுள்ள மருத்துவ முறைகள் குறித்து எழுதுக.

## 26.4 தெரிந்துகொள்வோம்

### பா வகை அறிமுகம்

முற்காலத்தில் இலக்கியங்கள் அனைத்தும் செய்யுள் வடிவத்திலேயே எழுதப்பட்டன. சொல்ல வரும் கருத்துக்கேற்ற ஓசை வர வேண்டும் என்பதற்காகப் பா வகைகள் தோன்றின. அவை நான்கு வகைப்படும்.

| | |
|---|---|
| ❖ அறிவுரை சொல்ல வெண்பா | (செப்பலோசை) |
| ❖ கதை சொல்ல ஆசிரியப்பா | (அகவலோசை) |
| ❖ மகிழ்ச்சியை வெளிக்காட்ட கலிப்பா | (துள்ளலோசை) |
| ❖ மென்மையாகச் சொல்ல வஞ்சிப்பா | (தூங்கலோசை) |

இப்பாடப் பகுதியில் வெண்பாவின் இலக்கணம், ஆசிரியப்பாவின் இலக்கணம் குறித்து அறிந்துகொள்வோம்.

### வெண்பா – இலக்கணம்

1. கடைசி அடி மூன்று சீராகவும், பிற அடிகள் ஒவ்வொன்றும் நான்கு சீராகவும் வரும்.
2. இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும்.
3. இயற்சீரும் வெண்சீரும் பெற்று வரும்.
4. இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பெற்று வரும்.
5. கடைசிச் சீர் நேர் என முடிந்தால் நாள் வாய்பாட்டிலும், நிரை என முடிந்தால் மலர் என்னும் வாய்பாட்டிலும் முடியும். இதுபோலவே காசு, பிறப்பு வாய்பாடுகளும் பெற்றுவரும்.

### சான்று:

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (குறள் : 664)

### விளக்கம்:

1. மேற்கண்ட வெண்பாவில் முதல் அடி நான்கு சீராகவும் இறுதி அடி மூன்று சீராகவும் அமைந்துள்ளன.
2. இப்பாடல் இரண்டடிகளால் அமைந்துள்ளது.
3. சான்றில் உள்ள பாடல் இயற்சீரையும் இயற்சீர் வெண்டளையும் பெற்றுவந்ததைக் கண்டுகொள்க.
4. இப்பாடலில் 'செயல்' என்ற கடைசிச் சொல் 'நிரை' என முடிந்திருப்பதால் 'மலர்' வாய்பாட்டைப் பெற்றுள்ளது.

| சொல் | அசை | சீர் | தளை | |
|---|---|---|---|---|
| சொல்/லுதல் | நேர்/நிரை | கூவிளம் | விளம்முன்நேர் | இயற்சீர் வெண்டளை |
| யார்க்/கும் | நேர்/நேர் | தேமா | மாமுன்நிரை | இயற்சீர் வெண்டளை |
| எளி/ய | நிரை/நேர் | புளிமா | மாமுன்நிரை | இயற்சீர் வெண்டளை |
| அரி/யவாம் | நிரை/நிரை | கருவிளம் | விளம்முன்நேர் | இயற்சீர் வெண்டளை |
| சொல்/லிய | நேர்/நிரை | கூவிளம் | விளம்முன்நேர் | இயற்சீர் வெண்டளை |
| வண்/ணம் | நேர்/நேர் | தேமா | மாமுன்நிரை | இயற்சீர் வெண்டளை |
| செயல் | நிரை | மலர் | - | |

## வெண்பா வகைகள்

1. குறள் வெண்பா
2. சிந்தியல் வெண்பா
3. நேரிசை வெண்பா
4. இன்னிசை வெண்பா
5. பஃறொடை வெண்பா

## ஆசிரியப்பா (அகவற்பா)

1. எல்லா அடிகளும் நான்கு சீர்களில் வரும்.
2. ஈரசைச் சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.
3. ஆசிரியத்தளை மிகுதியாக வரும்; வெண்டளை, கலித்தளைகளும் அருகி வரலாம்.
4. மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும். 'ஏ' என்ற எழுத்தில் முடித்தல் சிறப்பு. ஓ, ஈ, ஆய், என், ஐ ஆகிய ஈறுகளாலும் முடியும்.

## சான்று:

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

(புறநானூறு:312)

## ஆசிரியப்பாவின் வகைகள்

1. நேரிசை ஆசிரியப்பா

2. இணைக்குறள் ஆசிரியப்பா

3. நிலைமண்டில ஆசிரியப்பா

4. அடிமறிமண்டில ஆசிரியப்பா

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(வெண்பா, ஐந்து, மலர், ஆசிரியப்பா, நான்கு)

1. பா ____________________ வகைப்படும்.

2. வெண்பா ____________________ வகைப்படும்.

3. வெண்பாவின் கடைசிச் சீர் நிரை என முடிந்தால் ____________________ வாய்பாடாகும்.

4. 'ஏ' என்ற எழுத்தில் முடிவது ____________________.

5. இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமைவது ____________________.

### ஆ) பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | வெண்பா | - | துள்ளலோசை |
| 2. | ஆசிரியப்பா | - | தூங்கலோசை |
| 3. | கலிப்பா | - | செப்பலோசை |
| 4. | வஞ்சிப்பா | - | அகவலோசை |

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வெண்பாவின் வகைகளைக் குறிப்பிடுக.

2. வெண்பாவிற்குரிய சீரும் தளையும் யாது?

3. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

4. ஆசிரியப்பாவின் வகைகளைக் குறிப்பிடுக.

5. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

## 26.5 கருத்து விளக்கப்படம்




### வினாக்கள்

1. கருத்தரங்கை நடத்திய நிறுவனம் எது?
2. கருத்தரங்கின் தலைப்பு என்ன?
3. இந்தக் கருத்தரங்கின் மூலம் எந்தெந்தத் தலைப்புகள் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ளலாம்?
4. நிகழ்வு நடைபெற்ற நாள் மற்றும் இடம் எது?
5. கருத்தரங்கில் யார் யார் பங்கேற்கலாம்?

## தகவல் துளி

### கபசுரக் குடிநீர்

சுக்கு, திப்பிலி, லவங்கம் உட்பட 15 மூலிகைகளால் தயாரிக்கப்படுவது கபசுரக் குடிநீர். இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும். கபசுர சூரணத்தை நன்கு கொதிக்கவைத்துப் பின்னர் பருக வேண்டும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இந்தக் கபசுரக் குடிநீரைப் பருகலாம். கபசுரக் குடிநீர் பருகுவதால் எந்தவிதப் பக்கவிளைவும் ஏற்படாது. இருதய நோயாளிகள், நீரிழிவு நோயாளிகள், கருவுற்ற பெண்கள் உட்பட அனைவரும் கபசுரக் குடிநீரைப் பருகலாம் என்று சித்த மருத்துவர்கள் கூறுகிறார்கள். கொரோனா போன்ற கொடிய பெருந்தொற்றுக் காலத்தில்கூட நோய் தணிக்கக் கபசுரக் குடிநீர் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது.

## 26.6 கேட்டல் கருத்தறிதல்

### வாசிப்பு

வாசிப்பு என்பது நம்மைப் புதுப்பித்துக்கொள்வதற்கு உதவும் ஒரு காரணி. அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாக வாசிப்பு இருக்க வேண்டும். புத்தகம் வாசிக்கும் வழக்கம் வாழ்நாளை அதிகரிக்கும் என ஏல் பல்கலைக்கழக ஆய்வு முடிவு கூறுகிறது. மனிதப் பரிணாம வளர்ச்சியில் புத்தக வாசிப்பின் மூலம் ஒருவர் பெற்றுக்கொள்ளும் அறிவு பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தது. புத்தக வாசிப்பு மனிதரிடத்தில் பல நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி, அமைதியையும் பொறுமையையும் இடர்களைச் சமாளிக்க வல்ல அனுபவங்களையும் பேச்சாற்றலையும் தர வல்லது. அறிவு, திறன், தன்னம்பிக்கை போன்றவற்றையும் புத்தக வாசிப்பு தரும்.

வாசிப்பவர் அடையும் நன்மைகள், அவர் வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் எண்ணிலடங்காதவை ஆகும். இதற்கு அறிஞர்கள், தலைவர்கள், அறிவியலாளர்கள் என அனைவரும் சான்றாக உள்ளனர். 'மனிதனின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு எது?' எனக் கேட்டபோது சற்றும் யோசிக்காமல் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் சொன்ன பதில், "புத்தகம்." வாசிப்பு மட்டுமே நம்மை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச்செல்லும். அலட்சியங்களையும் அவமானங்களையும் எளிதில் கடந்துசெல்ல உதவும். "போதும் என்று நொந்துபோய்ப் புது வாழ்வைத் தேடுகிறீர்களா... ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள்" என்கிறார் இங்கர்சால். நாமும் நம் வாழ்வில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கப் புத்தகங்கள் வாசிக்கப் பழகுவோம்.

### வினாக்கள்

1. நம்மைப் புதுப்பித்துக்கொள்வதற்கு உதவும் காரணி எது?
2. புத்தகம் வாசிக்கும் வழக்கம் வாழ்நாளை அதிகரிக்கும் என ஆய்ந்து முடிபுரைத்த பல்கலைக்கழகம் எது?
3. 'மனிதனின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு எது?' என்ற கேள்விக்கு ஐன்ஸ்டைன் கூறிய பதில் யாது?
4. புத்தக வாசிப்பு மனிதரிடத்தில் எவ்வித மாற்றத்தை ஏற்படுத்துகிறது?
5. புத்தக வாசிப்பு குறித்து இங்கர்சால் என்ன கூறுகிறார்?

## 26.7 மொழிபெயர்ப்போம்

Exercise is very important for our life. It relaxes our body and takes away all the mental stress. When you exercise on a daily basis, you become fit both physically and mentally. It instils discipline and a positive state of mind in you.

______________________________________________________________________

______________________________________________________________________

## 26.8 அறிந்துகொள்வோம்

1. மூலிகை – Herb
2. தாவரம் – Plant
3. வேப்பிலை – Neem
4. நாடோடி – Nomad
5. சாறு – Juice
6. ஆயுர்வேதம் – Ayurveda
7. இயற்கை மருத்துவம் – Naturopathy
8. உளவியல் – Psychology
9. தாது – Mineral
10. முன்பதிவு – Reservation
11. வாசிப்பு – Reading
12. வாழ்நாள் – Lifetime

## 26.9 உயர்நிலைத்திறன்

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து மூன்று பக்கங்களுக்கு மிகாமல் கட்டுரை ஒன்றை எழுதுக.**


- உடல்நலம் காப்போம்
- நோயற்ற வாழ்வு
- உடல்நலமும் சுகாதாரமும்
- உணவே மருந்து
- இயற்கை உணவே இன்ப வாழ்வு

## 26.10 செயல் திட்டம்

உங்கள் பகுதியில் கிடைக்கும் மருத்துவக் குணம் நிறைந்த தாவரங்கள் குறித்தும் அதன் பயன்கள் குறித்தும் காணொலி ஒன்றை உருவாக்கி வருக.

பாடம் 27

## 27.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

நீங்கள் சிறந்த ஆளுமையாக விளங்க உங்களுக்குள் இருக்கும் பல்வேறு திறன்கள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 27.2 படிப்போம்

### புறநானூறு

கடையெழு வள்ளல்களுள் ஒருவர் ஓரி. இவர் கொல்லிமலையை ஆட்சி செய்தவர். வில்வித்தையில் சிறந்தவராதலால் 'வல்வில் ஓரி' என்று அழைக்கப்படுகிறார். கபிலர், கல்லாடனார், நல்லூர் நத்தத்தனார், பரணர், வன்பரணர், பெருஞ்சித்திரனார், கழைதின் யானையார் ஆகிய புலவர்கள் இவரது ஆளுமைத்திறனைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். புலவர் வன்பரணர் எழுதிய புறநானூற்றுப் பாடல் ஒன்று ஓரியின் வீரத்தை வெளிப்படுத்தும் பாங்கை இந்தப் பகுதியில் காண்போம்.

வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி

பேழ் வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇ,

புழல் தலைப் புகர்க் கலை உருட்டி, உரல் தலைக்

கேழற் பன்றி வீழ, அயலது

ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும்,

வல் வில் வேட்டம் வலம் படுத்து இருந்தோன்,

புகழ்சால் சிறப்பின் அம்பு மிகத் திளைக்கும்

கொலைவன் யார்கொலோ? கொலைவன் மற்று இவன்

விலைவன் போலான்; வெறுக்கை நன்கு உடையன்;

ஆரம் தாழ்ந்த அம் பகட்டு மார்பின்,

சாரல் அருவிப் பய மலைக் கிழவன்,

ஓரி கொல்லோ? அல்லன் கொல்லோ?

(புறநானூறு : 152 - பாடல் வரிகள் : 1-12)

### பாடலின் பொருள்

கொல்லிமலைக் காட்டில் வன்பரணர் தம் சுற்றத்தவர்களுடன் பயணித்தார். அங்கே வேடன் ஒருவன் வேட்டையாடிக்கொண்டிருந்தான். அந்த வேடன் எய்த அம்பு யானையின் உடலைத் துளைத்து, புலியின் வாய் வழியாகச் சென்று, மான் ஒன்றை

உருட்டித் தள்ளி, பன்றியின் உடலைத் துளைத்துச் சென்று, உடும்பின் உடலில் தைத்து நின்றது. வேடனின் இத்தகைய வில் ஆற்றலைக் கண்டு வன்பரணர் வியந்து நின்றார். இந்த வேடன் யாரோ? அவ்வேடனைக் கண்டால் கொலைத் தொழில் புரிபவன்போல் தோன்றவில்லை; ஒரு மன்னனைப் போல இருக்கிறான். முத்துமாலை தவழும் அகன்ற மார்பை உடைய இவனைக் கண்டால், அருவிகள் வீழும் வளமான மலைக்குத் தலைவனாகிய ஓரியைப் போல உள்ளது என வன்பரணர் கூறுகிறார்.

அவ்வேடன், வல்வில் ஓரிதான் என்று வன்பரணரும் அவரது சுற்றத்தாரும் அறிந்தனர். அதன் பின்னர், பாடல்கள் பாடியும் கருவிகளை இசைத்தும் ஓரியை வாழ்த்தி மகிழ்ந்தனர். வன்பரணர் இவ்வாறு புறநானூற்றில் பாடியுள்ளார்.

## நூலைப் பற்றி

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு. புறம் + நான்கு + நூறு – புறநானூறு. இது புறப்பொருள் பற்றிய 400 பாடல்களைக் கொண்டது. இது தமிழர்களின் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கிறது. இந்நூல் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டது. வன்பரணர் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். நற்றிணையில் ஒரு பாடலும் புறநானூற்றில் 7 பாடல்களும் பாடியுள்ளார். கோப்பெருநள்ளியும் வல்வில் ஓரியும் இவரது காலத்தைச் சார்ந்த அரசர்கள்.

## பொருள் அறிவோம்

1. ஆரம் - மாலை
2. ஆழல் - ஆழம்
3. உழுவை - புலி
4. கலை - ஆண்மான்
5. கேழற்பன்றி - ஆண்பன்றி
6. திளைத்தல் - மகிழ்தல்
7. பகழி - அம்பு
8. புகர் - புள்ளி
9. பேழ் - பெரிய
10. விழு - சிறந்த

## பயிற்சிகள்

### அ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. கொல்லிமலையை ஆட்சிசெய்தவர் ஓரி. (சரி/தவறு)
2. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று புறநானூறு. (சரி/தவறு)
3. அகப்பொருள் பற்றிய 400 பாடல்களைக் கொண்டது புறநானூறு. (சரி/தவறு)
4. பகழி என்பதன் பொருள் அம்பு. (சரி/தவறு)
5. தமிழர்களின் வரலாற்றுக் கருவூலமாகத் திகழும் நூல் புறநானூறு. (சரி/தவறு)

### ஆ) பொருள் எழுதுவோம்

1. ஆரம் -
2. வேழம் -
3. உழுவை -
4. கலை -
5. கேழற்பன்றி -

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஓரியின் சிறப்புப் பெயர் என்ன?
2. புறநானூறு – குறிப்பு வரைக.
3. ஓரியைப் பாடிய சங்கப்புலவர்களின் பெயர்களை எழுதுக?
4. புலவர் வன்பரணர் ஓரியின் வீரத்தைப் பாடிய பாடல் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?
5. ஓரி எய்த அம்பு எந்தெந்த விலங்குகளின் உடலில் பாய்ந்ததாக வன்பரணர் கூறுகிறார்?

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. வன்பரணர் கண்ட ஓரியின் வில் திறம் எத்தன்மை உடையது?

## 27.3 படிப்போம்

### இராஜேந்திர சோழன்

புகழ்பெற்ற சோழ மன்னர்களுள் ஒருவர் இராஜேந்திர சோழன். இவரின் தந்தை இராஜராஜ சோழன், தாய் வானவன் மாதேவி. இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் மதுராந்தகன். கி.பி 1012இல் இளவரசர் பட்டம் ஏற்றார். தம் தந்தை இராஜராஜனின் மறைவுக்குப் பின் 1014இல் மன்னராக முடிசூட்டப்பட்டார். இவர்தம் ஆட்சிக்காலம் சோழப்பேரரசின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. சோழ மன்னர்களுள் இராஜேந்திரனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர். தம்முடைய ஆட்சிக்காலத்தில் சோழப்பேரரசின் பரப்பைக் கடல்கடந்து விரிவுபடுத்தினார். அயல்நாட்டிற்குப் பெரும்படை எடுத்துச்சென்ற முதல் தமிழ் மன்னர் இவரே.

இவரின் முதல் போர், கிருஷ்ணா – துங்கபத்திரை ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் நடைபெற்றது. இப்போரில் வென்று இடைத்துறை நாட்டைத் தன் ஆட்சியின்கீழ் கொண்டுவந்தார். இன்று குல்பர்க்கா என்று அழைக்கப்படும் கொள்ளிப்பாக்கையே இவரது இரண்டாம் வெற்றி. 1017இல் இலங்கைப் போரில் வெற்றிபெற்றார்.

1023இல் இவர் மேற்கொண்ட கங்கைப் படையெடுப்பு இவரது மிகப்பெரிய படையெடுப்பாகும். இப்போரில் வெற்றிபெற்றதால் கங்கைகொண்டான் என அழைக்கப்பட்டார். சிந்துப் பகுதியையும் தமது ஆட்சிக்கு உட்படுத்தினார். ராஜேந்திரனின் கடல் கடந்த வெற்றிகளில் மிக முக்கியமானது கடாரத்தை வெற்றிகொண்டது. கடாரம் என்பது மலேசியாவில் இருக்கும் பகுதியாகும். இவ்வெற்றியைத் தொடர்ந்து கடாரம் கொண்டான் என்று சிறப்பிக்கப்பட்டார். பின்னர் சுமத்ரா, நிக்கோபார்த் தீவுகளும் சோழர் வசம் வந்தன.

வங்காள தேசத்தைச் சோழ நாட்டுடன் இணைத்தார். அந்த வெற்றியைச் சிறப்பிக்கவே 'கங்கைகொண்ட சோழபுரம்' என்னும் நகரத்தை உருவாக்கினார். தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட சோழ அரச மரபை மாற்றி, தானே உருவாக்கிய கங்கைகொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டது, அவரது தனித்துவத்தை வெளிப்படுத்தியது.

நன்கு பயிற்சியளிக்கப்பட்ட வீரர்களைக் கொண்ட பெரும்படை ஒன்றை வைத்திருந்தார். இப்படை நாட்டின் எல்லையைக் காக்கவும் அயல்நாடுகளைக் கைப்பற்றவும் உதவிபுரிந்தது. இராஜேந்திரனிடம் சிறந்த கடற்படையும் இருந்தது. இதன் உதவியால் மலேய தீபகற்பம், கீழைக் கடற்கரைப் பகுதிகள் வரை தம் நாட்டை விரிவுபடுத்தினார். மேலும், கிழக்கிந்தியத் தீவுகளுடன் ஏற்பட்ட வணிகத்தைப் பாதுகாக்கவும் முடிந்தது. இவ்வாறு இராஜேந்திர சோழன் தம் நாட்டைத் தலைசிறந்த நாடாக மாற்றினார்.

இராஜேந்திர சோழன் உழவுத் தொழிலே ஒரு நாட்டின் முதுகெலும்பு என்பதை அறிந்து உழவர் நலன் காத்திட வழிவகுத்துள்ளார். உழவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வலிமை மிக்க குழு ஒன்றை உருவாக்கினார். தந்தையைப் போன்றே இராஜேந்திரனும் சிறந்த பட்டங்கள் பலவற்றைப் பெற்றார். முடிகொண்ட சோழன், பண்டிதச் சோழன் என்பன இவர் பெற்ற பட்டங்களுள் குறிப்பிடத்தக்கன. 'கங்கைகொண்ட சோழன்' என்ற பட்டத்தை விரும்பி ஏற்றுக்கொண்டார். கடல்கடந்தும் தமிழர்தம் பெருமையை நிலைநாட்டினார் இராஜேந்திர சோழன்.

## பொருள் அறிவோம்

1. உட்படுத்தல் - உள்ளாக்குதல்
2. வசம் - ஆட்சிப் பொறுப்பு
3. இணைத்தல் - சேர்த்தல்
4. வலிமை - பலம்

## பயிற்சிகள்

### அ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. இராஜேந்திர சோழனின் தாயார் வானவன் மாதேவி. (சரி/தவறு)
2. இராஜேந்திர சோழனின் இயற்பெயர் இராஜராஜன். (சரி/தவறு)
3. கங்கைகொண்ட சோழபுரம் இராஜேந்திர சோழனின் தலைநகரம். (சரி/தவறு)
4. இராஜேந்திர சோழன் மியான்மரை ஆட்சிசெய்தவர். (சரி/தவறு)
5. இராஜேந்திர சோழனின் பெற்ற பட்டங்களில் முடிகொண்ட சோழன், பண்டிதச் சோழன் ஆகியன குறிப்பிடத்தக்கன. (சரி/தவறு)

### ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(வங்காள, உழவுத் தொழில், இராஜராஜ சோழன், இடைத்துறை, கங்கைகொண்டான்)

1. இராஜேந்திர சோழனின் தந்தை பெயர் ________________.
2. இராஜேந்திர சோழன் ________________ என அழைக்கப்பட்டார்.
3. இராஜேந்திர சோழன் ________________ தேசத்தைச் சோழ நாட்டுடன் இணைத்தார்.
4. இராஜேந்திர சோழன் ________________ ஒரு நாட்டின் முதுகெலும்பு என்பதை அறிந்திருந்தார்.
5. இராஜேந்திர சோழன் முதல் போரில் வென்று ________________ நாட்டைத் தன் ஆட்சியின்கீழ் கொண்டுவந்தார்.

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இராஜேந்திர சோழனுக்கு எந்த ஆண்டு மன்னராக முடிசூட்டப்பட்டது?
2. இராஜேந்திர சோழன் இளவரசர் பட்டம் ஏற்ற ஆண்டு எது?
3. சோழப் பேரரசில் யாருடைய ஆட்சிக்காலம் பொற்காலமாகக் கருதப்பட்டது?
4. இராஜேந்திர சோழன் ஆட்சியை விரிவுபடுத்திய நாடுகள் யாவை?
5. இராஜேந்திர சோழன் விரும்பி ஏற்றுக்கொண்ட பட்டத்தின் பெயர் என்ன?

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. இராஜேந்திர சோழனின் ஆளுமைத்திறன் பற்றி எழுதுக.

## 27.4 தெரிந்துகொள்வோம்

### அணியிலக்கணம்

நாம் நம்மை அணிகலன்களால் அலங்கரித்துக்கொள்வதைப் போல் கவிஞர்கள் தாம் இயற்றிய செய்யுள்களை அழகுபடுத்துவது அணியாகும். அத்தகைய அணிகள் சிலவற்றைக் காணலாம்.

### நிரல்நிறை அணி:

சொற்கள் அமைந்திருக்கும் அதே வரிசை முறையில் பொருள்களையும் வரிசைப்படுத்திப் பொருள்கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

எ.கா:

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (குறள்:45)

இக்குறட்பாவில் அன்பு, அறன் ஆகிய சொற்களை வரிசையாக நிறுத்தி அவற்றோடு தொடர்புடைய பண்பு, பயன் ஆகியவற்றை முறைப்படக் கூறியுள்ளமையால் இது நிரல்நிறை அணி ஆயிற்று.

'நிரல் நிறுத்து இயற்றுதல் நிரல்நிறை அணியே' (தண்டி - 67)

### வேற்றுமை அணி:

செய்யுளில் இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையை முதலில் கூறி, பின் அவற்றை ஏதேனும் ஒரு காரணத்தால் வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணியாகும்.

எ.கா:

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

இக்குறட்பாவில் தீயும் சுடும், தீய சொல்லும் சுடும். இது ஒற்றுமை. தீயினால் சுட்டபுண் ஆறிவிடும், ஆனால் நாவினால் சுட்டவடு ஆறாது. இது வேற்றுமை. எனவே, வேற்றுமை அணியாகும்.

### இரட்டுற மொழிதல்:

ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது இரட்டுற மொழிதல் அணியாகும். இதனை 'சிலேடை' என்றும் கூறுவர்.

எ.கா:

பாம்பு – வாழைப் பழம்

நஞ்சிருக்கும் தோல் உரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்

வெஞ்சினத்தில் பட்டால் மீளாது – விஞ்சுமலர்த்

தேம்பாயும் சோலைத் திருமலைராயன் வரையில்

பாம்பாகும் வாழைப் பழம்.

| பாடல் | பாம்பு | வாழைப்பழம் |
|---|---|---|
| நஞ்சிருக்கும் | நச்சுத்தன்மை உடையதாக இருக்கும் | நன்கு (நைந்து) பழுத்து இருக்கும் |
| தோல் உரிக்கும் | குறிப்பிட்ட காலத்தில் தன் மேல்தோல் உரிக்கும். | உண்பவரால் தோல் உரிக்கப்படும் |
| நாதர் முடி மேல் இருக்கும் | இறைவனின் முடிமேல் இருக்கும் | பஞ்சாமிர்தத்தில் கலந்து இறைவனுக்குச் சாற்றும்போது அவர் முடிமேல் இருக்கும். |
| வெஞ்சினத்தில் பட்டால் மீளாது | கோபத்தில் கொத்தினால் உயிர் தப்பாது. | உண்டவரின் வாயில் சென்ற பின் மீளாது. |

## உயர்வு நவிற்சி அணி

ஒன்றைப் பற்றி மிகவும் உயர்வாகக் கூறுவது; அதாவது, கற்பனையுடன் அளவுக்கு அதிகமாக உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சி அணியாகும்.

எ.கா:

நிலவினில் இருக்கின்ற

களங்கத்தை இவளது

பெருவிரல் துடைத்துவிடும்

புதுயுக மகள் இவள்

அணிகின்ற வளையல்கள்

சிறைகளை உடைத்துவிடும் (வைரமுத்து)

ஒரு பெண்ணின் வலிமையைக் கூற வந்த வரிகள் இவை. அவள் வலியவள், உயர்ந்தவள் என்பதைக் காட்ட, எட்டாத நிலவின் களங்கத்தை இவளது பெருவிரல் துடைத்துவிடும்; இவள் அணிகின்ற கைவளையல்கள் வலிமைமிக்க சிறைக் கம்பிகளையே உடைத்துவிடும் என்று கவிஞர் மிகைப்படுத்திக் கூறியுள்ளார். எனவே, இது உயர்வு நவிற்சி அணியாகும்.

## பயிற்சிகள்

### அ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. சொற்கள் மாறுபட்டு வருவது நிரல்நிறை அணியாகும். (சரி/தவறு)
2. ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது வேற்றுமை அணியாகும். (சரி/தவறு)
3. இரட்டுற மொழிதல் அணியைச் 'சிலேடை' என்றும் கூறலாம். (சரி/தவறு)
4. இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையை முதலில் கூறி, பின் வேறுபடுத்துவது இரட்டுற மொழிதல் அணியாகும். (சரி/தவறு)
5. ஒன்றைப் பற்றி மிகவும் உயர்வாகக் கூறுவது உயர்வு நவிற்சி அணியாகும். (சரி/தவறு)

### ஆ) சேர்த்து எழுதுக

1. பொன் + காலம் -
2. தலை + நகரம் -
3. படை + எடுப்பு -
4. கடல் + படை -
5. கிழக்கு + இந்தியா -

### இ) பொருத்துக.

1. வேற்றுமை அணி - இரு பொருள்பட உரைப்பது
2. நிரல்நிறை அணி - மிக உயர்த்திக் கூறுவது
3. இரட்டுற மொழிதல் - ஒற்றுமை கூறி வேறுபடுத்துதல்
4. உயர்வு நவிற்சி அணி - தொடர்புடன் வரிசைப்படுத்துவது

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. நிரல்நிறை அணி என்றால் என்ன?
2. வேற்றுமை அணி விளக்கம் தருக.
3. இரட்டுற மொழிதல் அணி குறிப்பு வரைக.
4. பாம்பு, வாழைப்பழம் இவற்றை இரட்டுற மொழிதல் அணியில் பொருத்தி எழுதுக.
5. உயர்வு நவிற்சி அணி என்றால் என்ன?

### உ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. நிரல்நிறை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்கி எழுதுக.
2. உயர்வு நவிற்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்கி எழுதுக.

## 27.5 கருத்து விளக்கப்படம்

# மருத்துவர் முத்துலட்சுமி நுண்கலைமன்ற விழா, அரசு கலைக் கல்லூரி, சீர்காழி.

**நாள்:** 01-06-2022

**நேரம்:** காலை 10 மணி

**இடம்:** கருத்தரங்கக் கூடம், அரசு கலைக் கல்லூரி, சீர்காழி.

| | | |
|---|---|---|
| **வரவேற்புரை** | : | **த. இசைப்பிரியா,** மூன்றாமாண்டுத் தமிழ் இலக்கியம் நுண்கலை மன்றச் செயலர். |
| **வாழ்த்துரை** | : | **பெ. அருணாசலம்,** முதல்வர், அரசு கலைக்கல்லூரி, சீர்காழி. |
| **சிறப்புரை** | : | பாவலர் **அறிவுமதி** |
| **நன்றியுரை** | : | **செ.தமிழ்செல்வன்,** இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம், நுண்கலை மன்ற இணைச்செயலர். |
| **கலை நிகழ்ச்சி** | : | வழங்குவோர் மாணவர்கள். |

### வினாக்கள்

1. சீர்காழி அரசு கலைக்கல்லூரி நுண்கலை மன்றத்தின் பெயர் என்ன?
2. இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்துவோர் யார்?
3. மருத்துவர் முத்துலட்சுமி நுண்கலை மன்ற விழாவில் சிறப்புரை வழங்குபவர் யார்?
4. இவ்விழாவில் இசைப்பிரியாவின் பங்கு என்ன?
5. இவ்விழாவில் வாழ்த்துரைக்கு அடுத்து நடைபெறும் நிகழ்ச்சி எது?

## தகவல் துளி

சங்ககாலத்தில் வாழ்ந்த சேர மன்னன், பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன். 'ஓரைவர் ஈரைம்பதின்மர் உடன்றெழுந்த போரில் பெருஞ்சோறு போற்றாது தான் அளித்த சேரன் பொறையன் மலையன்' என்று இவர் மகாபாரதக் காலத்தில், பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில், இருதரப்புப் போர் வீரர்களுக்கும் உணவு மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கினார் என சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. அப்போரில் அனைவருக்கும் உணவு வழங்கிய காரணத்தினாலேயே 'பெருஞ்சோற்று' உதியஞ்சேரலாதன் எனப்படுகிறார்.

## 27.6 கேட்டல் கருத்தறிதல்

### நெல் ஜெயராமன் (1968 – 2018)

நெல் ஜெயராமன் தம் வாழ்நாளை வேளாண்மைக்கும் மரபு நெல் வகைகளை மீட்டெடுப்பதற்கும் அர்ப்பணித்தவர். இவர் தமிழ்நாட்டில் மிக ஏழ்மையான விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். நஞ்சில்லா மரபு விவசாயம் பற்றிய ஆர்வம் கொண்டிருந்தவர். அதனால், இயற்கை வேளாண்மையின் முன்னோடியான நம்மாழ்வாருடன் இணைந்து பணியாற்றத் தொடங்கினார். நம்மாழ்வாருக்குப் பக்கபலமாக இருந்தவர்களுள் முக்கியமானவர் நெல் ஜெயராமன். தாம் மேற்கொண்ட வேலையைச் சிரமப்பட்டேனும் முடித்துவிடும் பேராற்றல் கொண்டவர்.

ஜெயராமன் தாம் நடத்திய நெல் திருவிழாவில் ஒரு புதிய உத்தியை அறிமுகப்படுத்தினார். அதாவது, நெல் திருவிழாவில் ஒரு விவசாயிக்குக் கொடுக்கப்படும் இரண்டு கிலோ மரபு விதைநெல்லைப் பயிரிட்டு விளைவித்து அடுத்த ஆண்டு நடைபெறும் நெல் திருவிழாவில் நான்கு கிலோவாகத் திரும்பக் கொடுக்க வேண்டும். இந்தச் சிறப்பான உத்தியால் வியக்கும் வேகத்தில் மரபு நெல் உற்பத்தி தமிழ்நாடெங்கும் பரவ ஆரம்பித்தது.

இவர் பயணிக்காத நாள்களே இருக்காது. மரபு நெல் வகைகளை மீட்டெடுக்க எப்போதும் எந்த ஊருக்காவது பேருந்தில் பயணித்தபடியேதான் வாழ்ந்தார். இவர் தமது கடும் உழைப்பால் 174 மரபு நெல் வகைகளை மீட்டெடுத்தார். இவரது அரிய பணியைக் கண்டு வியந்து மகிழ்ந்த நம்மாழ்வார், இவருக்கு 'நெல் ஜெயராமன்' எனப் பெயர் சூட்டினார்.

### வினாக்கள்

1. நெல் ஜெயராமன் தம் வாழ்நாளை எதற்காக அர்ப்பணித்தவர்?
2. நஞ்சில்லா மரபு விவசாயம் பற்றிய ஆர்வம் காரணமாக நெல் ஜெயராமன் யாருடன் இணைந்து பயணித்தார்?
3. நெல் ஜெயராமன் எத்தனை மரபு நெல் வகைகளை மீட்டெடுத்தார்?
4. நெல் ஜெயராமன் எதற்காகத் தமிழ்நாடு முழுமைக்கும் பயணித்தார்?
5. நெல் திருவிழாவில் ஜெயராமன் கையாண்ட உத்தி யாது?

## 27.7 மொழிபெயர்ப்போம்

ஆளுமை என்பது எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் ஆகியவற்றின் ஒருமித்த வெளிப்பாடு. இது ஒருவரின் உள்ளிருந்து உருவாகி அவரைத் தனித்துவமானவராக ஆக்குகிறது.

## 27.8 அறிந்துகொள்வோம்

1. ஆளுமை – Personality
2. ஆரம் – Garland
3. வேழம் – Elephant
4. பேரரசு – Empire
5. பொற்காலம் – Golden Age
6. ஆட்சி – Reign
7. அயல்நாடு – Foreign Country
8. கடற்படை – Navy
9. உழவுத்தொழில் – Agriculture
10. முதுகெலும்பு – Backbone
11. குழு – Committee
12. நுண்கலை – Fine Arts
13. கருத்தரங்கம் – Seminar
14. வேடிக்கை – Fun
15. சிரமம் – Difficulty

## 27.9 உயர்நிலைத்திறன்


உங்கள் நண்பரிடம் உள்ள சிறந்த ஆளுமைப் பண்பு குறித்து அவருக்கு ஒரு கடிதம் எழுதுக.

## 27.10 செயல் திட்டம்

நீங்கள் தலைமைப் பொறுப்பில் இருந்தால் உங்கள் நாட்டின் வளர்ச்சிக்காக நீங்கள் செய்ய விரும்பும் மாற்றங்கள் குறித்து ஓர் உரை நிகழ்த்துக.

பாடம்
28

## 28.1 பேசுவோம்



## கலந்துரையாடுவோம்

ஒருவர் சிறந்த ஆளுமையாக விளங்கத் தேவையான தகுதிகள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 28.2 படிப்போம்

### வள்ளுவம் பத்து

வாழும் முறைகளை இரண்டடிக்குள் வகுத்தவர் அய்யன் திருவள்ளுவர். உலகப் பொதுமறையாம் திருக்குறளைத் தந்தவர். பொய்யில் புலவராய் இன்றளவும் போற்றப்படுபவர். அவரை வாழ்த்திப் பாடும் அறிவுமதியின் கவிதையை இந்தப் பகுதியில் காண்போம்.

தந்தை தந்த
தாய்ப்பால்
முப்பால்

முக்கடல்
இரு துளி
திருக்குறள்

உரை(றை) ஊற்றி ஊற்றிப் பார்த்தும்
புளிக்காத பால்
முப்பால்

இரண்டிரண்டாய் அலைகள்
குறளோசை
வள்ளுவத்தில் பார் கடல்

வாழ்க்கை கடல்
கலங்கரை விளக்கம்
வள்ளுவர் சிலை

ஊன்றுகோல் வள்ளுவன்
எழுந்து நிற்கும்
விழுந்த குமரி

நூற்று முப்பத்து மூன்று பத்து
பெருக்கப் பெருக்கப்
பெருகும் வாழ்வு

தமிழின்
நீண்ட பயணம்
இரட்டையடிப் பாதை

தமிழ்ப்பால்
சுண்டக் காய்ச்ச
கிடைத்தது ஏடு

இரண்டு அடி கொடுத்தால்தானே
திருந்துவாய்
வாங்கிக்கொள் வள்ளுவனிடம்

\- அறிவுமதி

## பாடலின் பொருள்

பிறந்த குழந்தைக்கான ஊட்டச்சத்து மிக்க முதன்மையான ஆதார உணவு தாய்ப்பால் ஆகும். இந்த உலகுக்கு ஒரு தந்தை கொடுத்த தாய்ப்பால்தான் அறம், பொருள், இன்பம் எனும் முப்பால் என்று சொல்லி, திருவள்ளுவரைத் தந்தையோடு ஒப்பிடுகிறார் கவிஞர். பால் தயிராவதற்கு உறை ஊற்றிப் புளிக்கவைப்பார்கள்; இந்த முப்பாலோ எவ்வளவு உரைகள் தோன்றினாலும் புளிக்காது என்கிறார். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று கடல்களில் முகந்து எடுத்த இரு துளிதான் திருக்குறள் என்றும், அந்த அளவுக்கு கருத்தாழம் மிக்கது என்றும் சொல்கிறார். இரண்டு அடிகளாய் அமைந்திருக்கும் குறளில் ஒரு கடலே உள்ளது. வாழ்க்கை எனும் கடலின் கலங்கரை விளக்கமாக வள்ளுவர் சிலை வீற்றிருக்கிறது. இந்தச் சிலை நிறுவப்பட்டதன் பயனாகக் குமரி முனையின் புகழ் இன்னும் மேலோங்கியது. அதிகாரத்துக்குப் பத்துப் பாடல்களாக, 133 அதிகாரத்திலும் உள்ள பத்துப் பத்துக் குறள்களால் வாழ்க்கை வளமாகும். தமிழ் மொழியைச் சுண்டக் காய்ச்சி உருவான 'ஏடு' திருக்குறள். தமிழ் எனும் நீண்ட பயணத்தின் இரண்டு அடிப் பாதையாகவும், குழந்தைகளைத் திருத்துவதற்காக ஆசான்கள் கொடுக்கும் இரண்டு அடியாகவும் குறளின் இரண்டு அடியை உருவகப்படுத்துகிறார் கவிஞர்.

## நூலைப் பற்றி

அறிவுமதி தமிழ்க் கவிஞரும் திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார். இவரது இயற்பெயர் மதியழகன். 'நட்புக்காலம்', 'நிரந்தர மனிதர்கள்', 'அன்பான இராட்சசி', 'புல்லின் நுனியில் பனித்துளி', 'கடைசி மழைத்துளி' போன்ற கவிதை நூல்களையும் 'வெள்ளைத் தீ' என்னும் சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்.

## பொருள் அறிவோம்

1. முப்பால் – திருக்குறளின் முப்பிரிவுகளான அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்.
2. முக்கடல் – இந்தியப் பெருங்கடல், அரபிக் கடல், வங்காள விரிகுடா
3. உறை ஊற்றுதல் – பாலைத் தயிர் ஆக்குவதற்காகப் பாலில் புளிப்பு சேர்த்தல்
4. ஊன்றுகோல் – விழாமல் நடப்பதற்குப் பயன்படுத்தும் கைத்தடி
5. ஏடு – பாலாடை/ நூல்

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(வெள்ளைத் தீ, மதியழகன், முப்பால், திருவள்ளுவர், குமரி)

1. வாழும் முறைகளை இரண்டடிக்குள் வகுத்தவர் ______________.
2. வள்ளுவர் சிலை அமைக்கப்பட்டிருக்கும் இடம் ______________.
3. கவிஞர் அறிவுமதியின் இயற்பெயர் ______________.
4. கவிஞர் அறிவுமதி வெளியிட்டுள்ள சிறுகதைத் தொகுப்பின் பெயர் ______________.
5. 'உரை(றை) ஊற்றி ஊற்றிப் பார்த்தும் புளிக்காத பால் ______________'.

### ஆ) பிரித்து எழுதுக.

1. முப்பால் -
2. முக்கடல் -
3. குறளோசை -
4. தமிழ்ப்பால் -
5. பாடலாசிரியர் -

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. 'தந்தை தந்த தாய்ப்பால் முப்பால்' என்ற அடியில் தந்தை எனக் கவிஞர் யாரைக் கூறியுள்ளார்?
2. அறிவுமதி எழுதிய நூல்களைக் குறிப்பிடுக?
3. திருக்குறளின் முப்பிரிவுகள் யாவை?
4. முக்கடல் எனக் குறிக்கப்படுபவை எவை?
5. திருக்குறளின் இரண்டு அடியைக் கவிஞர் எவற்றோடு ஒப்பிடுகிறார்?

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. 'வள்ளுவம் பத்து' என்ற பாடலில் கவிஞர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## 28.3 படிப்போம்

### அமர்த்தியா சென்



மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதில் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெரும்பங்கு வகிக்கிறது. பொருளாதார முன்னேற்றம்தான் நாட்டின் எதிர்காலத் திட்டங்களை வகுத்திட உதவுகிறது. ஒரு நாட்டின் வளர்ச்சியில் அந்நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களின் பங்களிப்பும் அதற்கான பொருளாதாரத் திட்டமிடலும் இருக்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு வளர்ச்சிப் பொருளாதாரக் கோட்பாட்டை உருவாக்கிய முன்னோடிகளுள் ஒருவர், இந்தியப் பொருளாதார மேதை அமர்த்தியா சென்.

மேற்கு வங்கத்தில் 1933இல் பிறந்தார் அமர்த்தியா சென். இவருக்கு 'அமர்த்தியா' என்ற பெயரைச் சூட்டியவர் இந்தியாவின் தேசிய கீதத்தை எழுதிய ரவீந்திரநாத் தாகூர் ஆவார். அமர்த்தியா சென் இளமையிலேயே கல்வியில் சிறந்து விளங்கினார். கல்கத்தா பல்கலைக்கழகத்திலும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் பொருளாதாரக் கல்வியை முடித்தார். பல்வேறு பல்கலைக்கழகங்களில் பணியாற்றினார். கல்லூரிப் பருவத்தில் வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். இருப்பினும், தன்னம்பிக்கையுடன் செயல்பட்டார்; உலகே வியக்கும் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கினார். 'ஹோம் இன் தி வேர்ல்ட்' என்பது இவரது தன்வரலாற்று நூல் ஆகும். இந்நூலில் இவர் உலகையே தன் வீடாகப் பார்ப்பதாகத் தெரிவிக்கிறார்.

1943ஆம் ஆண்டு வங்க தேசத்தில் ஏற்பட்ட பஞ்சத்தால் மக்கள் கடுமையான துயரங்களைச் சந்தித்தனர். இது அமர்த்தியா சென்னிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதனால், வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களை மையப்படுத்தித் தமது வளர்ச்சிப் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கினார். அவை அடித்தட்டு மக்களின் நிலையிலிருந்து பொருளாதார இடரை அணுகும் நோக்கையும் போக்கையும் உருவாக்கின.

சந்தைப் பொருளாதாரத்தின் தீமைகளை எதிர்த்துப் போராடுபவர் அமர்த்தியா சென். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இவரது ஆய்வு நெறியாளராக இருந்த மாரிஸ் டாப்பைப் பின்பற்றியே தன் ஆய்வுகளை ஜனநாயக அடிப்படையில் நோக்குகிறார். மக்கள் பிரச்சினைகள் இன்றுள்ள ஜனநாயக அமைப்புகளின் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கையும் ஆர்வமும் கொண்டவர். பொருளாதாரம் குறித்த இவரது ஆய்விற்காகப் பல நாடுகளுக்குச் சென்று அந்நாடுகளின் பொருளாதாரம் குறித்த கொள்கைகளையும் அதன் செயற்பாடுகளையும் நேரில் கண்டறிந்தவர். இதன் பின்னரே தன்னுடைய வளர்ச்சிப் பொருளாதாரக் கோட்பாட்டை உருவாக்கினார்.

பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படைக் கல்வி மிகவும் அவசியமான ஒன்றாகும். அடிப்படைக் கல்வி அறிவு இல்லாமல் வளர்ச்சி உருவாதல் சாத்தியமில்லை. இதனால், உலகச் சந்தையில் போட்டியிடுவதற்குரிய நவீனத் தொழில்களை வளர்ப்பதும் சாத்தியமில்லை. தென்கொரியா, சிங்கப்பூர், ஹாங்காங், தாய்லாந்து ஆகிய நாடுகள் நவீனத் தொழில் வளர்ச்சியில் வெற்றிகரமாக முன்னேறியதற்கான முக்கியக் காரணம், அவர்களது கல்வி முறையே என்கிறார்.

ஒரு நாடு வறுமை ஒழிப்பு, சுகாதாரம், உடல்நலம், நிலச்சீர்திருத்தம், வேளாண்மை, கல்வி முதலானவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், அது சார்ந்த வளர்ச்சித் திட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறார். இவற்றைத் தவிர்த்து உலகமயமாக்கலில் மட்டும் தீவிரமாக இருந்தால், அந்த நாடு தனக்குத்தானே பெரும் பிரச்சினைகளை உருவாக்கிக்கொள்கிறது என்று அர்த்தம் என்கிறார்.

பொருளாதாரத் துறைக்கு அவர் செய்த பங்களிப்பைப் பாராட்டி 1998ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அப்போது கிடைத்த பரிசுத்தொகை முழுவதையும் வைத்து 'பிரதிச்சி' என்னும் தொண்டு நிறுவனத்தைத் தொடங்கினார். பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்கு இந்நிறுவனம் உதவுகிறது. இந்திய அரசும் இவர்தம் பங்களிப்பைப் பாராட்டி 1999ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கிச் சிறப்பித்தது.

## பொருள் அறிவோம்

1. நிறைவு - முழுமை
2. வகுத்தல் - வகைப்படுத்தல்
3. மேதை - அறிவாளி
4. வியத்தல் - ஆச்சரியப்படுதல்
5. பஞ்சம் - பொருள் பற்றாக்குறை

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(மாரிஸ் டாப், பாரத ரத்னா, ரவீந்திரநாத் தாகூர், பொருளாதாரம், ஹோம் இன் தி வேர்ல்ட்)

1. அமர்த்தியா சென் ______________ துறைக்கான நோபல் பரிசு பெற்றார்.
2. அமர்த்தியா சென்னுக்குப் பெயர் சூட்டியவர் ______________.
3. அமர்த்தியா சென்னின் தன்வரலாற்று நூல் ______________.
4. அமர்த்தியா சென்னின் ஆய்வு நெறியாளர் ______________.
5. அமர்த்தியா சென்னுக்கு இந்திய அரசு வழங்கிய விருது ______________.

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. அமர்த்தியா சென்னின் இளமைக்காலம் குறித்து எழுதுக.
2. பொருளாதார வளர்ச்சிக்கு எது அவசியம் என்று அமர்த்தியா சென் கூறுகிறார்?
3. அமர்த்தியா சென் தாம் பெற்ற நோபல் பரிசை வைத்து என்ன செய்தார்?
4. மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் பெரும்பங்கு வகிப்பது எது?
5. வளர்ச்சிப் பொருளாதாரக் கோட்பாட்டை உருவாக்கிய முன்னோடிகளுள் ஒருவர் யார்?

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. பொருளாதார மேதை அமர்த்தியா சென் என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

## 28.4 தெரிந்துகொள்வோம்

### அணிகள்

அணி என்பதற்கு அழகு என்பது பொருள். செய்யுளில் அமைந்திருக்கும் சொல்லழகு, பொருளழகு முதலியவற்றை வரையறுத்துக் கூறுவது. செய்யுளின் கருத்தை அணிகள் அழகுபடுத்துகின்றன.

### வாழ்த்தணி

வாழ்த்துதல் – பாராட்டுதல்

இந்தத் தன்மை உடையதால் இது நிகழ்க என்று வாழ்த்துதலாகும்.

எ.கா:

மூவாத் தமிழ்பயந்த முன்னூல் முனிவாழி
ஆவாழி! வாழி அருமறையோர்! – காவிரிநாட்டு
அண்ணல் அனபாயன் வாழி! அவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை.

இதில் தமிழைத் தோற்றுவித்த அகத்திய முனிவன் வாழ்க என்றும், பசுக்கள் வாழ வேண்டும் என்றும் கூறப்படுகிறது. அரிய மறைவல்லார் வாழ வேண்டும். காவிரி ஆறு சூழ்ந்துள்ள சோழ நாட்டினை ஆட்சி புரியும் அனபாயன் வாழ வேண்டும். அவனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதியில் பெய்யும் மழையானது வாழ வேண்டும் என்கிறது.

இப்பாடலில் அகத்தியன், அரிய மறைவல்லார், அனபாயன் ஆகியோரும் பசு, மழை ஆகியனவும் வாழ்க என்று வாழ்த்துவதால் வாழ்த்தணி இடம்பெற்றுள்ளது.

இன்னார்க்கு இன்னது இயைக என்றுதாம்
முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப. (தண்டி – 33)

### தன்மேம்பாட்டு உரை அணி:

தன்மேம்பாடு – தன்னைத் தானே புகழ்ந்து உரைத்தல்.

ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து உரைப்பது தன்மேம்பாட்டு உரை அணி ஆகும்.

எ.கா:

எஞ்சினார் இல்லை எனக்கெதிரா இன்னுயிர்கொண்டு
அஞ்சினார் அஞ்சாது போய் அகல்க – வெஞ்சமத்துப்
பேராதவர் ஆகத்து அன்றிப் பிறர்முதுகில்
சாராஎன் கையில் சரம்.

வீரன் ஒருவன் தன் ஆற்றல் மிகுந்த வீரப்பண்பை வெளிப்படுத்துகிறான். போர்க்களத்தில் எனக்கு எதிராக நின்று போரிட்டு உயிருடன் திரும்பி வந்தவர் எவரும் இல்லை. என்னைக் கண்டு பயந்தவர்கள் பயம் ஏதும் கொள்ளாமல் போர்க்களத்தை விட்டுச் சென்றுவிடுங்கள். நான் எய்யும் அம்புகள் போரில் எதிர்த்து நிற்பவர்கள் மார்பில் பாயுமே தவிர, புறங்காட்டிப் பயந்து ஓடுவோர் முதுகில் பாயாது என்று தன் வீரத்தின் பெருமையை எடுத்துரைக்கிறான். எனவே, இது தன்மேம்பாட்டு உரை அணியாகும்.

"தான்தற் புகழ்வது தன்மேம் பாட்டுரை" (தண்டி – 71)

## உவமை அணி:

'சிங்கம் போன்ற நடை'

'குயில் போன்ற குரல்'

இத்தொடர்களில்,

| | | |
|---|---|---|
| சிங்கம், குயில் | - | உவமை. |
| நடப்பவர், பாடுபவர் | - | உவமேயம் |
| போன்ற | - | உவம உருபு. |

இதே போன்று ஒரு பாடலில் உவமை, உவமேயம், உவம உருபு ஆகியவை வெளிப்படையாக வர அமைவது உவமை அணி ஆகும்.

எ.கா:

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

பூமி தன்னைத் தோண்டுபவரைப் பொறுத்துக்கொள்வது – உவமை

நாம் நம்மை இகழ்ந்து பேசுபவரையும் பொறுத்துக்கொள்வது – உவமேயம்

போல - உவம உருபு

"ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை" தண்டி - 30

## எடுத்துக்காட்டு உவமை அணி:

உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் அமைந்து உவம உருபு மறைந்து வந்தால் அது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

எ.கா:

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத்து ஊறும் அறிவு.

மணற்கேணி – உவமை

மாந்தர் - உவமேயம்

உவம உருபு மறைந்து வந்துள்ளது. எனவே, இக்குறளில் எடுத்துக்காட்டு உவமை அணி வந்துள்ளது.

## பயிற்சிகள்

### அ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. தன்னைத் தானே புகழ்ந்து உரைத்தல் தன்மேம்பாட்டு உரை அணி. (சரி/தவறு)
2. உவம உருபு மறைந்து வருவது வாழ்த்தணி. (சரி/தவறு)
3. உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி. (சரி/தவறு)
4. உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் அமைந்து, உவம உருபு மறைந்து வந்தால் அது எடுத்துக்காட்டு உவமை அணி. (சரி/தவறு)
5. அணி என்பதற்கு அறிவு என்பது பொருள். (சரி/தவறு)

### ஆ) பொருத்துக.

1. தன்னைத் தானே புகழ்தல் – உவமை அணி
2. சிங்கம் போன்ற நடை – வாழ்த்தணி
3. அனபாயன் வாழ்க – தன்மேம்பாட்டு உரை அணி

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. உவமை அணி என்றால் என்ன?
2. எடுத்துக்காட்டு உவமை அணி என்றால் என்ன?
3. வாழ்த்தணி - குறிப்பு வரைக.

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. தன்மேம்பாட்டு உரை அணியை விளக்கி எழுதுக.

## 28.5 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் எழுத்துகளில் தொடங்கும் சொல்லையும் முடியும் சொல்லையும் எழுதுவோம்.**

கு — குதிரை, கழுகு

பா

தா

கா

மா

### தகவல் துளி

தமிழ்நாட்டில் கடலூரில் பிறந்த அஞ்சலையம்மாள், இந்திய விடுதலைப் போரின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற தென்னிந்தியாவின் முதல் பெண். இந்திய விடுதலைக்காகத் தமது கைக்குழந்தையுடன் சிறை சென்றார். காந்தியடிகளால் 'தென்னாட்டின் ஜான்சி ராணி' எனப் போற்றப்பட்டார். மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். தம் வாழ்நாள் முழுக்க விடுதலைப் போராட்டத்திற்காகவும் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டவர்.



**அஞ்சலையம்மாள்**
(1890 – 1961)

## 28.6 கேட்டல் கருத்தறிதல்

### சீனிவாச இராமானுஜன்

ஈரோட்டில் பிறந்து உலகம் போற்றும்படி கணிதத்துறையில் உச்சம் தொட்டவர் சீனிவாச இராமானுஜன். சிறு வயது முதல் கணிதம் மீது மிகுந்த ஈடுபாடுகொண்டவர். கணிதம் தொடர்பான நூல்களைப் படிக்க வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால், நூல்களை வாங்குவதற்குப் போதிய பணம் இல்லை. எனவே, கணித நூல்கள் யாரிடமெல்லாம் உள்ளன எனத் தேடி அறிந்துகொண்டு நூல்களை இரவல் வாங்கிப் படித்தார்.

இலண்டனில் உள்ள பிரபலக் கணித அறிஞர் ஹார்டிக்கு, தம்முடைய கணிதத் தேற்றங்கள் சிலவற்றையும், அவரிடம் மாணவராகச் சேர்ந்து பயில்வதற்கான விருப்பத்தையும் கடிதம் மூலம் எழுதினார். அக்கடிதத்தின் வாயிலாக இவருக்கு இலண்டன் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. பல்வேறு கட்டுப்பாடுகளைக் கடந்தே அவர் இலண்டன் சென்று வந்தார்.

உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார் இராமானுஜன். அப்போது அவரைப் பார்க்க வந்த ஹார்டி, தாம் வந்த மகிழுந்தின் பதிவு எண்ணான 1729 என்பதைக் குறிப்பிட்டு, அந்த எண் எந்த விதத்திலும் தனித்துவமான எண் அல்ல» என்று நொந்துகொண்டார். இராமானுஜன் ஒரு நொடிகூட யோசிக்காமல், "1729 மிகச் சிறப்பான எண்" என்று சொல்லி, அந்த எண்ணின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். கடைசி மூச்சு வரை எண் கணிதவியலைப் பற்றியே எண்ணிவந்த இராமானுஜனின் நினைவாக 1729 என்பது 'இராமானுஜன் எண்' என்று அழைக்கப்படுகிறது. இவரிடம் இருந்த கணித அறிவின் காரணமாக 'கணித மேதை இராமானுஜன்' என்று உலகமே போற்றுகிறது.

## வினாக்கள்

1. கணித மேதை என அழைக்கப்பட்டவர் யார்?
2. ஹார்டிக்கு இராமானுஜன் எதற்காகக் கடிதம் எழுதினார்?
3. இலண்டன் செல்ல இராமானுஜனுக்கு உதவியவர் யார்?
4. சீனிவாச இராமானுஜன் யாருக்குக் கடிதம் எழுதினார்?
5. சீனிவாச இராமானுஜன் எண் எனக் கூறப்படுவது எது?

## 28.7 மொழிபெயர்ப்போம்

அமர்த்தியா சென் இந்தியப் பொருளாதார நிபுணர். இவர் 1998 ஆம் ஆண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசைப் பெற்றார். பொருளாதாரம் தொடர்புடைய துறைகளில் ஏராளமான மாற்றங்களைக் கொண்டுவந்து, புரட்சிகரமான சிந்தனை முறைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் இவர் சவால் விடுத்தார்.

---

---

---

## 28.8 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கலங்கரைவிளக்கம் | – | Lighthouse |
| 2. | வசனம் | – | Prose |
| 3. | சிறுகதை | – | Short Story |
| 4. | கோட்பாடு | – | Theory |
| 5. | தன்வரலாறு | – | Autobiography |
| 6. | பஞ்சம் | – | Famine |
| 7. | துயரம் | – | Sorrow |
| 8. | ஜனநாயகம் | – | Democracy |
| 9. | சுகாதாரம் | – | Sanitation / Hygiene |
| 10. | உலகமயமாக்கல் | – | Globalization |
| 11. | சட்டமன்றம் | – | Legislative Assembly |
| 12. | உறுப்பினர் | – | Member |
| 13. | போராட்டம் | – | Struggle |
| 14. | முன்னேற்றம் | – | Progress |
| 15. | கணிதம் | – | Mathematics |
| 16. | கட்டுப்பாடு | – | Restriction |
| 17. | நினைவு | – | Memory |

## 28.9 உயர்நிலைத்திறன்

உங்களுக்குப் பிடித்த ஆளுமை ஒருவர் எழுதிய புத்தகத்தின் சுருக்கத்தை ஒரு பக்க அளவில் எழுதி வருக.

## 28.10 செயல் திட்டம்

உங்களுக்குப் பிடித்த ஆளுமை ஒருவரிடம் நீங்கள் கேட்க விரும்பும் பத்துக் கேள்விகளைத் தொகுத்து வரைவு மின்னஞ்சல் உருவாக்குக.

## 29.1 பேசுவோம்

பாடம்
29



### கலந்துரையாடுவோம்

உங்கள் நண்பரிடம் உங்களுக்குப் பிடித்த பண்புநலன் குறித்தும், அதனால் உங்களிடம் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும் வகுப்பு நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 29.2 படிப்போம்

### நான்மணிக்கடிகை

மனிதகுலத்தின் மேம்பட்ட நிலையே மனிதநேயப் பண்பாகும். மனிதநேயம் என்பது சொல்லப்படுவதன்று; செய்யப்படுவது. தாம் செய்வது மட்டுமல்லாமல் பிறரையும் செய்யத் தூண்டுவது. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வது. மற்றவர் துன்புறுதலைக் கண்டு இரக்கம் கொண்டால் அறம் வெல்லும் என்று சொல்லும் விளம்பி நாகனாரின் பாடலைக் காண்போம்.

வைததனால் ஆகும் வசையே, வணக்கமது
செய்ததனால் ஆகும் செழுங்கிளை – செய்த
பொருளினால் ஆகுமாம் போகம், நெகிழ்ந்த
அருளினால் ஆகும் அறம்.

- விளம்பி நாகனார்

### பாடலின் பொருள்

தீயசொல் பேசினால் பகை உண்டாகும். வணங்கினால் (மதித்து நடந்தால்) உறவு அதிகமாகப் பெருகும். பொருளைக் கொடுத்தால் இன்பம் பெருகும். பிற உயிர்கள் மீது இரக்கம் காட்டினால் (மனிதநேயத்துடன் நடந்துகொண்டால்) அறம் உண்டாகும்.

### நூலைப் பற்றி

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நான்மணிக்கடிகை. பாடல் ஒவ்வொன்றிலும் நான்கு மணியான கருத்துகள் சொல்லப்படுவதால் இப்பெயர் பெற்றது. இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாவால் ஆனது. இதன் ஆசிரியர் விளம்பி நாகனார்.

## பொருள் அறிவோம்

1. வைதல் – தீயசொல் பேசுதல்
2. வசை – பகை
3. கிளை – உறவினர்
4. போகம் – இன்பம்
5. அருள் – இரக்கம்

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புவோம்.

(இரக்கம், நான்மணிக்கடிகை, பதினெண் கீழ்க்கணக்கு, வசையே, விளம்பி நாகனார்)

1. நான்மணிக்கடிகை ______________ நூல்களில் ஒன்று.
2. அருள் என்பதன் பொருள் ______________.
3. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் பெயர் ______________.
4. வைததனால் ஆகும் ______________ வணக்கமது செய்ததனால் ஆகும் செழுங்கிளை.
5. நான்கு மணியான கருத்துகள் கூறும் நூல் ______________.

### ஆ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. மனிதநேயம் என்பது சொல்லப்படுவதன்று; செய்யப்படுவது. (சரி/தவறு)
2. 'வைதல்' என்ற சொல்லின் பொருள் 'பழி' ஆகும். (சரி/தவறு)
3. தீய சொல் பேசினால் பகை உண்டாகும். (சரி/தவறு)
4. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று நான்மணிக்கடிகை. (சரி/தவறு)
5. நான்மணிக்கடிகை வெண்பாவால் ஆனது. (சரி/தவறு)

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. எதனால் பகை உண்டாகும்?
2. நான்மணிக்கடிகை – பெயர்க்காரணம் குறிப்பிடுக.
3. இன்பம் பெருகும் வழி யாது?
4. எது அறமாகும் என்கிறார் விளம்பி நாகனார்?
5. பாடப்பகுதியிலுள்ள நான்மணிக்கடிகைப் பாடலில் அதிகமாக இடம்பெற்ற சொல் யாது?

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. 'வைததனால் ஆகும்' என்னும் பாடல் வழியே விளம்பி நாகனார் கூறும் கருத்துகளை எழுதுக.

## 29.3 படிப்போம்

### மனிதநேயர் லேமா ராபர்ட்டா குபோவீ



உலகில் மக்கள் அமைதியாக வாழ, உன்னதமான மனிதர்கள் சிலரின் தியாகமும் உழைப்பும் தேவையாகின்றன. தம் வாழ்வில் பெற்ற வலி நிறைந்த அனுபவங்களால் போராளிகளாக மாறி, மக்கள் நலனுக்காக உழைத்த, உழைத்துக்கொண்டிருக்கும் மனிதர் பலர். மனிதர்பால் நேயம்கொண்டு அவர்களின் நலனுக்காக உழைத்த மனிதநேயம் மிக்க லேமா குபோவீ அவர்களைப் பற்றி இப்பாடம் பேசுகிறது.

லேமா ராபர்ட்டா குபோவீ (Leymah Roberta Gbowee) 1972ஆம் ஆண்டு பிப்ரவரி 1 அன்று மேற்கு ஆப்பிரிக்க நாடான லைபீரியாவின் தலைநகரமான மன்ரோவியாவில் பிறந்தவர். தன்னுடைய 17ஆவது வயதில் உயர்நிலைப்பள்ளியை நிறைவுசெய்தார். அதைத் தொடர்ந்து, உயர்கல்வியைத் தொடர விரும்பினார். 1989இல் தொடங்கிய லைபீரிய உள்நாட்டுப் போரால் அவருடைய கனவு தகர்ந்தது. அவரும் அவருடைய குடும்பமும் மன்ரோவியாவை விட்டு வெளியேறும்படி ஆயிற்று. பின்னர், கானாவில் உள்ள அகதிகள் முகாமுக்குச் சென்றனர். சிறிது காலத்தில் மீண்டும் லைபீரியாவுக்குத் திரும்பினார் லேமா. அங்கு, அமைதிக்கான பெண்கள் கூட்டமைப்பில் [Women in Peace building Network (WIPNET)] பணிபுரியத் தொடங்கினார். விரைவில் அந்நிறுவனத்தின் தலைவரானார். போரால் தான் கண்ட வலியும் வேதனையும் நிறைந்த அனுபவத்தை மனத்தில் வைத்துப் பணியாற்றினார். பின்னாளில் லைபீரியாவின் அமைதிக்கான மாபெரும் அமைப்பாக அந்நிறுவனம் (WIPNET) அறியப்பட்டது.

லைபீரியாவின் உள்நாட்டுப் போருக்கு எதிராகப் பல்வேறு இனம் மற்றும் மதப் பின்னணியில் உள்ள பெண்களை அணிதிரட்டினார். அவர்களைக் கொண்டு போருக்கு எதிராக உண்ணாவிரதம், பிரார்த்தனை, அரசாங்கக் கட்டடங்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் என அறவழியில் தன் போராட்டங்களை முன்னெடுத்தார். வெண்ணிற ஆடை அணிந்து, அதிக எண்ணிக்கையில் பெண்கள் ஒன்றுகூடி இப்போராட்டங்களை நடத்தினர்.

குபோவீக்கு லைபீரியாவின் குடியரசுத் தலைவர் சார்லஸ் டெய்லரைச் சந்தித்துப் பேச வாய்ப்பு வழங்கப்பட்டது, அவரிடம், அமைதி வேண்டி மிக அழுத்தமான கருத்துகளை முன்வைத்தார். இதன் விளைவாக 2003ஆம் ஆண்டு சார்லஸ் டெய்லரும் லைபீரியாவின் எதிர்ப்பிரிவினரும் கானாவில் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இப்பேச்சுவார்த்தை உள்நாட்டுப் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கோடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குபோவீயும் லைபீரியத் தலைவர்களைப் பின்பற்றிக் கானாவுக்குச் சென்றார். அவர் நூற்றுக்கணக்கான பெண்களோடு சேர்ந்து, அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்ற இடத்தைச் சுற்றிவளைத்திருந்தார். உடன்பாடு ஏற்படும்வரை டெய்லரையும் மற்ற தலைவர்களையும் அப்பெண்கள் வெளியேற விடவில்லை.

"போரால் களைத்துவிட்டோம், ஓடுவதில் களைத்துவிட்டோம், உணவு கேட்டுக் களைத்துவிட்டோம்… எதிர்காலக் குழந்தைகளாவது போர்களற்ற உலகில் வாழ வேண்டுமானால் பெண்களே ஒன்றுசேர்வோம், போராடுவோம்" என்னும் முழக்கத்தோடு களமிறங்கிய குபோவீ அம்முயற்சியில் வெற்றிபெற்றார். மேலும், பெண்கள் மாபெரும் சக்தி என்பதை அவர் உலகிற்கே உணர்த்தினார்.

போர்களுக்குப் பின்னான வெற்றிகளைக் கொண்டாடுவதில் குபோவீக்கு உடன்பாடு இல்லை. போர்கள் மனிதகுலத்தின் மீது விதிக்கப்பட்ட சாபங்கள் என்றார். போருக்குப் பின்னான அமைதி நேர்மறையான எண்ணங்களைத் தோற்றுவிப்பதில்லை. அவை காயங்களையும் வலிகளையுமே தருகின்றன. போர்கள் எங்கு நடைபெற்றாலும் அதைத் தவிர்க்க உலக நாடுகள் கூட்டாக முயல வேண்டும் என்றார்.

இவர்தம் மனிதநேயச் செயல்பாடுகளைப் பாராட்டி 2011ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இப்பரிசை மனிதநேயச் செயல்பாடுகளில் சிறப்பாகப் பணியாற்றிய எல்லன் ஜான்சன், தவகேல் கர்மனுன், சர்லீஃப் ஆகியோருடன் இணைந்து பெற்றுக்கொண்டார்.

மனிதநேயம் தழைக்க உலகெங்கும் தனிநபராகவும் குழுவாகவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குபோவீ தனியொருவராக எடுத்த முயற்சிபோல உலகம் முழுதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் உலகில் அமைதி மேம்படும், மனிதநேயம் பேணப்படும்.

## பொருள் அறிவோம்

1. உன்னதம் - சிறப்பு
2. முகாம் - தங்கும் இடம்
3. திரட்டுதல் - ஒன்று சேர்த்தல்
4. உடன்பாடு - ஒப்பந்தம்
5. பேணப்படும் - போற்றப்படும்

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(மன்ரோவியா, 1989, சார்லஸ் டெய்லர், 2011, கானா)

1. லைபீரியாவின் குடியரசுத் தலைவராக இருந்தவர் ________________.
2. லேமா குபோவீ நோபல் பரிசு பெற்ற ஆண்டு ________________.
3. லேமா குபோவீ பிறந்த நாட்டின் தலைநகர் ________________.
4. 2003இல் லைபீரிய உள்நாட்டுப் போருக்கான அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்ற இடம் ________________.
5. லைபீரியாவின் உள்நாட்டுப் போர் எந்த ஆண்டு தொடங்கியது ________________.

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. 2011ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. லேமா ராபர்ட்டா குபோவீயின் கல்வி எதனால் தடைபட்டது?
3. லைபீரியாவில் அமைதிக்கென அறியப்பட்ட மாபெரும் நிறுவனம் எது?
4. போர் பற்றிய குபோவீயின் முழக்கம் யாது?
5. லேமா குபோவீ உலகுக்கு உணர்த்திய செய்தி யாது?

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. மனிதநேயர் குபோவீ என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

## 29.4 தெரிந்துகொள்வோம்

### குறியீடு – படிமம் – தொன்மம்

புலவர் தாம் இயற்றும் பாடல்கள் சிறப்புற அமையப் பல்வேறு உத்திகளைக் கையாள்வர். அவற்றுள் குறியீடு, படிமம், தொன்மம் முக்கிய இடங்களைப் பெறுகின்றன. புதுக்கவிதைகளில் இவ்வகை உத்திகள் மேலோங்கி நிற்கின்றன.

### குறியீடு

சொல்ல வந்த கருத்தை நேரடியாகச் சொல்லாமல் இன்னொன்றைக் கூறிக் குறிப்பால் உணர்த்துவது குறியீடாகும். குறியீடு என்பது அகம், புறம் என எல்லா வகைக் கவிதைகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

இலையுதிர்காலம் இல்லாமலேயே
உதிர்கின்ற உயர்திணை மரங்கள்

- ஈரோடு தமிழன்பன்

இக்கவிதையில் உதிர்கின்ற என்ற சொல் இறப்புக்குக் குறியீடாய் வருகிறது.

சமரச வேசமிட்ட குரங்கினிடம்
அப்பத்தைப் பறிகொடுத்த
பூனைகள் நாம்.

- அப்துல் ரகுமான்

ஏமாற்றுபவனுக்குக் குரங்கும், ஏமாறும் மக்களுக்குப் பூனைகளும் குறியீடாகும்.

### படிமம்

படிமம் என்றால் காட்சி என்பது பொருள். விளக்க வந்த கருத்தைக் காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தியே படிமம் ஆகும். இது தெளிவானதோர் அகக் காட்சியை வழங்கும் ஆற்றலுடையது.

கோவைப்பழ மூக்கும்
பாசிமணிக் கண்ணும்
சிவப்புக்கோட்டுக் கழுத்தும்
வேப்பிலை வாலும்

- ந.பிச்சமூர்த்தி

இக்கவிதையில் 'கிளி' காட்சிப்படுத்தப்படுகிறது.

இன்னும்
உடையாத ஒரு
நீர்க் குமிழி
நதியில் ஜீவிக்க
நழுவுகிறது.

- பிரமிள்

இக்கவிதைகளைப் படிக்கும்போதே மனதில் காட்சி தோன்றுகிறதல்லவா!

## தொன்மம்

தொன்மம் என்றால் பழங்கதை அல்லது புராணம் என்று பொருள். கவிதையில் பழங்கதை, வரலாறு, இதிகாசம், புராணத்தைத் துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவதாகத் தொன்மம் அமைகிறது.

'இவன் சரியான சகுனி'

இங்கு சகுனி என்பது சூழ்ச்சியைத் தொன்மைப்படுத்துகிறது.

'நீ என்ன கர்ணனா?'

இங்கு கர்ணன் என்பது வள்ளல் தன்மைக்குத் தொன்மமாக அமைகிறது.

'அவன் பெரிய அரிச்சந்திரனா?'

இங்கு அரிச்சந்திரன் என்பது வாய்மைக்குத் தொன்மமாக அமைகிறது.

உன்மனம் ஒரு பாற்கடல்
அதைக் கடைந்தால்
அமுதம் மட்டுமல்ல
ஆலகாலமும் வெளிப்படும் என்பதை
நீ அறிவாய் அல்லவா?

- அப்துல் ரகுமான்

இக்கவிதையில் பாற்கடல், அமுதம், ஆலகாலம் ஆகியன தொன்மங்கள்.

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நாரதர் வருகிறார். இங்கு வெளிப்படும் தொன்மம் எதைக் குறிக்கிறது?

அ) வள்ளல் ஆ) வீரன்

இ) அறிவாளி ஈ) கலகக்காரன்

2. தொன்மத்திற்குப் பொருந்தாத ஒன்றைத் தேர்க.

அ) கொடுப்பதில் கர்ணன் ஆ) வாய்மையில் அரிச்சந்திரன்

இ) வில்லில் அர்ச்சுனன் ஈ) பேச்சில் பெரியவன்

3. படிமம் என்பதன் பொருள்

அ) குறிப்பு ஆ) காட்சி

இ) புராணம் ஈ) இதிகாசம்

4. வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக? – இந்தக் கவிதையில் இடம்பெற்றுள்ள குறியீடும் பொருளும்.

அ) வரம் - தவம் ஆ) வரம் - சாபம்

இ) வரம் - திட்டம் ஈ) வரம் - முனிவர்

5. குறியீடுகளைப் பொருத்துக

அ) சிங்கம் - நீதி

ஆ) தராசு - நன்றி

இ) புறா - வீரம்

ஈ) நாய் - சமாதானம்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. குறியீடு என்றால் என்ன?

2. படிமம் - குறிப்பு வரைக.

3. தொன்மம் விளக்குக.

4. படிமத்தைப் பயன்படுத்தி ஒரு வாக்கியம் அமைத்திடுக.

5. பேச்சுவழக்கில் தொன்மம் வெளிப்படும் இரண்டு தொடர்களை எழுதுக.

## 29.5 கருத்துவிளக்கப்படம்



தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை – 600025

நடத்தும்

நவீன காலத் தமிழ்க் கணினியின் வளர்ச்சியும் அதன் புதிய நுட்பங்களும்

ஆசிரியர் திறன் மேம்பாட்டு இணையவழிப் பயிலரங்கம்

(24.08.2023 முதல் 30.08.2023 வரை ஏழு நாள்கள் – இந்திய நேரப்படி காலை 11:00 முதல் 12:30 மணி வரை)

வாழ்த்துரை

இயக்குநர், த.இ.க.

கருத்தரங்கில் பேசப்படும் தலைப்புகள்

| நாள் | தலைப்புகள் |
|---|---|
| 24.08.2023 | கணினி மொழியியலில் இலக்கணம், மொழியியல் துறைகளின் பங்கு |
| 25.08.2023 | உலகெங்கும் கணினித் தமிழின் தற்போதைய போக்கு |
| 26.08.2023 | கணினித் தமிழுக்குப் பயன்படும் உருபனியல் கூறுகள் |
| 27.08.2023 | தமிழ் நூல்களுக்கு ஏற்றவாறு use case தேவைப்படும் கூறுகள் |
| 28.08.2023 | கல்வெட்டுத் தமிழுக்கு முழுமையான இலக்கணக் குறிப்புடன் விரிதர வினை உருவாக்குதல் |
| 29.08.2023 | தமிழ் சார்ந்த கணினிப் பொறுமையியல் |
| 30.08.2023 | தமிழ் மின் நூலகம் சவால்களும் வாய்ப்புகளும் |

பயிரங்கத்தில் பதிவு செய்வதற்குக் கீழே உள்ள இணைப்பைச் சொடுக்கவும்
https://forms.gle/DGCCb3yF8Fb8316x8

### வினாக்கள்

1. பயிலரங்கத்தை நடத்திய நிறுவனம் எது?
2. எதன் வாயிலாகப் பயிலரங்கம் நடத்தப்பட்டது?
3. பயிலரங்கம் எத்தனை நாள்கள் நடைபெற்றது?
4. பயிலரங்கத்தின் தலைப்பு என்ன?
5. பயிலரங்கத்தில் பேசப்பட்ட தலைப்புகள் என்னென்ன?

## தகவல் துளி

### உலக மனிதநேய நாள்

ஆகஸ்டு 19ஆம் நாளை உலக மனிதநேய நாளாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. உலகம் முழுவதும் பல நல்ல மனிதர்கள் தங்கள் உயிரையும் உடைமைகளையும் பொருட்படுத்தாமல், பிறரின் துயர் நீக்கப் போராடுகிறார்கள். அவர்களின் மனிதநேயம் மிக்க சேவையை நன்றியுடன் நினைவுகூர்வதற்காக உருவாக்கப்பட்டதே 'உலக மனிதநேய நாள்'. ஒருமுறை, ஐ.நா.வும் அதன் கூட்டு அமைப்புகளும் முக்கியமான ஒரு வேண்டுகோளை முன்வைத்தன. அதாவது, உலக அளவில் உயிர்வாழ உதவி வேண்டி, 13 கோடிப் பேர் உள்ளனர் என ஆய்வறிக்கைகள் வாயிலாகத் தெரியவருகிறது. அவர்கள் அனைவருக்கும் வாழ உலகமே ஒன்றிணைந்து உதவ வேண்டும் என்பதே அந்தக் கோரிக்கை. உலக மனிதநேய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஒரு கருப்பொருளுடன் கொண்டாடப்படுகிறது.

## 29.6 கேட்டல் கருத்தறிதல்

### ஜெயலட்சுமி

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா நடத்திய தேர்வில் வெற்றிபெற்று நாசா செல்வதற்குத் தேர்வானவர் மாணவி ஜெயலட்சுமி. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆதனக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தவர். வறுமையான குடும்பச் சூழலில், அரசுப் பள்ளியில் படித்துவந்தார். இவர் வீட்டில் சமையல் உட்பட அனைத்து வேலைகளையும் செய்துகொண்டு, சிறப்பாகப் படிப்பதுடன் மாலை நேரத்தில் கூலி வேலைக்கும் சென்று ஒற்றை ஆளாய்த் தன் குடும்பத்தையும் காப்பாற்றி வந்தார். அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் நிறுவனம் நடத்திய போட்டி ஒன்றில் வெற்றி பெற்றதையடுத்து, நாசா மையத்தைப் பார்வையிடும் வாய்ப்பைப் பெற்றார் ஜெயலட்சுமி. இவர் நாசா செல்லப் பலரும் உதவினர்.

அச்சூழலில் கிராமாலயா என்னும் தொண்டு நிறுவனம், ஜெயலட்சுமிக்குத் தேவையான உதவிகள் செய்ய முன்வந்தது. அப்போது அவர் தனக்குப் போதுமான பணம் கிடைத்துவிட்டதாகவும் ஏதேனும் உதவ வேண்டுமென நினைத்தால் அவரது குடியிருப்பில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் கழிப்பறை கட்டித்தருமாறும் கேட்டுக்கொண்டார். தான் வறுமையான, வீடற்ற சூழலில் இருந்தபோதும் தனக்குத் தேவையானதை மட்டும் கேட்காமல், ஊருக்காக வேண்டுகோள் வைத்த மாணவியைக் கண்டு அந்தத் தொண்டு நிறுவனம் வியந்தது.

கிராமாலயா நிறுவனர் தாமோதரன் என்பவரின் மேற்பார்வையில் ஆதனக்கோட்டையில் ஜெயலட்சுமி குடியிருக்கும் திருவள்ளுவர் நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 126 வீடுகளில் தலா ₹20 ஆயிரம் செலவில் 126 கழிப்பறைகளும் குளியலறைகளும் கட்டிக்கொடுத்தனர். தன்னைப் பற்றி மட்டும் நினைக்காமல் தன்னுடைய கிராமமே பயன்பெற வேண்டும் என்று முடிவெடுத்த இந்த மாணவியின் மனிதநேயம் போற்றுதலுக்குரியது.

### வினாக்கள்

1. மாணவி ஜெயலட்சுமி எங்கே செல்லத் தேர்ந்தெடுக்கப்பட்டார்?
2. ஜெயலட்சுமிக்கு உதவ முன்வந்த தொண்டு நிறுவனத்தின் பெயர் யாது?
3. ஜெயலட்சுமி முன்வைத்த கோரிக்கை யாது?
4. ஜெயலட்சுமியின் கோரிக்கையை ஏற்று எத்தனை கழிப்பறைகள் ஆதனக்கோட்டையில் கட்டித்தரப்பட்டன?
5. மாணவி ஜெயலட்சுமியின் மனிதநேயம் எப்படி வெளிப்பட்டது?

## 29.7 மொழிபெயர்ப்போம்

Humanism means helping others at times when they need that help the most; humanity means forgetting your selfish interests at times when others need your help. For being humane, one doesn't have to be a rich person. Just the intent to help others is enough.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

## 29.8 அறிந்துகொள்வோம்

1. இரக்கம் – Sympathy
2. பழி – Blame
3. உறவினர் – Relative
4. தியாகம் – Sacrifice
5. அகதி – Refugee
6. உண்ணாவிரதம் – Fasting
7. பிரார்த்தனை – Prayer
8. குடியரசுத் தலைவர் – President
9. சாபம் – Curse
10. பழமை – Myth
11. படிமம் – Imagery

12. ஆறுதல் – Consolation

13. ஐக்கிய நாடுகள் – United Nations

14. குறியீடு – Symbol

## 29.9 உயர்நிலைத்திறன்

'மனங்கள் மலரட்டும்' என்னும் தலைப்பில் இலக்கிய நயத்தோடு கவிதை ஒன்றை எழுதி வருக.

## 29.10 செயல் திட்டம்

'வீட்டுக்கு வந்த குருவி' என்ற கதையின் முதல் மூன்று வரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மும்மூன்று வரிகளைத் தொடர்ந்து, மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராக எழுதிக் கதையை நிறைவு செய்க.

ஒரு குருவியின் கீச்சிடும் சத்தம் கேட்டுக் கவிதா தன் அறையிலிருந்து வெளியே வந்து பார்த்தாள். நார்களாலும் சருகுகளாலும் தன் அழகான குடும்பத்திற்காக அது கூடு கட்டிக்கொண்டிருந்தது. அப்போது கவிதாவின் கண்டிப்பான அப்பா வீட்டிற்குள் நுழைந்தார்...

பாடம் 30

## 30.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

மனிதநேயப் பண்புடன் மற்றவர்களுக்கு நீங்கள் செய்த உதவிகள் குறித்து வகுப்பு நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 30.2 படிப்போம்

### ஆசிய ஜோதி

மானுடம் என்பது நாடு, மொழி, இனம் ஆகியவற்றைக் கடந்த மனித இனத்தின் பண்புகளையும் மாண்புகளையும் உள்ளடக்கியது. மானுடத்தின் சிறப்பே மனிதநேயமாகும். உலகம் அமைதியுடனும் அழகுடனும் திகழ மனிதநேயப் பண்பு இன்றியமையாததாகும். பிறப்பால் உயர்வு தாழ்வு கூடாது என்ற மனிதநேயப் பண்பை 'ஆசிய ஜோதி' வழியே கவிமணி உணர்த்துகிறார்.

இடர் வரும்போதும் – உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர்போல் – மாந்தர்
உறவு கொள்வர் அப்பா (பாடல் – 93)

ஓடும் உதிரத்தில் – வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் – சாதி
தெரிவ துண்டோ அப்பா (பாடல் – 94)

எவர் உடம்பினிலும் – சிவப்பே
இரத்தம் நிறமப்பா
எவர்விழி நீர்க்கும் – உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா (பாடல் – 95)

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டும் அப்பா (பாடல் – 97)

- கவிமணி தேசிக விநாயகனார்

### பாடலின் பொருள்

துன்பம் வருகிறபோதும் மற்றவருக்காக உள்ளம் இரங்கிடும்போதும் உடன்பிறந்தவர் போன்று மனிதர் உறவுகொள்வர். உடலில் ஓடும் இரத்தத்திலும் மக்கள் சிந்தும் கண்ணீரிலும் சாதி தெரிவது கிடையாது. எவர் உடம்பிலும் இரத்தம் சிவப்பு நிறமே. எவருடைய கண்ணீரும் உவர்ப்பே. பிறப்பின் அடிப்படையில் உலகில் யாருக்கும் பெருமை வராது. வாழ்வில் சிறக்க வேண்டுமென்றால் நல்ல செயல்கள் செய்ய வேண்டும். மனிதர்களுக்கிடையே பிறப்பு, சாதி, மதம் முதலியவற்றால் வேறுபாடுகள் இல்லாது சமத்துவம் நிலவ வேண்டும் என்பதைப் புத்தரின் வாயிலாகத் தெளிவுபடுத்துகிறார் கவிமணி.

### நூலைப் பற்றி

'லைட் ஆஃப் ஆசியா' என்னும் ஆங்கில நூலைத் தழுவி கவிமணி தேசிக விநாயகனார் எழுதியதுதான் 'ஆசிய ஜோதி'. இந்நூல் புத்தரின் வரலாற்றைக் கூறுகிறது. தேசிக

விநாயகனார் தேரூரில் பிறந்தவர். இவர் கவிமணி என்று அழைக்கப்படுகிறார். 'மலரும் மாலையும்', 'உமர் கய்யாம் பாடல்கள்', 'மருமக்கள்வழி மான்மியம்' போன்ற நூல்களை இயற்றியுள்ளார். கவிமணியின் புகழைப் போற்றும் வகையில் இந்திய அரசு இவரின் புகைப்படத்தை அஞ்சல்தலையாக வெளியிட்டுள்ளது.

## பொருள் அறிவோம்

1. இடர் – துன்பம்
2. மாந்தர் – மனிதர்
3. உதிரம் – இரத்தம்
4. செய்கை – செயல்

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தேசிக விநாயகனார் பிறந்த ஊர் எது?

   அ) புதூர் ஆ) தேரூர் இ) கரூர் ஈ) சேலம்

2. வாழ்வு எதன் அடிப்படையில் சிறக்கும் என்று கவிமணி கூறுகிறார்?

   அ) பிறப்பு ஆ) மதம் இ) இனம் ஈ) செயல்

3. 'ஆசிய ஜோதி' யாருடைய வரலாற்றைக் கூறுகிறது?

   அ) புத்தர் ஆ) இயேசு இ) நபிகள் நாயகம் ஈ) அருகன்

4. உதிரம் என்பதன் பொருள்

   அ) துன்பம் ஆ) இரத்தம் இ) தோல் ஈ) வியர்வை

5. தேசிக விநாயகனார் புகழைப் போற்றும் விதமாக இந்திய அரசு என்ன வெளியிட்டது?

   அ) சிலை ஆ) நாணயம் இ) அஞ்சல் தலை ஈ) புத்தகம்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. 'ஆசிய ஜோதி' எந்த நூலைத் தழுவி எழுதப்பட்டது?
2. எப்போது மனிதர் உடன்பிறந்தவர் போன்று நடப்பர்?
3. கவிமணி எழுதிய நூல்களுள் மூன்றினை எழுதுக.
4. கவிமணியின் புகழைப் போற்றும் விதமாக இந்திய அரசு என்ன வெளியிட்டது?

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. 'ஆசிய ஜோதி' வழியே மனிதநேயப் பண்பு குறித்துக் கவிமணி கூறுவன யாவை?

## 30.3 படிப்போம்

### வள்ளுவர் காட்டும் மனிதநேயம்

மனிதர்கள் தங்களுடைய சகமனிதர்களிடம் காட்டும் அன்பின் வெளிப்பாடே மனிதநேயமாகும். தம் சுற்றத்தார், நண்பர்களோடு மட்டுமல்லாது எல்லா உயிர்களிடத்தும் அன்புகாட்டுவதை மனிதநேயம் வலியுறுத்துகிறது. அவ்வாறு மனிதநேயத்துடன் வாழ்பவர்களால்தான் இவ்வுலகம் இன்றும் நிலைபெற்று இயங்கிக்கொண்டிருக்கிறது. எல்லா உயிர்களிடத்தும் அன்புகொண்ட வள்ளுவர் தன் படைப்பில் மனிதநேயக் கருத்துகளை ஆழ விதைத்துள்ளார். அவற்றுள் சிலவற்றை இப்பாடம் கோடிட்டுக்காட்ட விழைகிறது.

**அன்பின் வழி**

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு (80)**

என்ற குறளில், அன்பின் வழி நடப்பதன் சிறப்பை எடுத்துரைக்கிறார். அன்பின் அடிப்படையில் இயங்குவதுதான் உயிருள்ள உடலாகும்; அன்பு இல்லை என்றால் இந்த உடல் வெறும் எலும்பின் மேல் தோலைப் போர்த்தியது போன்றதாகும் என்கிறார்.

**பகுத்துண்டு வாழ்தல்**

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை (322)**

என்ற குறளில், தன்னிடம் உள்ளதைப் பிற உயிர்களுடனும் பகிர்ந்துண்ண வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். இருப்போர் இல்லாதோர் என்றில்லாமல் கிடைத்ததைப் பகிர்ந்துகொண்டு, எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலைக் கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை. இது அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

**பகைவரிடத்தும் பண்புடன் நடத்தல்**

**ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்**
**பொறுத்தாற்றும் பண்பே தலை (579)**

என்ற குறளில், உற்றார் உறவினர் நண்பர்களிடத்தில் மட்டுமல்லாமல், பகைவரிடத்திலும் பண்புடன் நடக்க வேண்டும் என்கிறார். தன்னை அழிக்க நினைத்திடும் இயல்பு கொண்டவரிடத்திலும் பொறுமை காட்டுவது மிக உயர்ந்த பண்பாகும் என்கிறது இந்தக் குறள்.

**தன்நோய் போல் காத்தல்**

**அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போல் போற்றாக் கடை (315)**

என்ற குறளில், பிறருடைய துன்பத்தை எப்படிப் பார்க்க வேண்டுமெனச் சொல்கிறார். பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தைத் தம் துன்பம்போல் கருதிக் காப்பாற்ற முனைய வேண்டும். அப்படிச் செய்யாதவர்களுக்கு அறிவு இருந்தும் அதனால் எந்தப் பயனுமில்லை என்கிறார்.

**ஒருமைப்பாடு**

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான் (972)**

**எ**ன்ற குறளில், மனிதநேயம் குறித்த உலகளாவிய பார்வையாக உள்ளது. பிறப்பால் அனைவரும் சமம் என்றும் செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே அவர்களிடம் வேறுபாடு காண முடியும் என்றும் சொல்கிறார்.

**இன்சொல் பேசுதல்**

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் (91)**

என்ற குறளில், ஒருவர் தன்னைச் சுற்றி வாழும் நபர்களுடன் பேசும் சொல் எப்போது இனிமையான சொல்லாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்கிறார். செம்மையான அறங்களை அறிந்த அறவோர்களின் வாய்ச்சொற்கள் இனிய சொற்களாய், அன்பு கலந்ததாய், வஞ்சம் இல்லாததாய் இருக்கும்.

**அருளுடைமை**

**அல்லல் அருள்வார்க்கு இல்லை வளிவழங்கும்**
**மல்லன்மா ஞாலங் கரி (245)**

என்ற குறளில், அருள் உடையவர்க்கு இவ்வுலகில் துன்பம் வராது என்றும், இதற்குக் காற்று உலவும் வளம் மிக்க இந்தப் பேருலகமே சான்று என்றும் கூறுகிறார்.

வள்ளுவர் தனிமனித மேம்பாட்டுக்கும் சமூக மேம்பாட்டுக்குமான பல உயர்ந்த கருத்துகளைத் திருக்குறளின் வழியே முன்வைக்கிறார். மனிதச்சமூகம் துன்பமின்றி நல்வாழ்வு வாழ அன்பே சிறந்த வழி என்கிறார். மனிதநேயம் தழைத்தால் உலகம் தழைக்கும், நிலைபெற்று வாழும் என்பது வள்ளுவர்தம் ஆழ்ந்த நம்பிக்கை.

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(அன்பே, அறிவு, சமம், மனிதநேயம், துன்பம்)

1. அருள் உடையவருக்கு ____________ வராது.
2. மனிதன் தன் சுற்றத்தார், நண்பர்களோடு மட்டுமல்லாது எல்லா உயிர்களிடத்தும் அன்புகாட்டுவதே ____________.
3. பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தைத் தம் துன்பம்போல் கருதாதவர்களுக்கு ____________ இருந்தும் பயனில்லை.
4. பிறப்பால் அனைவரும் ____________ என்கிறார் வள்ளுவர்.
5. மனிதச் சமூகம் துன்பமின்றி நல்வாழ்வு வாழ ____________ சிறந்த வழி.

### ஆ) பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.

1. மனிதர்கள் தம் சுற்றத்தாரோடு மட்டும் அன்பு காட்டுவது மனிதநேயம். (சரி/தவறு)
2. அன்பு இல்லை என்றால் இந்த உடல் வெறும் எலும்பின் மேல் தோலைப் போர்த்தியது என்று கூறுகிறார் வள்ளுவர். (சரி/தவறு)
3. பகைவரிடமும் நட்புடன் நடக்க வேண்டும் என்கிறது குறள் எண் 579. (சரி/தவறு)
4. மனித சமூகம் துன்பமின்றி நல்வாழ்வு வாழ செல்வம் ஒன்றே சிறந்த வழி. (சரி/தவறு)
5. மனிதநேயம் தழைத்தால் உலகம் தழைக்கும் என்பது வள்ளுவரின் நம்பிக்கை. (சரி/தவறு).

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஒருமைப்பாடு குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.
2. பகுத்துண்டு வாழ்தல் பற்றிச் சுருக்கமாக எழுதுக.
3. அன்பு குறித்துத் திருவள்ளுவர் கூறியுள்ள திருக்குறளைப் பிழையின்றி எழுதுக.
4. இன்சொல் பேசுதல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.
5. அருளுடையவருக்குத் துன்பம் வராது என்று வள்ளுவர் எதைச் சான்றாகக் கூறுகிறார்?

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. வள்ளுவர் மனிதநேயப் பண்பாளர் என்பது குறித்து விரிவாக எழுதுக.

## 30.4 தெரிந்துகொள்வோம்

### வேர்ச்சொல்

பிரிக்க இயலாத, பிற சொற்கள் உருவாகக் காரணமாயுள்ள அடிப்படையான சொல்லே வேர்ச்சொல் எனப்படும்.

எடுத்துக்காட்டாக: வளை, வளையம், வளையல், வடை, வட்டம், வட்டு, வட்டில், வடம் போன்ற சொற்கள் அனைத்துக்கும் அடிப்படையாக அமைந்திருப்பது வள் என்பதாகும். எனவே இச்சொற்களின் வேர்ச்சொல் வள் ஆகும். வேர்ச்சொற்களுடன் ஒட்டுகள் சேரும்போது பல்வேறு சொற்கள் உருவாகின்றன.

- ❖ வேர்ச்சொல் கட்டளையாகவோ, ஏவலாகவோ வரும்.
- ❖ வேர்ச்சொல்லைப் பிரிக்க முடியாது.
- ❖ வேர்ச்சொல் எல்லாம் பகாப்பதமாகவே அமையும்.

ஒரு வேர்ச்சொல்லிலிருந்து பல்வேறு சொற்கள் உருவாவதை இந்த அட்டவணையில் காணலாம்.

| வேர்ச்சொல் | பெயரெச்சம் | வினை யெச்சம் | வினை முற்று | தொழில் பெயர் | அடுக்குத் தொடர் |
|---|---|---|---|---|---|
| படி | படித்த | படித்து | படித்தாள் | படித்தல் | படி படி |
| தா | தந்த | தந்து | தந்தான் | தருதல் | தா தா |
| நில் | நின்ற | நின்று | நிற்பான் | நிற்றல் | நில் நில் |
| கேள் | கேட்ட | கேட்டு | கேட்டன | கேட்டல் | கேள் கேள் |
| காண் | கண்ட | கண்டு | காண்கிறார் | காணல் | காண் காண் |

வேர்ச்சொல் வினைமுற்றாக வரும்போது திணை, பால் விகுதிகளை எவ்வாறு பெற்று வருகிறது என்பதைக் காணலாம்.

| வேர்ச்சொல் | | அசை | கல் | வில் |
|---|---|---|---|---|
| உயர்திணை | ஆண்பால் | அசைந்தான்<br>அசைகிறான்<br>அசைவான் | கற்றான்<br>கற்கிறான்<br>கற்பான் | விற்றான்<br>விற்கிறான்<br>விற்பான் |
| | பெண்பால் | அசைந்தாள்<br>அசைகிறாள்<br>அசைவாள் | கற்றாள்<br>கற்கிறாள்<br>கற்பாள் | விற்றாள்<br>விற்கிறாள்<br>விற்பாள் |
| | பலர்பால் | அசைந்தனர்<br>அசைகிறார்<br>அசைவார் | கற்றனர்<br>கற்கின்றனர்<br>கற்பார் | விற்றனர்<br>விற்கிறார்<br>விற்பார் |

| | | | | |
|---|---|---|---|---|
| அஃறிணை | ஒன்றன்பால் | அசைந்தது<br>அசைகிறது<br>அசையும் | கற்றது<br>கற்கிறது<br>கற்கும் | விற்றது<br>விற்கிறது<br>விற்கும் |
| | பலவின்பால் | அசைந்தன<br>அசைகின்றன<br>அசையும் | கற்றன<br>கற்கின்றன<br>கற்கும் | விற்றன<br>விற்கின்றன<br>விற்கும் |

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வகுத்தனர் என்ற சொல்லின் வேர்ச்சொல்

   அ) வகுத்த  ஆ) வகு  இ) வகுப்பு  ஈ) வகுத்து

2. 'எழு' என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்த வினையெச்சச் சொல்

   அ) எழுந்தாள்  ஆ) எழுதினான்  இ) எழுது  ஈ) எழுதுதல்

3. உண் என்ற வேர்ச்சொல்லின் பலவின்பால் வடிவம்

   அ) உண்டான்  ஆ) உண்டனர்  இ) உண்டன  ஈ) உண்டது

4. அசை என்ற வேர்ச்சொல்லின் ஆண்பால் வடிவம்

   அ) அசைந்தன  ஆ) அசைகிறார்  இ) அசைந்தான்  ஈ) அசைகிறாள்

5. ஆண்டார் என்ற சொல்லின் வேர்ச்சொல் எது?

   அ) ஆள்  ஆ) ஆண்  இ) ஆல்  ஈ) ஆன்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. காண் என்னும் வேர்ச்சொல்லிலிருந்து உருவாகும் எவையேனும் நான்கு சொற்களை எழுதுக.

2. விடுபட்ட கட்டங்களை ஏற்ற சொல்லால் நிரப்புக.

| வேர்ச்சொல் | பெயரெச்சம் | வினை யெச்சம் | வினை முற்று | தொழிற்பெயர் | அடுக்குத் தொடர் |
|---|---|---|---|---|---|
| கூறு | | | | | |
| | எழுதிய | | | | |
| | | பார் | | | |
| | | | செய்வான் | | |
| | | | | நடத்தல் | |
| | | | | | நடு நடு |

## 30.5 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் தொடரைப் பிரித்து இரண்டு தொடர்களாக்குக.**

1. முத்து நன்கு படித்ததால் வாழ்வில் உயர்ந்தான்.

______________________________

2. மழை நன்கு பெய்ததால் எங்களால் விளையாட முடியவில்லை.

______________________________

3. அறநெறிகளைக் கூறும் நூல்களைக் கற்றுப் பின்பற்ற வேண்டும்.

______________________________

4. மாணவர்கள் தாம் படித்த கருத்துகளைத் தாமே சொல்லிப் பார்த்து, பரிமாறிக்கொண்டார்கள்.

______________________________

5. சாலை விதியை மதித்து, வீதியைக் கடந்துசெல்வோம்.

______________________________

### தகவல் துளி




தமிழ்நாட்டின், நெல்லை மாவட்டம் கூந்தன்குளம் கிராம மக்கள் பறவைகள் அமைதியாக வாழ்வதற்காகத் தங்கள் கிராமத்தில் எந்த விழாவையும் கொண்டாடாமல் உயிர்நேய மனப்பான்மையோடு இருந்துவருகின்றனர். கூந்தன்குளம் கிராமத்தில் அதிக அளவில் பறவைகள் வந்துசெல்வதால் இந்தக் கிராமத்தைப் பறவைகள் சரணாலயமாக அரசு அறிவித்தது. வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளிலிருந்து பல வகையான பறவை இனங்கள் கூந்தன்குளம் கிராமத்தில் உள்ள மரங்களில் கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துச் செல்கின்றன. தங்களது கொண்டாட்டங்களால் அப்பறவைகளை அச்சுறுத்தக் கூடாது என்ற எண்ணத்தில் இக்கிராம மக்கள் தீபாவளி உள்ளிட்ட அனைத்து விழாக்களையும் கொண்டாடுவது இல்லை.

## 30.6 கேட்டல் கருத்தறிதல்

### மன்னிப்பு

பாலை மணல்வெளியில் நண்பர்கள் இருவர் நடந்துபோய்க்கொண்டிருந்தார்கள். ஒருகட்டத்தில் இருவருக்குமிடையே வாதம் தொடங்கியது. அது வாய்ச்சண்டையாக மாறியது. நண்பனின் கன்னத்தில் அறைந்துவிட்டான் மற்றொருவன். அறை வாங்கியவன் கோபிக்கவில்லை. அமைதியாக ஒதுங்கிப்போய் மணலில் அமர்ந்தான். விரல்களால் இப்படி எழுதினான்: "இன்று என் உயிர் நண்பன் என் கன்னத்தில் அறைந்துவிட்டான்!" மற்றவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருவரும் நடையைத் தொடர்ந்தார்கள். வழியில் ஒரு பாலைவன ஊற்றைக் கண்டார்கள். நடந்ததை மறந்து, அந்த ஊற்றில் வெக்கை தீரக் குளிக்க ஆரம்பித்தார்கள். கன்னத்தில் அறை வாங்கியவனின் காலைத் திடீரென்று யாரோ இழுப்பது போன்ற உணர்வு. ஆஹா... புதைகுழியில் சிக்கிக்கொண்டான் அவன். நண்பனின் நிலையைக் கண்டதும், அவனைப் பெருமுயற்சி செய்து காப்பாற்றிக் கரையேற்றினான். உயிர் பிழைத்த நண்பன் ஊற்றை விட்டு வெளியில் வந்ததும், அருகில் இருந்த ஒரு கல்லின் மீது அமர்ந்தான். ஒரு கல்லை எடுத்துத் தட்டித் தட்டி எழுத ஆரம்பித்தான். "இன்று என் உயிர் நண்பன் என் உயிரைக் காப்பாற்றினான்!" இதைப் பார்த்து, "நான் உன்னை அறைந்தபோது மணலில் எழுதினாய். இப்போது காப்பாற்றியிருக்கிறேன். கல்லில் எழுதுகிறாய். ஏன் இப்படி? இதற்கு என்ன அர்த்தம் நண்பா?" என்று கேட்டான். நண்பனின் பதில், "யாராவது நம்மைக் காயப்படுத்தினால், அதை மணலில் எழுதிவிடு. மன்னிப்பு எனும் காற்று அதை அழித்துவிட்டுப் போய்விடும். ஆனால், யாராவது நல்லது செய்தால் அதைக் கல்லில் எழுது. காலத்தைத் தாண்டி அது நிலைத்திருக்க வேண்டும்!" என்றான்.

### வினாக்கள்

1. நண்பர்கள் இருவரும் எங்கே நடந்துசென்றனர்?
2. அறை வாங்கிய நண்பன் அந்த நிகழ்வை எதில் எழுதினான்?
3. நண்பர்கள் இருவரும் பாலைவனத்தில் எதில் குளித்தனர்?
4. புதைகுழியிலிருந்து மீண்ட நண்பன் கல்லில் எழுதியது என்ன?
5. மணலிலும் கல்லிலும் எதை எழுத வேண்டும் என நண்பன் கூறுகிறான்?

## 30.7 மொழிபெயர்ப்போம்

குரியாகோஸ் ஏலியாஸ் என்பவர் 150 ஆண்டுகளுக்கு முன் கேரளத்தில் ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவி, இலவசமாகக் கல்வி கற்பிக்க வழிவகுத்தவர். எவ்விதப் பாகுபாடும் இல்லாமல் அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி அறிவை ஊட்டினார். மனிதநேயம் மிக்க அவருடைய நற்பணி பாராட்டத்தக்கது.

## 30.8 அறிந்துகொள்வோம்

1. மனிதநேயம் – Humanism
2. மாந்தர் – People
3. உதிரம் – Blood
4. சமத்துவம் – Equality
5. அஞ்சல்தலை – Stamp
6. பரிமாணம் – Dimension
7. சரணாலயம் – Sanctuary
8. கொண்டாட்டம் – Celebration
9. கன்னம் – Cheek
10. வெக்கை – Heat
11. ஊற்று – Fountain
12. புதைகுழி – Sinkhole
13. காயம் – Injury
14. அர்த்தம் – Meaning
15. மன்னிப்பு – Apology
16. பாலைவனம் – Desert

## 30.9 உயர்நிலைத்திறன்

மனிதநேயப் பண்பை வலியுறுத்தும் நாடகம் ஒன்றை நான்கு காட்சிகளாக வடிவமைத்து எழுதுக.

## 30.10 செயல் திட்டம்

மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு வீடு/ அறை/ வாகனம் ஒன்றை உருவாக்கி வருக.

## மீள்பார்வை

**1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.**

(உடல்நலம், திருவள்ளுவர், விளம்பி நாகனார், மனிதநேயப் பண்பு, கொல்லிமலை)

1. உலகம் அமைதியுடனும் அழகுடனும் திகழ ________________ இன்றியமையாததாகும்.
2. அனைத்துச் செல்வங்களையும்விட உயர்ந்த செல்வம் ________________ ஆகும்.
3. கடையெழு வள்ளல்களுள் ஒருவரான ஓரி ஆட்சி செய்த மலை ____________.
4. வாழும் முறைகளை இரண்டடிக்குள் வகுத்தவர் ________________ .
5. நான்மணிக்கடிகை என்னும் நூலின் ஆசிரியர் ________________.

**2) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.**

1. 'ஆசிய ஜோதி' என்னும் நூலை எழுதியவர் கவிமணி தேசிக விநாயகம். (சரி/தவறு)
2. உரை(றை) ஊற்றி ஊற்றிப் பார்த்தும் புளிக்காத பால் அறத்துப்பால். (சரி/தவறு)
3. நான்மணிக்கடிகை ஆசிரியப்பாவால் ஆனது. (சரி/தவறு)
4. வேப்பிலையையும் துளசியையும் விரும்பி உண்டால் உடல் நலம் சிறக்கும். (சரி/தவறு)
5. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு. (சரி/தவறு)

**3) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஆசாரக்கோவை நூல் - குறித்து விளக்குக.
2. இரா. இளங்குமரன் குறிப்பு வரைக .
3. நான்மணிக்கடிகை மூலம் விளம்பி நாகனார் கூறும் அறம் சார்ந்த கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
4. வள்ளுவம் பத்து என்னும் கவிதை மூலம் கவிஞர் அறிவுமதி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
5. ஆசிய ஜோதி - குறிப்பு வரைக.

**4) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. லேமா ராபர்ட்டா குபோவீ பிறந்த ஆண்டு என்ன?

   அ) 1970 ஆ) 1972 இ) 1974 ஈ) 1976

2. இந்தியாவில் தோன்றிய மிகப்பழமையான மருத்துவ முறை எது?

   அ) அலோபதி ஆ) யுனானி இ) சித்த மருத்துவம் ஈ) ஆயுர்வேதம்

3. அமர்த்தியா சென் பிறந்த மாநிலம் எது?

   அ) மேற்கு வங்கம் ஆ) ஹைதராபாத் இ) டெல்லி ஈ) ஒடிசா

4. 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று கூறியவர் யார்?

   அ) அகத்தியர் ஆ) வள்ளலார் இ) வால்மீகி ஈ) திருமூலர்

5. இராஜேந்திர சோழன் எந்த ஆண்டு இளவரசர் பட்டம் ஏற்றார்?

   அ) கி.பி 1012 ஆ) கி.பி 1021 இ) கி.பி 1014 ஈ) கி.பி 1041

**5) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. அமர்த்தியா சென் பற்றிக் குறிப்பு வரைக.
2. பகுத்துண்டு வாழ்தல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்தை எழுதுக.
3. இராஜேந்திர சோழனின் முதல் போர் எங்கு நடைபெற்றது? அதன் மூலம் அவர் எந்த நாட்டைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தார்.
4. சித்த மருத்துவம் குறித்து விளக்குக.
5. பெண்கள் மாபெரும் சக்தி என்பதைக் குபோவீ எவ்வாறு உலகிற்கு உணர்த்தினார்?

**6) கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.**

1. நிரல்நிறை அணி என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. ஏதேனும் ஐந்து வேர்ச்சொல்லிலிருந்து உருவாகும் பல்வேறு சொற்களைப் பட்டியலிடுக.
3. குறியீடு, தொன்மம் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. வெண்பாவின் இலக்கணம் கூறிச் சான்றுடன் விளக்குக.
5. உவமை அணி மற்றும் எடுத்துக்காட்டு உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

7) **பின்வரும் நூல்களின் பெயர்களை அதனதன் ஆசிரியர் பெயருடன் பொருத்துக.**

1. மலரும் மாலையும் - அறிவுமதி
2. அன்பான இராட்சசி - இளங்குமரன்
3. ஆசாரக்கோவை - விளம்பி நாகனார்
4. தேனருவி - கவிமணி தேசிக விநாயகம்
5. நான்மணிக்கடிகை - பெருவாயின் முள்ளியார்

8) **பின்வரும் ஆங்கிலச்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.**

1. Naturopathy -
2. Agriculture -
3. Dimension -
4. Sanctuary -
5. Document -
6. Anatomy -
7. Sage -
8. Autobiography -
9. Lighthouse -
10. Fasting -

9) **கீழ்க்காணும் இலக்கிய மற்றும் கவிதைப் பாடல்களைப் பிழையின்றி எழுதுக.**

1. 'கிடந்துண்ணார்' எனத் தொடங்கும் ஆசாரக்கோவைப் பாடலை எழுதுக.
2. 'ஓடும் உதிரத்தில்' எனத் தொடங்கும் ஆசிய ஜோதியின் 95ஆவது பாடலை எழுதுக.
3. 'வேழம் வீழ்த்த' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.
4. 'வைததனால்' எனத் தொடங்கும் நான்மணிக்கடிகைப் பாடலை எழுதுக.
5. 'வேப்பிலையைத் தின்னலாம்' எனத் தொடங்கும் இளங்குமரனின் கவிதை அடிகளை எழுதுக.

10) **கீழ்க்காணும் திருக்குறளில் விடுபட்ட சொல்லைக் கண்டறிந்து நிரப்புக.**

(நாவினால், பொறுத்தல், போற்றி, பிணியும், செயல்)

1. உறுபசியும் ஓவாப் __________ செறுபகையும்
   சேராது இயல்வது நாடு.
2. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
   அற்றது __________ உணின்.
3. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
   சொல்லிய வண்ணம் __________.
4. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
   __________ சுட்ட வடு.
5. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
   இகழ்வார்ப் __________ தலை.

**11) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கு இணையான பொருளை எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | உறை ஊற்றுதல் | - | 6. | கைப்பு | - |
| 2. | இடர் | - | 7. | நா | - |
| 3. | வசை | - | 8. | பகழி | - |
| 4. | போகம் | - | 9. | கலை | - |
| 5. | துய்க்க | - | 10. | கிளை | - |

**12) பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை எழுதுக.**

1. கூந்தன்குளம் கிராம மக்கள் எதனால் விழாக்கள் கொண்டாடுவதில்லை?
2. காந்தியடிகளால் 'தென்னாட்டின் ஜான்சி ராணி' எனப் போற்றப்பட்டவர் யார்?
3. சர்வதேச யோகா நாள் எப்போது கொண்டாடப்படுகிறது?
4. கபசுரக் குடிநீர் எத்தனை வகையான மூலிகைகளால் தயாரிக்கப்படுகிறது?
5. 'உலக மனிதநேய நாள்' எதற்காக உருவாக்கப்பட்டது?

**13) பின்வரும் உரைப்பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. Be physically active for 30 minutes most days of the week. Healthy movement may include walking, sports, dancing, yoga or running.
2. Personality traits are characteristics and qualities that help define you as a unique individual. They're often developed throughout life and may remain consistent across many situations and circumstances.
3. Humanism is an important part of life which tells that to help others, try to understand other and realize the people problems with our own eyes and try to help them.
4. Siddha medicine is one of the most ancient medical systems of India. Siddha is the mother medicine of ancient Tamils of peninsular South India. The word Siddha means established truth.
5. Poetry has been around for almost four thousand years. Like other forms of literature, poetry is written to share ideas, express emotions, and create imagery.

14) பின்வரும் விளம்பரத்தைப் படித்து, கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




**வினாக்கள்**

1. வ.உ.சி.யின் பிறந்த நாள் என்று கொண்டாடப்படுகிறது?
2. வ.உ.சி.யின் 150ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கெனச் சிறப்புப் பக்கத்தை உருவாக்கிய நிறுவனம் எது?
3. வ.உ.சி.க்காக உருவாக்கப்பட்ட சிறப்புப்பக்கத்தில் எத்தனை நூல்கள் பதிவேற்றப்பட்டுள்ளன?
4. வ.உ.சி.யின் சிறப்புப் பக்கத்திற்கான சுட்டியை எழுதுக.
5. வ.உ.சி.க்காக உருவாக்கப்பட்ட சிறப்புப்பக்கத்தில் நூல்கள் தவிர வேறு என்னென்ன ஆவணங்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளன?

15. பின்வரும் வினாவிற்கு விடை எழுதுக.

அ) அமர்த்தியா சென் போன்று உங்கள் பகுதியில் சிறந்து விளங்கிய ஆளுமையைப் பற்றி இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் கட்டுரை ஒன்றை எழுதுக.

(அல்லது)

ஆ) உடல்நலம் குறித்துப் பத்து அடிகளில் கவிதை ஒன்றை எழுதுக.

# அடிப்படை மொழித்திறன்கள்
# 17 –30 பாடங்கள், இலக்கணம், மொழிப் பயிற்சிகள்

## கேட்டல்

- கேட்டல் செயல்பாடுகளில் ஆர்வத்துடன் பங்கேற்றல். கேட்டுப் புரிந்துகொண்ட கருத்துகளை ஆராய்ந்து பார்த்தல். பகுத்துணர்தல். புரிந்துகொண்டவற்றைப் பிறருக்குத் தெளிவாகத் தொகுத்துக் கூறுதல்.

- தாம் கேட்கும் புதிய செய்திகளில் இடம்பெற்றுள்ள கருத்துகளை அடையாளம் காணுதல். குறிப்பெடுத்தல். கூடுதல் விவரங்களைக் கேட்க, விருப்பம் கொள்ளுதல்.

- கேட்டுணர்ந்த கருத்துகள் குறித்துப் பிறருடன் கருத்துப் பரிமாற்றம் செய்தல். தம் சொந்த நடையில் திறம்படப் பேசுதல். கதை, கட்டுரை, பாடல் முதலியவற்றைக் கேட்டு, அவற்றின் மையக்கருத்தை ஊகித்தறிதல்.

- இலக்கணக் கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல் (தொகைநிலை – தொகாநிலைத் தொடர்கள், வேற்றுமைத் தொகை, வழுநிலை – வழாநிலை, புணர்ச்சி விதிகள், வினை வகைகள், யாப்பிலக்கணம் - எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, அணியிலக்கணம்).

## பேசுதல்

- வரைபடங்கள், புள்ளி விவரங்கள், விளம்பரங்கள், அறிவிப்புகள் போன்ற கருத்து விளக்கப்படங்களைப் புரிந்துகொள்ளுதல். அவைசார்ந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை கூறும் திறன் பெறுதல்.

- தாம் படித்துணர்ந்த பாடல், உரைப்பகுதி, கட்டுரை முதலியவற்றைப்பற்றிக் கருத்தாடல் செய்தல்.

- தாம் அறிந்துகொண்ட புதிய செய்திகள், நிகழ்வுகள் குறித்துத் தம் சொந்தநடையில் எடுத்துரைத்தல்.

- பள்ளி நிகழ்வுகள், மன்றச் செயல்பாடுகள் போன்றவற்றில் குறிப்பிட்ட தலைப்புகளில் பேசுவதற்கான குறிப்புகள் தயாரித்தல். திறம்படப் பேசுதல்.

- எளிய இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு பேசுதல். (தொகைநிலை – தொகாநிலைத் தொடர்கள், வேற்றுமைத் தொகை, வழுநிலை – வழாநிலை, புணர்ச்சி விதிகள், வினை வகைகள், யாப்பிலக்கணம்-எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, அணியிலக்கணம்).

- பிறரோடு தயக்கமின்றித் தமிழில் பேசும் திறன் பெறுதல்.

## படித்தல்

- உரையாடல்கள், உரைப்பகுதிகள் போன்றவற்றைத் தங்குதடையின்றிப் படித்தல். படிக்கும்போது பொருளுணர்வு, குரல் ஏற்ற இறக்கம், ஒலிப்புமுறை, உரிய இடைவெளி போன்றவற்றைக் கவனத்தில் கொள்ளுதல்.

- பாடல்/கவிதை/செய்யுள் வடிவங்களைப் படித்துணர்தல். சிறு உரைப்பகுதிகள், உரையாடல்கள், கட்டுரைகள், நிகழ்வுகள் போன்றவற்றைப் படித்துத் தாம் புரிந்துகொண்ட கருத்துகளை வெளிப்படுத்துதல்.

- தாம் படிக்கும் பகுதிகளில் இடம்பெற்றுள்ள புதிய சொற்களுக்குரிய பொருளை அறிந்துகொண்டு, தம் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்.

- இலக்கணக் கருத்துகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (தொகைநிலை – தொகாநிலைத் தொடர்கள், வேற்றுமைத் தொகை, வழுநிலை – வழாநிலை, புணர்ச்சி விதிகள், வினை வகைகள், யாப்பிலக்கணம்-எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, அணியிலக்கணம்).

- பாடநூலுக்கு அப்பாற்பட்டும் தமிழ் நாளிதழ்கள், வார, மாத இதழ்கள், கதைகள், கவிதைகள், இலக்கிய நூல்கள் ஆகியவற்றைப் படிப்பதற்கு ஆர்வம் கொள்ளுதல்.

## எழுதுதல்

- பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள மொழிப்பயிற்சிகளைப் பிறர் உதவியின்றித் தானே செய்தல். மொழி விளையாட்டுப் பயிற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, அவற்றிற்குரிய விடைகளைக் கண்டறிந்து எழுதுதல்.

- கருத்து விளக்கப்படங்களைப் புரிந்துகொண்டு, அவற்றிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு வாய்மொழியாகவும் எழுத்து வடிவிலும் விடையளிக்க முயலுதல்.

- பாடல்/ கவிதை, உரைநடை, கட்டுரை, கடிதம் ஆகியவற்றின் வடிவங்களைப் புரிந்துகொண்டு, குறிப்பிட்ட தலைப்புகளில் அவற்றை எழுதப் பழகுதல்.

- இலக்கணக் கருத்துகளைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதிப் பழகுதல். (தொகைநிலை – தொகாநிலைத் தொடர்கள், வேற்றுமைத் தொகை, வழுநிலை – வழாநிலை, புணர்ச்சி விதிகள், வினை வகைகள், யாப்பிலக்கணம்-எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, அணியிலக்கணம்)

- விடுகதை/ புதிர் போன்றவற்றைப் படித்து விடை எழுதுதல்,

- உரைநடைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.

- ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுதல்.

- சிந்தனைக்கு விருந்து அளிக்கும் படைப்பாற்றல் வளர்செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுதல்.

- சொற்கள், எளிய தொடர்கள், சிறு உரைப்பகுதி ஆகியவற்றை மொழிபெயர்த்து எழுதுதல்.

- எளிய செயல்திட்டங்களை மேற்கொள்ளுதல்.

## மேலாய்வாளர் குழு

**முனைவர் மருதூர் அரங்கராசன்,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**முனைவர் மு. சுதந்திரமுத்து,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**திரு. ச. தமிழ்ச்செல்வன்,**
எழுத்தாளர், சிவகாசி.

## பாடத்திட்ட வல்லுநர் குழு

**முனைவர் ந. நடராச பிள்ளை,**
மேனாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு.

**முனைவர் ப. டேவிட் பிரபாகர்,**
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

**முனைவர் வ. தனலட்சுமி,**
இணைப்பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி & இலக்கியப் புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605014.

**திருமதி பா. மலர்விழி,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர் - 602025, திருவள்ளூர் மாவட்டம்.

## பாட ஒருங்கிணைப்பாளர் குழு

**திரு. கோ. சிவகுமார்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வடமதுரை, திண்டுக்கல் மாவட்டம் - 624802

**முனைவர் இரா. சிங்காரவேலன்,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திரு. த.ராஜன்**
உள்ளடக்க மேலாண்மை வல்லுநர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**செல்வி த. திலகவதி**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**முனைவர். ரூபாதேவி. கோ**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## மெய்ப்புத் திருத்துநர்

**திரு. ம. அமல்ராஜ்,**
பட்டதாரி ஆசிரியர், பல்லவபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி, ஜமீன் இராயப்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம்.

## புத்தக வடிவமைப்பாளர்

**திரு. ச. அசோக் குமார்,**
68, வடக்கு தெரு, எக்கியர்குப்பம், மரக்காணம் 604 303

**திரு. வே.வெண்மணிவேலன்,**
நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திரு. வே.சந்தோஷ்,**
நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## பாட ஆசிரியர் குழு

**திரு. ஏ. சக்திகுமார்,**
முதுகலைத் தமிழாசிரியர். அரசு மேல்நிலைப் பள்ளி, வழுதாவூர், விழுப்புரம் மாவட்டம் - 605502

**திரு. இரா. பிரபாகரன்,**
முதுகலைத் தமிழாசிரியர். அரசு மேல்நிலைப் பள்ளி, பொட்டிரெட்டிபட்டி, நாமக்கல் மாவட்டம்

**முனைவர் த. சாவித்ரி,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, முத்தூர், திருப்பூர்.

**திரு. தே. சிவகணேஷ்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, மிட்டூர், திருப்பத்தூர் மாவட்டம்.

**முனைவர் வ. சேகர்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வீரகனூர், சேலம் மாவட்டம்5.

**முனைவர் பெ. குணசேகரன்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, கொல்லிமலை - 637 411. நாமக்கல் மாவட்டம்.

**திரு. இரா. இராஜசேகர்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, ந.சுப்பையாபுரம், விருதுநகர் மாவட்டம்.

**முனைவர் ப. மெய்யப்பன்,**
ஆசிரியப் பயிற்றுநர், வட்டார வளமையம், நம்பியூர், ஈரோடு மாவட்டம்

**திரு. செ. முத்தரசப்பன்,**
முதுகலையாசிரியர் (தமிழ்), அரசு மேனிலைப்பள்ளி, வடுகபட்டி-625603, தேனி மாவட்டம்.

**திரு. சே. இராமநாதன்,**
தமிழாசிரியர், தி.ஐ.பள்ளி, அம்பத்தூர், சென்னை.

## தட்டச்சுக் குழு

**திருமதி சோ. ஜோதி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திருமதி கோ. கல்விக்கரசி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## ஓவியங்கள்

**திரு. கா. தனஸ் தீபக் ராஜன்,**
ஓவியர், நலன் தனஸ் ஸ்டுடியோஸ், சேலம்.

**ஜின்கேடு (GINKAD) டெக் ஆர்ட் பிரைவேட் லிமிடெட்,**
எண். 348, கம்மாளர் தெரு, கொரட்டூர், சென்னை-600080

**திரு. ரா. ராஜேஷ்,**
42/2, கண்ணகி தெரு, தளைமேடு, சென்னை-600094

## தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை – 600025.

www.tamilvu.org

978-81-977380-0-5

